
இலவச இணைப்பைக்
கேட்டு வாங்குங்கள்

கல்கி

KALKI 22.4.90 ரூ. 2.50




ஆடம்பர வில்லன்கள்!



NEW
Rexona
FOR SOFT AND GLOWING SKIN
தகதக தங்கப் பட்டுடன்
தழுவுது தங்கப் பட்டுடல்
இப்போது, தூய தேங்கா-
யெண்ணெய் வளம் செறிந்து வரும்
புதிய ரெக்ஸோனா: உங்கள் மேனிக்கு
தங்கப் பட்டுமென்மை, பட்டொளி
மெருகு, மோகனப் புதுமணம்,
புது வடிவம், உபாதானை தீர்க்கும்
அனைத்துகுண சோப் புது ரெக்ஸோனா.
புதிய
ரெக்ஸோனா
பொன்னான மென் பட்டு மேனி மெருகுக்கே.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
தூய தேங்காயெண்ணெய் செறிந்த

"தானும் செய்ய மாட்டான்; பிறரையும் செய்ய விட மாட்டான்" என்று சொல்வதுண்டு. தமிழக அரசின் சமூக நலத் துறை குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் நடந்து கொண்டிருக்கும் விதம் இதற்குச் சரியான உதாரணம். விவரமாகப் பார்ப்போம்:

சென்னை கெல்லிஸ் கார்னர் அருகில் அரசினர் குழந்தைகள் காப்பகம் ஒன்று உள்ளது. 251 அனாதைச் சிறுவர், சிறுமியர் இந்தக் காப்பகத்தில் உள்ளனர். காப்பகத்தின் உள்ளேயே முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை கொண்ட பள்ளி ஒன்று இருக்கிறது. ஆறாம் வகுப்பிலிருந்து பிளஸ் டூ வரை படிக்கும் மாணவியர் இங்கேயே தங்கிக் கொண்டு வெளியே சென்று பள்ளிகளில் படிக்கின்றனர். ஆறாம் வகுப்புக்கு மேல் மாணவர்கள் காப்பகத்தில் தங்கிப் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை. காப்பகத்தின் ஆயாக்களும் இங்கேயே தங்கியிருக்கின்றனர்.



* கெல்லிஸ் கார்னரில் உள்ள அனாதை இல்லம்...

சமூகநலத்துறையா? சமூகவிரோதத்துறையா?

இந்தக் காப்பகத்தின் பெரிய பிரச்னை, குடிநீர் பற்றாக்குறை. மற்றொரு பெரிய தொல்லை: இருப்பது ஒரே ஒரு கழிப்பிடம் தான்! 251 பேருக்கு அது எப்படிப் போதும்? மேலும் கதவில்லாத, சிறிய குளியலறை. கோணியைக் கட்டிக் கொண்டு பத்தாவது, பிளஸ் டூ மாணவிகள் சங்கடப்பட்டுக் கொண்டு குளிக்கிறார்கள்.

கழிப்பிடம் ஒன்றே ஒன்றுதான் என்பதால் ஒன்றாவது, இரண்டாவது படிக்கும் குழந்தைகள் அவசரத்திற்குச் சமையலறையின் பக்கத்திலேயே உட்கார்ந்து விடுகிறார்கள்.

மெட்ரோ வாட்டர் ஒரு தொட்டி வைத்திருக்கிறது. தினமும் அதில் தண்ணீர் நிரப்ப வேண்டும். சில நாளைக்கு அப்படி நிரப்பப்படுவதில்லை. காப்பகக் குழந்தைகளும், ஆயாக்களும், பக்கத்து வீடுகளில் தண்ணீர்ப் பிச்சை எடுத்து 'வாங்கி' க் கட்டிக் கொள்கின்றனர். காப்பகத்தில் உள்ள கைப் பம்பும் தண்ணீர் தருவதை எப்போதோ நிறுத்தி விட்டது. தண்ணீர்ப் பிரச்னையால் குழந்தைகளுக்கு சொறி, சிரங்கு வேறு.

"நல்லோர் வட்டம்' என்ற அமைப்பினர் இந்த அனாதைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் பயிற்சி கொடுக்கிறார்கள். பண்டிகைகளை இவர்களுடன் சேர்ந்து கொண்டாடுகிறார்கள். "அனாதைகள்" என்ற உணர்வு இவர்களுக்கு ஏற்படாதிருக்கத் தங்களால் முடிந்ததைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் முயற்சி எடுத்ததன் விளைவாக அண்ணா நகர் லயன்ஸ் கிளப்பினர், காப்பகத்துக்கு ஆறு கழிப்பிட அறைகள் கட்டித் தரவும் ஆழ்குழாய்க் கிணறு இறக்கித் தருவதற்கும் ஒப்புக் கொண்டுள்ளனர். இது சம்பந்தமான கடிதம், சமூகநலத் துறைக்கு அனுப்பப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிறது. இன்னும் அனுமதி கிடைக்கவில்லை! காப்பகத்தில் உள்ளவர்கள் போய்க் கேட்டால், "உங்களுக்கென்ன இவ்வளவு ஆர்வம்?" என்று கிண்டலாகக் கேட்கிறார்களாம், சமூகநலத்(?) துறையினர்.

சமீபத்தில் ஒரு விழாவில் பேசிய மாண்புமிகு அன்பழகன், "எல்லாவற்றுக்கும் அரசை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சமூகநல அமைப்புக்களும் உதவ வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

லயன்ஸ் கிளப் உதவியை உடனே பயன்படுத்தாது குழந்தைகளையும், சிறுவர், சிறுமியரையும் தவிக்க விடும் சமூகநலத் துறையின் போக்கைப் பற்றி அமைச்சர் என்ன சொல்லப் போகிறார்?

ஒன்று, சமூக நலனுக்காகச் சமூக நலத் துறை பாடுபட வேண்டும். இல்லையெனில் 'சமூகவிரோதத் துறை' என்றாவது பெயரை மாற்றி வைத்துக் கொள்ள வேண்டும்.

— ப்ரியன்

படம்: சுபா



பாலுமகேந்திரா

"வயோதிகம் பற்றிய எனது பயமே சந்தியாராகம்!"

'சந்தியாராகம்' என்ற எண்பத்து நான்கு நிமிடம் ஓடக் கூடிய பாலுமகேந்திராவின் டெலிவிஷன் படத்துக்கு, 'அகில இந்திய அளவிலான சிறந்த குடும்ப நலப் படம்' என்னும் தேசிய விருது கிடைத்துள்ளது. பாலுமகேந்திராவைச் சந்தித்த போது...

"சந்தியாராகம்" கதையின் கரு எந்தப் பின்னணியில் உங்கள் மனத்தில் உருவானது?"

"வாழ்க்கையின் நடு(வயது)ப் பகுதிக்கு வந்துவிட்ட என்னைச் சில ஆண்டுகளாகவே மரணத்தைவிட 'வயோதிகத்தைப் பற்றிய பயமே உலுக்கிக் கொண்டிருக்கிறது. சாவு என்றோ ஒருநாள் பட்டென வந்து விடுகிற விஷயம். வயோதிகம் அப்படியல்ல; அது ஒரு நீண்ட உபாதை. அந்த உபாதையைப் பற்றிய எனது பயம்தான் சந்தியாராகத்தின் கருவாகியிருக்கிறதென்று கருதுகிறேன்."

"உங்களின் முந்தைய படமான 'வீடு' (தேசிய விருதுபெற்றது) படத்தில் நடித்த அர்ச்சனாவும் சொக்கலிங்க பாகவதருமே சந்தியாராகத்திலும் இடம் பெற்றிருக்கிறார்கள். ஒருவேளை அவர்களை மனத்தில் வைத்துக் கொண்டுதான் கேரக்டர்களை உருவாக்குகிறீர்களோ?"

"அதுமாதிரியான பழக்கமெல்லாம் எனக்குக் கிடையாது. ஆனால், படத்தின் கதையை எழுதுகிற போது இவர்களைப் போட்டால்தான் இந்தப் பாத்திரங்கள் உயிர் பெறும் என்ற எண்ணம் வந்துவிடும். அந்த அடிப்படையில்தான் அவர்களைப் போட்டேன்."

"அந்தந்தப் பாத்திரங்களுக்கு ஏற்ப புது முகங்களைத் தேர்வு செய்து நடிக்க வைக்கலாமே?"

"கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு எதற்காக நெய்யைத் தேடி அலைய வேண்டும்? அர்ச்சனாவைப் பொறுத்தவரை அவரும் நானும் ஒரே சிந்தனை கொண்டவர்கள். அதனால் அவரால் எனது எதிர்பார்ப்புக்களை எளிதில் புரிந்து கொண்டு நடிக்க முடியும்."

"மூன்றாம் பிறை மாதிரியான கமர்ஷியல் படங்கள் எடுக்கும் உத்தேசமில்லையா?"

"அதுமாதிரியான பொழுது போக்குப் படங்களை இனி என்னால் எடுக்க முடியாது என்றே தோன்றுகிறது. காரணம், இன்றைய சூழ்நிலையே மிக மோசமாக மாறிவிட்டது. எடுத்தால் 'வீடு', 'சந்தியா ராகம்' மாதிரி மிகவும் உயர்மட்ட நிலையிலிருந்து எடுக்க வேண்டும். அல்லது படுமோசமான கமர்ஷியல் படமாகக் கீழிறங்கி எடுக்க வேண்டும். இந்த நிலையில், நான் முன்னதையே தேர்ந்தெடுக்க விரும்புகிறேன்."

"சொந்தப் படம் எடுக்கும் எண்ணம்

உண்டா?''

''அதற்கெல்லாம் என்னிடம் பணவசதி இல்லை. கமர்ஷியல் படத்தைக் கலைநயத்தோடு எடுக்கிறேன் என்றால் பைனான்சியரிடம் வட்டிக்குக் கூடப் பணம் வாங்க முடியாது. பிறகு எப்படி எடுக்க முடியும்? என்னைப் பொறுத்தவரை, இனி என் சிந்தனைகளுக்கு டீ. வி. தான் சிறந்த சாதனம் என்று தோன்றிவிட்டது. இனி தொடர்ந்து டீ. வி.க்காகப் படமெடுக்கவே திட்டமிட்டுள்ளேன்.''

''விருது பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு படம் எடுப்பீர்களா? விருதுகள் உங்களை எந்த விதத்தில் பாதிக்கின்றன?''

''நான் மட்டுமல்ல; யாருமே விருதுகளை எதிர்பார்த்துப் படம் எடுப்பதில்லை. ஆனால் விருதுகள் கிடைக்கிற போது — ஒட்டு மொத்தமாக இந்திய சினிமா உலகமே என்னைத் திரும்பிப் பார்க்கிற போது — அது எனக்குப் பெருமிதமாகத்தான் இருக்கிறது. மொழி, காலம் என்று அனைத்தையும் கடந்த நிலையில் மிகவும் அழுத்தமானதோர் படைப்பை வழங்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.''

''தமிழ் சினிமாவில் இளைஞர்கள் சரியானபடி சித்திரிக்கப்படவில்லையென்று நீங்கள் கூறியிருந்தீர்களே?''

''ஆமாம். இன்றைய படங்களிலெல்லாம் இளைஞர்கள் அபத்தமாகத்தான் சித்திரிக்கப்படுகிறார்கள். சந்தியாராகத்தின் மூலம் முதுமையின் பிரச்னைகளைச் சொன்ன நான், இனி, இன்றைய இளைஞர்களின் உண்மையான இயல்புகளை, அவர்களுடைய தார்மீகக் கோபங்களை, எதிர்பார்ப்புகளை, அவர்களைச் சூழ்ந்துள்ள பிரச்னைகளைப் பிரதிபலிக்கிற படம் ஒன்றை அடுத்ததாக எடுக்கத் திட்டமிட்டுள்ளேன்.''

''தற்போதைய தமிழ் சினிமா உலகில் இளைஞர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிகிறதே?''

''ஆயினும் இது மோசமானதோர் ஆதிக்கம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒளிப்பதிவு ஜிகினா வேலையில்தான் இவர்கள் பகட்டுகிறார்கள். படத்தின் கதை, காட்சி அமைப்புக்கள் மற்றும் கதை நடக்கும் சூழ்நிலைகள் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. எதற்கெடுத்தாலும் மிகையான லைட் எபெக்ட் கொடுத்துக் கைதட்டல் பெறுவதையே குறியாகக் கொண்டிருக்கிறார்கள். இது மாதிரியான ஆரோக்கியக் கேடுகள் சினிமாவில் மட்டுமல்ல; எல்லாத்துறைகளிலுமே பெருகிவிட்டன.''



சந்தியாராகம் படத்தில் ஒரு காட்சி...

''சந்தியா ராகம் தியேட்டரில் ரிலீஸ் ஆகும் சாத்தியம் இருக்கிறதா?''

''தியேட்டரிலும் வெளியாக வேண்டும் என்றுதான் 35 எம். எம்மிலும் எடுத்துள்ளேன். ஆயினும் அது, டீ. வி. யிலேயே இன்னும் திரையிடப்படவில்லையே! வரிசைப்படி, அடூர் கோபாலகிருஷ்ணனின் 'மதிலுகள்' திரையிட்ட பிறகு, சந்தியாராகம் டீ. வி. யில் ஒளிபரப்பப்படும். அதன் பிறகுதான் தியேட்டரில் வெளியிடும் வாய்ப்பு உள்ளது.''

பேட்டி: **பாரதிபாலன்**

விளம்பர வில்லன்கள்!

புகை பிடிக்கும் பழக்கம் தோன்றியது வேடிக்கையானது. சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு சர் வால்டர் ராலே என்பவர் அமெரிக்க நாட்டினை அடைந்தார். அப்போது அங்கிருந்த அமெரிக்க இந்தியர்கள் சிலர், புதராக வளர்ந்திருந்த சில செடிகளைக் கொளுத்தி விட்டு, அதிலிருந்து வரும் புகையை அனைவரும் வட்டமாக உட்கார்ந்து சுவாசித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். தாமும் சென்று சுவாசித்துப் பார்த்தார்; பிறகென்ன, உலகுக்கே அறிமுகம் செய்து வைத்து விட்டார் அந்தப் புண்ணியவான்!

இன்று அந்தப் புகையிலையை வளர்த்து, பதம் செய்து விற்பனை செய்ய ஆண்டு தோறும் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. 'இளைப்பாறுவதற்கு எங்கள் சிகரெட்டே சிறந்தது' 'எங்கள் சிகரெட் புத்துணர்ச்சியளிப்பது' என்றெல்லாம் பொய்யான விளம்பரங்களையும் கோடிக்கணக்கில் செலவு செய்து வெளியிடுகின்றனர்.

சிகரெட் விளம்பரங்கள் கவர்ச்சிகரமாக இருப்பதால், பத்திரிகைகளைப் புரட்டும் எவர் கண்களையும் இவை கவருகின்றன. அதிலும், 'ஒருவருக்காகவே உருவான இன்னொருவர்' என்ற போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அழகான தம்பதியை வெகு அந்நியோன்ய பாவத்தில், 'பொருத்தமான ஜோடி' என்று வண்ணப்படமாக வேறு வெளியிடுவார்கள்!

இந்த விளம்பரங்களில் எல்லாம், கீழே மிகச் சிறியதாக 'சிகரெட் குடிப்பது உடல் நலத்துக்குத் தீங்கானது' என்றும், அதை விடச் சிறிய எழுத்துக்களில் 'சட்டபூர்வமான எச்சரிக்கை' என்றும் அச்சிட்டிருப்பார்கள்!



பெண்களைப் புகை குடிப்பில் தள்ளும் MS சிகரெட் விளம்பரம்

விளம்பரங்கள் இப்படி வில்லனாக மாறித் தூண்டும் போது, சிகரெட் பிடிப்பதை விட்டு விட முடியுமா?

''முடியும்'' என்கிறார் பெயரிலேயே 'நண்பன்' என்ற சொல்லைத் தாங்கிய ஒருவர். இருபது பேருக்கு மேல் புகை பிடித்தலை விட்டு விடக் காரணமாயிருந்த மித்ரன் தேவநேசனைச் சந்தித்தோம். (இவரது சகோதரர், டாக்டர் சுதர்சன் தேவநேசன் கனடாவில் செயின்ட் மைக்கேல்ஸ் மருத்துவமனையில் குடும்ப மருத்துவத் துறையின் தலைவர்; புகையிலைக்கு அடிமையான பலரை மீட்டவர். அதனால் ஈர்க்கப்பட்டு இவரும் புகை பிடித்தலை நிறுத்தியவர்)

நாடக மற்றும் இலக்கியவாதியான



கெடுதலைப் பரப்ப கோடிக்கணக்கில் விளம்பரங்கள்....

மித்ரன் தேவநேசன் சொன்னார்:

''சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை விடுவதற்கு முன்பு அதுபற்றிப் பகுத்தறிந்து அலச வேண்டும். மூன்று நாளைக்குத் தொடர்ந்து எங்கே, எப்போது, எந்தச் சந்தர்ப்பத்தில் சிகரெட் பிடித்தோம் என்று குறித்து வைத்துக் கொண்டு விட்டால்,.சிகரெட் பிடிக்கிற 'பாட்டர்ன்' தெரியும். சிகரெட்டோடு தொடர்புள்ள காரியங்களை அல்லது பொருள்களைத் தவிர்ப்பது. உதாரணமாக, ஒவ்வொரு முறை போன் மணி அடித்து, பேச எடுக்கும் போதும் ஒரு சிகரெட்டை ஏற்றிக் கொள்ளுவதைப் பழக்கமாகக் கொண்ட நான், மனைவியிடம் போனை எடுத்துப் பதில் சொல்லச் செய்தேன். படுக்கை அறையில் சாதாரணமாகப் புகைப்பதில்லை என்பதால், கூடுமானவரை அதிக நேரம் படுக்கையறையில் செலவிடுவேன்; பூஜை அறையிலும் இப்படி இருப்பது சாத்தியம்...

''ஒரு குறிப்பிட்ட நாளைத் தீர்மானித்துக் கொண்டு, 'அன்றைய தேதியிலிருந்து நான் சிகரெட் பிடிப்பதை விட்டு விடுவேன்' என்று குறித்துக் கொள்ள வேண்டும். சிகரெட் பிடிப்பதில் எண்பது சதவிகிதம் தேவையற்றது; வீணுக்காகப் புகைப்பது, 'நான் ரசித்து சிகரெட் புகைப்பதில்லை' என்றுதான் பலரும் சொல்லுவார்கள். பின் விளைவுகளை உணரத் தொடங்கி விட்டால், பிறகு தொடவே தோன்றாது.

''பாத்ரூமில் சிகரெட் குடிப்பது, டீ அல்லது காப்பி குடிக்கும் போது, சிகரெட் புகைப்பது என்று பழக்கம் இருந்தால், ஒரு முறைக்கும் அடுத்த தடவைக்கும் நடுவே உள்ள இடைவெளியை அதிகரிக்க முயல வேண்டும். பதினைந்து நாட்கள் தொடர்ந்து, 'எதற்கு சிகரெட் பிடிக்கிறோம்?' என்று யோசித்துக் கொண்டே வர வேண்டும். காப்பி குடிக்கும் போது சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருந்தால், காப்பி குடிப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்!

''சில எளிய பயிற்சிகள் உதவும். ஆனால் இவை கட்டாயம் செய்யப்பட வேண்டும். ஒன்று, செல்ஃப் ஹிப்னாசிஸ் முறை. வலது — இடது. இரண்டு புறமும் இரண்டு திரைகள் இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டும். இடது திரையில், உங்கள் உருவம் சிகரெட் பிடித்துக் கொண்டு இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டும். வலது புறம் உங்கள் நுரையீரல் இருப்பதாக நினையுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக இடதுபுற இமேஜை வலதுக்குக் கொண்டு வந்து, உங்கள் கையிலுள்ள சிகரெட்டால் உங்கள் நுரையீரலை அழுத்தமாக நசுக்கிச் சூடு போடுவது போல் கற்பனை செய்து பாருங்கள். பத்துப் பன்னிரண்டு தடவை திரும்பத் திரும்பச் செய்து வாருங்கள். வெவ்வேறு விதங்களிலும் கற்பனை செய்து பார்க்கலாம். முழுக்க வறண்டு வற்றிப்



போன நுரையீரல் தெரிவது மாதிரி; சிகரெட் பிடித்தபடி காப்பி குடிக்கும் போது, காப்பி முழுதும் ரத்தமாகத் தெரிவது மாதிரி இப்படி... கண்களை மூடிக் கொண்டு இந்த ஹிப்னாஸிஸ் பயிற்சிகளைச் செய்து வர வேண்டும்.

''தொடர்ந்து சிகரெட்டைப் பிடிப்பதற்கான சூழ்நிலைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள முயல வேண்டும். யாராவது சிகரெட் நீட்டினால், 'நோ, தாங்க்ஸ்!' சொல்லுங்கள். 'நான் சிகரெட் பிடிப்பதில்லை' என்று உங்களுக்கே உறைக்



கிற மாதிரி உரக்கச் சொல்லுங்கள். பிரயாணத்தின் போது நான்—ஸ்மோக்கிங் ஏரியாவைத் தேர்ந்தெடுங்கள்.

''ப்ளஸ் பாயிண்டுகளை நினைத்துப் பார்க்க வேண்டும். சிகரெட் பிடிக்காமலிருந்தால் சேமிப்பு எத்தனை இருக்கும் என்று கணக்குப் பண்ணிப் பார்க்க வேண்டும். மற்ற போதைச் சாதனங்களைப் போலவே, நிகோடின் அடிக்ஷன் உள்ளவர்களுக்கு, சிகரெட்டை நிறுத்தும் போது எரிச்சல் கலந்த வெறுப்பு, படபடப்பு, தூக்கமின்மை எல்லாம் வரும். நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். இதனாலேயே கோடைக் காலம் தான் சிகரெட் பிடிப்பதை நிறுத்தச் சரியான சமயம். சிகரெட் புகைக்கத் தோன்றும் சமயங்களில் மிட்டாய், சூயிங்கம், பச்சை காரட் இவற்றை வாயில் மென்று கொண்டிருக்கலாம். சோடாவும் எலுமிச்சைச் சாறும் சேர்ந்த பானம் மிகச் சிறந்தது.

''காலையிலோ, மாலையிலோ நீண்ட

தூரம் வாக்கிங் போக வேண்டும். அதிக வேலைப் பளு இருக்கும் சமயத்தில், 'சிகரெட் பழக்கத்தை நிறுத்தப் போகிறேன்' என்று தீர்மானிக்கலாகாது. ஏனென்றால் அப்போது நிச்சயம் முடியாது. விடுமுறை சமயம் மிகவும் ஏற்றது. 'இன்றைக்கு நான் சிகரெட் பிடிக்க மாட்டேன்!' என்று ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்ததும் உறுதியான தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். அதைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அடுத்த நாள் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நூற்றுக்கணக்கானோர் இந்த ஒரு பயிற்சியிலேயே சிகரெட் பழக்கத்தை விட்டிருக்கிறார்கள். பணம் மிச்சமாவது மட்டுமல்ல; உடல் நலம் கூடும். காய்ச்சல், வறட்டு இருமல் வராது. எடை கூடும். பசி எடுக்கும். ருசித்துச் சாப்பிட முடியும்.

''அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் பொது இடங்களிலும், அலுவலகங்களிலும், உணவு விடுதிகளிலும் சிகரெட் புகைக்கக் கூடாது என்று தடை இருக்கிறது. அங்கே எல்லாம் சிகரெட் பிடிக்கும் பழக்கம் குறைந்து கொண்டு வருகிறது.''



லட்சுமி நாராயணன்

மருத்துவ ரீதியாக, சிகரெட் பிடிப்பது எத்தனை அபாயகரமானது என்பது பலரும் அறிந்ததுதான்.

இதய நோய் வரும் என்கிறார் இதய நோய்ச் சிகிச்சை நிபுணர்.

பிராங்க்கைடிஸ் நோய் தீவிரமாகிவிடும் என்பதும், அதனால் நுரையீரல் பாதிக்கப்படும் என்பதும், நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவர் கருத்து.

புகையிலையை எந்த உருவில் சுவைத்தாலும் கான்சர் வரும் என்கிறது அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தின் வெளியீடு. இதில் முக்கியமாக, சிகரெட் புகைப்பது, புகையிலை மெல்லுவது, பொடி போடுவது மூன்றையும் கான்சரைத் தோற்றுவிக்கும் காரணிகளாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அப்படி என்றால் சிகரெட் புகைக்காதவர்களுக்கு மட்டும், நுரையீரல் பாதிப்பதில்லையா, கான்சர் வருவதில்லையா என்று கேட்கலாம். நாமும் கேட்டோம், சென்னை காசநோய் மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவரிடம். ''சிகரெட் குடிக்காதவர்களை விட, சிகரெட் குடிப்பவர்களிடையே இந்நோய்கள் அதிகம் காணப்படும். அதில் பத்துக்கு மூன்று இருந்தால், இதில் பத்துக்கு எட்டு இருப்பார்கள்!'' என்றார் அவர்.

புகை பிடிப்போருக்கு எங்கெங்கெல்லாம் புற்றுநோய் உண்டாகும் தெரியுமா? ''தொண்டை, வாய், கன்னம், நாக்கு, இரைக்குழாய், இரைப்பை, கணையம், கல்லீரல், நுரையீரல், சிறுநீரகம், சிறுநீர்ப்பை. இவற்றில் பல இடங்களிலும் ஒரே சமயத்தில் புற்றுநோய் வரவும் வாய்ப்பிருக்கிறது'' என்கிறார் 'குறைவற்ற செல்வம்' என்னும் புத்தகத்தில் டாக்டர் எம். எஸ். வெங்கடராமன்.

தீமைகள் இத்தனை இருக்கின்றன என்று தெரிந்தும், சிகரெட் விளம்பரங்கள் செய்வது எத்தனை நியாயம்?

'ஆகில்வி அன்ட் மாத்தெர்' என்ற புகழ் பெற்ற விளம்பர நிறுவனத்தின் சென்னை அதிகாரி, லட்சுமி நாராயணனிடம், விளம்பரத் துறையின் பார்வையிலிருந்து இது பற்றிக் கருத்துக் கேட்டோம்:

''இதில் இரண்டு முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. முதலாவது, உபயோகிப்பாளரும் ஒரு பொறுப்பான, புத்திசாலியான மனிதர்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். விளம்பரப்படுத்தப்படும் பொருட்களை எல்லாம் வாங்கி விட வேண்டும் என்பது இல்லை. தனக்குத் தேவை எதுவோ, அதை, தன்னால் வாங்க முடிந்தால் மட்டுமே வாங்குகிறார்.

''இன்னொன்று: விளம்பரங்கள் சொல்லுவது எல்லாம் இன்ன பொருள்கள், இன்ன பெயர்களில், விற்பனைக்குக் கிடைக்கின்றன என்று உபயோகிப்பாளருக்குத் தெரிவிப்பதுதான். அவர் தமக்கு எது தேவை என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார். அவர் புத்திசாலி. விளம்பரத் துறை செய்வது எல்லாம் உற்பத்தியாளரையும் உபயோகிப்பாளரையும் இணைப்பதுதான்.

''பிரச்னை எங்கே வருகிறது என்றால், விளம்பரம் தவறான செய்தியைச் சொல்லும் விதத்தில் 'மிஸ்லீடிங்'காக இருக்கிறபோதுதான். இதுதான் விளம்பர தர்மத்துக்கு விரோதமானது. இம்மாதிரி விளம்பரங்களை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். தவறான விளம்பர உத்திகளையும் நாங்கள் ஆதரிப்பதில்லை.



சேவையில் வளர்ச்சி
சேவையினுல் வளர்ச்சி
சேவைக்காக வளர்ச்சி

பாரத் ஓவர்சீஸ் வங்கி லிட்.,
மார்ச் 31 1990ல் முடிவடைந்த
நிதி வளர்ச்சி ஆதாரங்களை வழங்குகிறது.

வைப்பு நிதி வளர்ச்சி	18.60%
கடன் உதவி வளர்ச்சி	23.70%
லாப வளர்ச்சி	23.90%

- இந்தியாவிலுள்ள ஒரே இணைப்புத்துறை வங்கி.
- பாங்காக்கில் (தாய்லாந்து) கிளையுள்ள ஒரே இந்திய வங்கி.
- ஏழு ஷெட்யூல்ட் கமர்ஷியல் வங்கிகளால் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் ஒரே வங்கி.

சேவையே எங்கள் வலிமை

பாரத் ஓவர்சீஸ் வங்கி லிட்.

"ஆக்ஸ்போர்டு ஹவுஸ்", அண்ணா சாலை, சென்னை- 600 006.
தொலைபேசி: 470846, 472983, 4775549.

(புள்ளி விவரங்கள் தணிக்கை செய்யப்பட உள்ளன.)

Century

''சமீபத்தில் கூட ஒரு கம்பெனி, தங்கள் சிகரெட்டுகளின் விலை குறைந்து வருவதைச் , சொல்லும் விளம்பரங்களில் ஓர் உத்தியைக் கையாண்டிருந்தது. ஒரு பெண்ணின் ஆடையின் முதுகுப்புற 'ஜிப்' கொஞ்சம் இறக்கப்பட்டிருக்கும். 'இன்னும்... இன்னும் இறங்கும்' என்ற வாசகங்கள் அதில் காணப்பட்டன. இதுபோன்ற விளம்பர பாணிகள் நிச்சயம் கண்டிக்கப்பட வேண்டியவைதான். எங்கள் நிறுவனத் தலைவர் டேவிட் ஆகில்வி சொல்லுவார்: 'உங்கள் குடும்பத்துடன் உட்கார்ந்து பார்க்க முடியாத விளம்பரங்களைத் தயவு செய்து உருவாக்காதீர்கள்!' அவரது இன்னொரு புகழ்பெற்ற அறிவுரை, 'உபயோகிப்பாளரை முட்டாள் என்று நினைத்து விடாதீர்கள்' என்பதுதான்'' என்று சமாதானம் சொல்லுகிறார் அவர்.

'Ms' என்ற பெயரில், பெண்களுக்கென்று பிரத்தியேகமான சிகரெட் இப்போது விற்பனைக்கு வந்திருக்கிறது. இது பற்றி திருமதி மாலினி சேஷாத்ரி சொன்னார்:

''இது முற்றிலும் ஆபத்தான போக்கு. இந்த நாட்டில் இதுவரை, பெண்கள் புகைப்பது என்கிற விஷயத்தில் தப்பித்து வந்திருக்கிறார்கள். இப்போது அவர்களைக் குறி வைத்து, அவர்களுக்காகவே சிகரெட் விற்பனைக்குக் கொண்டு வருவது என்பது நிச்சயம் ஆபத்தானதுதான்.

''சிகரெட் நிறுவனங்கள் பிரமாதமான விற்பனை அமைப்பை வைத்திருக்கின்றன. அவர்களுடைய வியாபார — விளம்பர உத்திகள் இளம் பெண்களை நிச்சயம் கவர்ந்திழுக்கும். நடுத்தர வயதுப் பெண்களைப் பற்றிக் கவலைப்படா விட்டாலும், கல்லூரியை விட்டு வெளிவரும் பருவத்திலுள்ள பெண்கள் நிச்சயம் பாதிக்கப்படுவர்.

''இதுவரை வெளியாகியுள்ள மருத்துவத் தகவல்களின்படி, புகைக்கும் பெண்கள், புகைக்கும் ஆண்களை விட அதிக 'ரிஸ்க்'குக்கு உள்ளாகிறார்கள். குறிப்பாகப் பிள்ளையாண்டிருக்கும் போது. இவர்களுக்குக் குழந்தைகள் குறைகளுடன் பிறக்கின்றன. புகையிலையின் நச்சு, கர்ப்பப் பையில் வளரும் சிசுவை நேரடியாகத் தாக்குகிறது. பால் கொடுக்கும் தாய்மார்கள் விஷயத்தில் இன்னும் மோசம்: புகையிலை நச்சு, தாய்ப் பாலிலும் கலக்கிறது என்று ஒரு கருத்து இருக்கட்டும்; புகைத்துக் கொண்டே பாலூட்டும் போது, வெகு அருகே இருக்கும் குழந்தையின் சின்னஞ்சிறு நுரையீரலும் புகையால் பாதிக்கப்படுகிறது. எத்தனை கொடுமை இது!

''அரசு இந்த விஷயத்தில் கடுமையாக இருக்க வேண்டும். விளம்பரங்களிலும், பாக்கெட்டுகளிலும் கொட்டை கொட்டையான எழுத்தில், சிகரெட் பிடிக்கும் பெண்களுக்கு அறிவுறுத்தும் வகையில், 'உங்களுக்கு மட்டுமின்றி உங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கும் ஆபத்து' என்று அச்சிடும்படி கட்டாயப்படுத்த வேண்டும்.

''அமெரிக்காவில் ஆர். ஜே. ஆர். என்ற நிறுவனம், கறுப்பர்களுக்கு என்று தனியாக சிகரெட் விற்பனைக்குக் கொண்டு வந்தது. அதற்குக் கறுப்பர் இனத்திலிருந்தே பலத்த எதிர்ப்பும் கண்டனமும் கிளம்பித் தாக்கவே, தார்மீக ரீதியான சுமையை கம்பெனி மீது கொண்டு வர அவர்களால் முடிந்தது. விளம்பரத்துக்கும், தயாரிப்புக்கும், விற்பனைக்கும் செய்த கோடிக்கணக்கான டாலர்கள் நஷ்டமானாலும் போகட்டும் என்று கம்பெனி வாயை மூடிக் கொண்டது.

''இங்கே பெண்களுக்கான தனிப் பத்திரிகைகள் கூட சிகரெட் விளம்பரங்களை ஏற்கின்றன என்பது கண்டனத்துக்குரியது. அது மட்டுமல்ல, பெண்களுக்கான தனி சிகரெட் விஷயத்தில், மாதர் அமைப்புகள், போதிய அளவில் எதிர்ப்புக் காண்பிக்கவில்லையே என்று வருந்தத் தோன்றுகிறது.''

சிகரெட் பிடிப்பவர் எண்ணிக்கை, நாளுக்கு நாள் இங்கே அதிகரித்து வருகிறது. வருடா வருடம் வரிகளை உயர்த்தியும், இந்தியாவின் முக்கியமான நான்கு சிகரெட் கம்பெனிகளின் விற்பனை கூடி வருவதே இந்த அபாயத்தைச் சுட்டிக் காட்டுகிறது. புகையின் தீமையை உணர்ந்த சிங்கப்பூரில், சிகரெட் விளம்பரங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன. மற்ற நாடுகளிலும் புகைக்கு எதிரான பிரசாரம் நடந்து கொண்டிருக்கிறது. மேல் நாட்டினரும் மெல்ல மெல்லப் புகைப் பழக்கத்தைக் குறைத்துக் கொண்டு வருகின்றனர். நம் நாட்டில் இவ்விஷயத்தில் விழிப்புணர்ச்சி எப்போது ஏற்படப் போகிறது?

— சாருகேசி

மேலட்டையில்:

துப்பாக்கி குண்டுக்கும் சிகரெட்டுக்கும் உள்ள பொருத்தம்:


(கானடா நாட்டுப் புற்றுநோய்க் கழக வெளியீடு)





பெப்சி கோலா பிழைக்குமா? பஞ்சாப் பெப்சி ஆகுமா!





• மாறியிருக்கிறார்

• பெயர் மாற்ற யோசனை

● மேற்கு வங்க முதல்வருக்கு இப்போதெல்லாம் தில்லியில்தான் வேலை அதிகமாம். ஜனதா தளத் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் உண்டாகி, மோதல் உருவாகும் போது, பிரதமரின் முக்கிய ஆலோசகர் ஜோதிபாசுதான். முதலில் தேவிலாலைச் சந்தித்து, பிறகு சந்திர சேகரைச் சந்தித்து, பிறகு ஜார்ஜ் பெர்னான்டஸ்..... அப்புறம் பிரச்னையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் என்று ஒருவர் விடாமல் நேரிடையாகச் சந்தித்துப் பேசுகிறாராம் ஜோதிபாசு.

● ராஜ்யசபா தேர்தலுக்குப் பிறகு மந்திரி சபையை விரிவாக்குவதாக வி.பி. சிங் சொன்னாலும் சொன்னார், தலைவலி பிடித்துக் கொண்டுவிட்டது இப்போது. முப்பது அமைச்சர் பதவிகளுக்கு ஏகப்பட்ட போட்டி. உ.பி., பீகார் மாநிலங்களிலிருந்து மட்டுமே ஏராளமான பேர் அவரை நச்சரிக்கிறார்களாம்.

● என். ஜி. ரங்கா போன்ற மூத்த தலைவர்கள் சொல்லுவதைக் கூட அலட்சியப் படுத்தி வந்திருப்பவர் ராஜீவ். இப்போது அப்படியில்லை, மாறியிருக்கிறார் என்கிறார்கள். கம்யூனிஸ்ட் உறுப்பினர் இந்திரஜித் குப்தா, பஞ்சாப் நிலவரம் சீர் அடைய எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறி முடித்தபோது, உடனே ஏதோ சொல்லத் துள்ளி எழுந்தார் ராஜீவ். வசந்த் சாத்தேயும், நரசிம்மராவும் ராஜீவைக் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்களாம். ராஜீவ் உடனே அமர்ந்துவிட்டார்!


● பெப்சிகோலா திட்டம் நிறைவேறுமா, நிறைவேறாதா? பொருளாதார விவகாரங்கள் பற்றி விவாதிக்கும் காபினட் கமிட்டியில், பிரதமர் தலைமையின் கீழ் கூடிய அமைச்சர் கூட்டத்தில், ஜார்ஜ் பெர்னான்டசும், அருண் நேருவும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் தேவிலால், மது தண்டவதே, உன்னி கிருஷ்ணன், சரத் யாதவ் ஆகியோர் ஆதரவு தெரிவித்ததாகவும் தெரிய வருகிறது. அகாலிதளத் தலைவர்கள் அத்தனை பேரும் இந்தத் திட்டத்தைக் கை கழுவி விடக்கூடாது என்று தீவிரமாகச் சொல்லி வருகிறார்கள். தேவிலாலின் யோசனை, இதற்கு 'பஞ்சாப் பெப்சி' என்று பெயர் வைக்க வேண்டும் என்பது தான்!

● எல்லா அமைச்சர்களுக்கும், தங்கள் அமைச்சகத்தை விரிவுபடுத்துவதில் ஆசை. அருண் நேரு, விவசாயத் துறையின் கீழ் வரும் மீன் துறையைத் தம் வணிகத் துறைக்கு மாற்றிக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறாராம். அதே போல, உபேந்திரா கலாசாரத் துறையை, மனிதவள மேம்பாட்டுத் துறையிடமிருந்து எடுத்துத் தமக்குக் கொடுக்க வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டிருக்கிறாராம். மாறனும், மேனகாவின் சுற்றுச் சூழல் துறை, தமது நகர்ப்புற அமைச்சகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்று கேட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள்!

● நிதித் துறையிலும், உள் நாட்டு விவகாரத் துறையிலும் உடனடியாக ஒவ்வொரு ஸ்டேட் அமைச்சர் நியமிக்கப்படலாம். மூச்சு விடவும் நேரமில்லை உபேந்திராவுக்கு. தம் துறையில் எப்போது உதவி அமைச்சர் நியமிக்கப்படப் போகிறார் என்று காத்துக் கொண்டிருக்கிறாராம்!


தொகுப்பு: **சித்தார்த்.**

• விரிவாக்க ஆசை




• சொம்பாயினி.





களைப்பும் தாகமும் உங்களை வாட்டும்போது
உங்கள் உடலுக்குத் தேவை
உடனடி சக்தி.
(வெறும் தாகம் தணிக்கும் பானம் அல்ல)
க்ளுகோன்-ஸி யில் உள்ள க்ளுகோஸ், உங்களைச் சுறுசுறுப்புடன் வைக்க உடனடி சக்தி அளிக்கிறது.
பற்கள், எலும்புகள், உடல் திசுக்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது, விட்டமின்-ஸி. அதன், ஒரு நாளைய தேவையின் மூன்றில் ஒரு பங்கை இது அளிக்கிறது.
தயாரிப்பதும் சுலபம். நாலு முழு தேக்கரண்டி க்ளுகோன்-ஸி யை குளிர்ந்த தண்ணீரிலே கலக்கவும். ஆரஞ்சுச் சுவை கொண்ட, புத்துணர்ச்சியூட்டும் பானம் தயார்.
விலையிக்க சர்க்கரை சேர்க்க தேவை இல்லை
GLUCON-C®
ஆரஞ்சுச் சுவைகொண்ட, சக்தி பானம்
க்ளுகோன்-ஸி
அருந்திய உடனே அளித்திடும் 'புத்துயிர்'
HTA 1648



டி.வி. முன்னோட்டம்— ஒரு கண்ணோட்டம்

பொதுவாக, எந்தவொரு வார இதழி லும் வழக்கமாக இடம்பெறும் அம்சங்கள் என்ன? கார்ட்டூன், தலையங்கம், தொடர் கதைகள், சிறுகதைகள், சினிமா விமர்சனம், பதில்கள்... இவை தவிர, அந்தந்த வாரத் துக்கென்று, 'டாபிக்கல்' என்று சொல்லப் படும் சிறப்புப் பேட்டிகள், கட்டுரைகள்.

இதில், இரண்டாவதாகக் கூறியதை மட் டுமே 'அடுத்த இதழில்' என்று தலைப் பிட்டுச் சில இதழ்களில் முன்னோட்டமாக வெளியிடுவார்களே தவிர, முதலில் கூறிய — அனைவருக்கும் தெரிந்த — வழக்கமான அம்சங்களை யாரும் பட்டியலிட்டு ஒவ்வொரு வாரமும் முன்னறிவிப்புச் செய் வதில்லை. அது அவசியமும் இல்லை.

தூர்தர்ஷனை எடுத்துக் கொண்டால், அதன் வழக்கமான அம்சங்கள்: கண்மணிப் பூங்கா, மனைமாட்சி, வளரும் கலைஞர், வயலும் வாழ்வும், வாழ்க்கைக் கல்வி, ஒளி யும் ஒலியும், திரைப்படம், செய்திகள், விளம் பரதாரர் அளிக்கும் தொடர்கள். இந்தப் பட்டியலில் எந்த மாற்றமும் எப்போதுமே இருப்பதில்லை. அப்படியிருக்கும் போது, நிரந்தரமாக நேரம் நிர்ணயிக்கப்பட்டுவிட்ட இந்த நிகழ்ச்சிகள் பற்றி ஒவ்வொரு வாரமும் 'முன்னோட்டம்' என்று ஒன்று எதற்கு? அது வும், 'நாளைய நிகழ்ச்சிகள்' என்கிற பெய ரில் இதே பட்டியல் தினமும் அறிவிக்கப் படும்போது?

பொதுவாக, ரசிகர்கள் ஆர்வத்தோடு தெரிந்து கொள்ள விரும்பும் ஒரே விவரம், ஞாயிற்றுக் கிழமை மாலை ஒளிபரப்பாக விருக்கும் தமிழ்த் திரைப்படம் எது என்பது தான். ஆனால், பெரும்பாலான சமயங் களில் முன்னோட்டத்தில் இதைப் பற்றி அறிவிக்கவே முடிவதில்லை. பின்னர், எதி ரொலியில் கடிதங்களுக்குப் பதில் சொல்லும் போது, இந்த இயலாமை குறித்து மழுப்பலான சமாதானங்கள் வேறு. இப்படிப்பட்ட முன்னோட்டம் எதற்கு? தூர் தர்ஷன் அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டிய விஷயம்.

நாட்டிய நிகழ்ச்சிகளைத் தேர்வு செய் யும் குழுவில் பரதநாட்டியம் பற்றிய புரிச் சயம் உள்ளவர்கள் இருக்கிறார்களா, தெரிய வில்லை. இரண்டாவது சானலில், இரு வேறு நாட்களில் இரண்டு பகுதியாக ஒளி பரப்பப்பட்ட 'லலிதா பிரபாவம்' என்ற நாட்டிய நாடகத்தைப் பார்த்த பிறகு ஏற் பட்ட சந்தேகம் இது.

'நுபுர்' தொடரைப் பார்த்து ரசித்த கண்களுக்கு இது ஒரு சரியான தண்டனை. இதில் சோகத்தை அதிகரிக்கச் செய்த விஷ யம், இந்த அமெச்சூர்த்தனமான தயாரிப் பில் ரேவதியும் ஒரு முக்கிய பாத்திரமாக இடம் பெற்றிருந்ததுதான்.

அட்டகாசமான 'அடவுக் கோவை' களோ, பளிச்சென்ற 'தீர்மான'ங்களோ, விந்யாசமான 'அபிநய'நேர்த்தியோ இல் லாமல் போனாலும் பரவாயில்லை. குறைந்த பட்சம், பரதநாட்டியத்தின் அடிப்படைத் தேவையான 'அரை மண்டி' நிலையும் ஆட் டத்தில் 'அங்கசுத்த'மும் இடம் பெற வேண் டாம்? ஒரே கசமுசா. ஆடிய பெண்களுக் கிடையே 'சிம்மெட்ரி,' 'கோவார்டினே ஷன்' போன்ற விஷயங்கள் கொஞ்சமும் இல்லை.

ரேவதி சிறந்த திரைப்பட நடிகை. நாட்டி யத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவரும் கூட. இத்தகைய தயாரிப்புக்களில் பங்கேற்கச் சம்மதிப்பது அவருக்கும் நல்லதில்லை. ரசிகர்களுக்கும் திருப்தியில்லை.

நாடாளுமன்றம் கூடும் நாட்களில் எல் லாம் தவறாமல் இடம் பெறுவது 'பார்லி மென்ட் நியூஸ்' என்கிற பத்து நிமிட அறுவை. அன்றாட மாநில, மக்களவை நிகழ்ச்சிகளின் சாரத்தை அளிக்காமல் வெறும் பெயர்ப் பட்டியலைத் தரும் பா. நி. எதற்காக? செய்தித் தொகுப்பில் இடம் பெறாத எம். பிக்களைத் திருப்தி செய் யவா?

அதைப் பார்க்கும் போது, தமிழில் ஒளி பரப்பப்படும் 'சட்டப் பேரவையில் இன்று' எவ்வளவோ தேவலாம். அதை எழுதுபவர் களுக்குப் பாராட்டுக்கள்.

எழுத்தாளர் ஒருவர் 'செய்தி ஆசிரி யர்' பொறுப்பு ஏற்ற பிறகு தமிழ் செய்தி அறிக்கையில் வித்தியாசத்தை உணர முடி கிறது. வரவேற்க வேண்டிய மாற்றம்.

— பிச்சாமி



கல்கி

1990 ஏப்ரல் 22
மலர் : 48 இதழ் : 38
பிரமோதூத சித்திரை 9



'நெகடிவ்' சிந்தனை நாட்டைக் கெடுக்கும்!

தமிழக சட்ட மன்ற பட்ஜெட் தொடரில் மனநிறைவை அளித்த ஒரு விஷயம், ''நிர்வாகத்தை மேம்படுத்த யோசனைகளைப் பொது மக்களிடமிருந்தும் அரசு வரவேற்கும்'' என்று முதல்வர் அறிவித்ததுதான். அது மட்டுமல்ல, அரசு ஊழியர்களே நிர்வாகத்தை மேம்படுத்த பல யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள் என்றும், அவற்றுள் நான்கு யோசனைகள் ஏற்கப்பட்டுள்ளன என்றும், அந்த யோசனைகளைக் கூறியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன என்றும் முதல்வர் கூறியுள்ளார். இந்த யோசனைகள், நிர்வாகத்தை மேம்படுத்துவதுடன் சிக்கனத்தைக் கையாளவும் உதவும் என்று சொல்லியிருக்கிறார். இந்த அறிவிப்பு சந்தோஷத்தை அளிக்கிறது என்றால், அரசு ஊழியர்களிடமிருந்து யோசனைகளை வரவேற்கும் திட்டம் அ. தி. மு. க ஆட்சி காலத்தில் தொடங்கியது என்பதை ஒப்புக் கொண்ட முதல்வர், அது காரணமாகவே அதனை அலட்சியப்படுத்தி விடாமல் மேலும் தீவிரமாகச் செயல்படுத்த தீர்மானித்திருப்பதாகக் கூறியதை வரவேற்று மகிழ்கிறோம்.

மேற் கூறிய எல்லாமே 'பாஸிடிவ் திங்க்கிங்' எனப்படும். இத்தகைய ஆக்க பூர்வமான சிந்தனைகள் செயலுருவம் பெறும் போதுதான் நாடு முன்னேறும். ஆனால் பெரும்பாலும் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் சரி, அவற்றுக்கு வெளியேயும் சரி, நாம் காண்பது நெகடிவ் சிந்தனைகளைத்தான். இதனால் நாடு நலிவுறும்.

ரயில் நிலையத்துக்கு மறைமலைநகர் என்ற பெயர் நமக்கு ஒப்புதல் இல்லையா, 'அதற்காக ரயில் நிறுத்தப் போராட்டம்' என்பது நெகடிவ் சிந்தனை. 'மறைமலை நகர் வாசிகள் கருத்தறிந்து செயல்படுவோம்' என்று எண்ணுவது பாஸிடிவ் சிந்தனை. அல்லது, 'வேறு ஒரு பொருத்தமான ரயில் நிலையத்துக்கு எங்கள் தலைவர் பெயரைச் சூட்டுங்கள்' என்றும் கேட்கலாம்.

'என்னுடைய டெலிஃபோனை ஒட்டுக் கேட்கிறார்கள்' என்று குற்றம் சாட்டும் சந்திரசேகர், அது பற்றி ஆராய வரும் ஸி. பி. ஐக்கு ஒத்துழைப்புத் தர மறுப்பதில் என்ன ஆக்க பூர்வ செயல்பாடு இருக்கிறது? இப்படியே நூற்றுக்கணக்கான உதாரணங்களைக் கொடுக்கலாம்.

முதல்வர் சமர்ப்பித்த பட்ஜெட்டில் நிறைகுறைகள் என்ன என்பன எந்த அளவுக்கு இந்த பட்ஜெட் தொடரில் நமது பிரதிநிதிகளால் அலசப்பட்டன? உருப்படியான யோசனைகள் எந்த மட்டில் தெரிவிக்கப் பட்டன? 'ஜெயலலிதாவைக் கொல்ல முயற்சி' என்ற ஆதாரமற்ற குற்றச் சாட்டும் 'சிறையில் எங்களைச் சரியாக நடத்தவில்லை' என்று குறைப்படுவதும் தாம் முக்கியமாகிவிட்டன. மேல் சபை கூட இல்லாத நிலையில் தமது பொறுப்புக்கள் அதிகரித்திருப்பதை எம். எல். ஏக்கள் நன்கு உணர்ந்திருப்பதாகத் தோன்றவில்லை.

எதிர்ப்பு தேவையற்றது அல்ல; எதிர்ப்பதற்காகவே ஏற்பட்டவைதாம் எதிர்







கட்சிகள். ஆனால் எதிர்ப்பு அர்த்தமுள்ளதாகவும் ஆக்க பூர்வமான யோசனைகளை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும். பத்திரிகைகளின் தலையங்கத்தை ஆங்கிலத்தில் 'லீடர்' என்று குறிப்பிடுவார்கள். ஏன் தெரியுமா?''A leader must lead the reader'' என்பார் ராஜாஜி. ''தலையங்கத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கலாம், குறை கூறலாம்; ஆனால் அதிலேயே பிரச்னைக்கு ஆக்க பூர்வமான ஒரு தீர்வும் யோசனையாகக் கூறப்பட வேண்டும். பிரச்னையைக் சுட்டிக் காட்டி விட்டு, 'முதல்வர் என்ன செய்யப் போகிறார்? பொறுத்திருந்து பார்ப்போம்' என்று எழுதுவது லீடர் அல்ல!''

பத்திரிகைகள், சினிமா எல்லாமே இன்று நெகடிவ் சிந்தனைகளையே அதிகமாக வளர்க்கின்றன. இது ஆபத்தான போக்கு. அரசியல்வாதிகள் ஆக்கபூர்வமான யோசனைகளை வெளியிட முடியவில்லை என்றால் ஆவேசமாகப் பேசி, நெகடிவ் சிந்தனைகளை மட்டுமே வளர்த்து நாட்டைக் கெடுக்காமலாவது இருக்கலாம்.

ஜப்பானில் வேலை நிறுத்தம் என்றால் தோளில் கருப்புப் பட்டை அணிந்து கூடுதல் வேலை செய்து உற்பத்தியை அதிகரிக்கிறார்கள். விற்பனை — விநியோகத்துக்குத் திணறிப் போகிறார் தொழிலதிபர்!

'நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே; நாட்டுக்காக நீ என்ன செய்தாய் என்று யோசித்துப் பார்' என்றார் கென்னடி. இந்த அறை கூவல் மனிதனைச் சந்திரனில் நடமாடச் செய்தது!

இரண்டாம் உலகப் போரின் போது 'எட்டு மணிநேரம் ஊதியத்துக்காக உழைப்போம்; மேலும் ஒரு மணிநேரம் நாட்டுக்காக உழைப்போம்' என்றார் சர்ச்சில். கடுமையான, சோதனைமிக்க காலகட்டத்தை பிரிட்டன் சமாளித்தது மட்டுமல்ல; நேச நாடுகளின் உதவியுடன் போரிலே வென்று, வெற்றிக் கொடி நாட்டியது.

மக்களை ஆக்க பூர்வமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் நம் தலைவர்கள் ஊக்குவிக்க வேண்டும். இதற்கு முதலில் தலைவர்களே ஆக்க பூர்வமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் பழக வேண்டும். சிறந்த முன்னுதாரணங்களாகத் திகழ வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.


ஃபாரெக்ஸ்-எக்
பாலைப் போன்றே
ஜீரணிக்க எளிது!
ஆறு மாதம் முதற்கொண்டு
உங்கள் குழந்தைக்கு முட்டை,
பால் இரண்டிலுமே உள்ள புரதச்
செழுமையை ஒரே ஆகாரத்தின்
மூலம் அளியுங்கள்.
உங்கள் குழந்தையின்
மென்மையான செரிக்கும்
நிலைக்கேற்றவாறு முன்கூட்டியே
பக்குவப்படுத்தப்பட்டுள்ள
ஃபாரெக்ஸ்-எக் அவன்
எளிதில் ஜீரணிக்கக்
கூடியதாகும்.
Farex-egg
புரதம் செறிந்தது
ஃபாரெக்ஸ்:
சுவையுடன் வளரும் வழி.
Gx/188.90 Tml.



• டாக்டர் செரியன்

இதய நோய்ச் சிகிச்சை நிபுணர் டாக்டர் கே. எம். செரியன் சொன்ன உண்மைச் சம்பவம்:

நாலு மாதக் குழந்தைக்கு இருதய அறுவைச் சிகிச்சை!


கேப்டன் கிதேசுவர ஆனந்த், தம் மனைவியோடும், நாலே மாதமான குழந்தை வசுந்தராவுடனும், சென்னையில் வந்து இறங்கிய போது, இந்த ஊருக்கு அவர்கள் முற்றிலும் புதியவர்கள்.

உத்தரப்பிரதேசம் பரெய்லியில் உள்ள மிலிடரி ஆஸ்பத்திரியில் குழந்தை வசுந்தரா பிறந்த போது, இரண்டே கால் கிலோவே இருந்தாலும் சாதாரணமாகவே இருந்தாள். பிறகுதான் காய்ச்சல் வந்தது. குழந்தை வைத்தியர், குழந்தைக்கு இதய முணுமுணுப்புச் சத்தம் இருப்பதை அப்போது அறிந்தாலும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இருந்ததோடு, ஆனந்திடமும் தெரிவிக்கவில்லை.


ஐந்தே நாளில், குழந்தையின் குரலே எழவில்லை. மூன்று மாதத்தில் அரை கிலோ எடையே கூடியிருந்தது. மிலிடரி டாக்டர் முழுதாக செக் அப் செய்யச் சொல்லி சிபாரிசு செய்தார். அதற்குள் குழந்தைக்குப் பசியும் எடுக்காத நிலை உண்டாகி விட்டது.

எக்ஸ்-ரேயில், வசுந்தராவின் இதயம் விரிவடைவது தெரிந்தது. ஈ. ஸி. ஜி. சாதாரணமாகத்தான் இருந்தது. தில்லிக்கு எடுத்துக் கொண்டு போனார் ஆனந்த். ஆறே நாள் லீவுதான் கிடைத்தது அவருக்கு. அங்கே பரிசோதித்த வைத்தியர், ''குழந்தைக்கு நிமோனியா அல்லது டபுள் நிமோனியா வரக் கூடும். தாமதிக்காமல் அறுவைச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யுங்கள் — குழந்தை பிழைக்க வழியுண்டு!'' என்று சொல்லியிருக்கிறார். கலவரமடைந்த ஆனந்த் ''யாரிடம் போவது டாக்டர்?'' என்ற போது, சென்னையிலிருந்த என்னைச் சிபாரிசு செய்திருக்கிறார்.

இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு குடும்பத்தில் பிறந்த பெண் குழந்தை என்பதால் மாமா, சித்தப்பா, தாத்தா, பாட்டி என்று எல்லாருமே வசுந்தராவிடம் கொள்ளை ஆசையாக இருந்தார்கள்.



• இருதய அறுவைச் சிகிச்சை...



மாதம் ஒரு தொகுதி

ஆரணி தொகுதியை ஆராய வருகிறோம்!

'மாதம் ஒரு தொகுதி' என்ற கல்கியின் திட்டத்தின்கீழ் நடந்த மூன்றாவது குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொகுதி, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள ஆரணி தொகுதி.

தி. மு. க. எம். எல். ஏ. வான ஏ. சி. பி. ஏ. தயாளன், ஜெயலலிதா அணி வேட்பாளரைவிட 7,647 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருப்பவர்.

ஆரணி தொகுதியிலுள்ள அனைவரும் தங்கள் தொகுதி எம். எல். ஏ. விடம் தாங்கள் கேட்க விரும்பும் கேள்விகளை எங்களுக்கு எழுதியனுப்பலாம். வாக்குறுதிகளை நினைவுபடுத்தலாம். அத்துடன் எம். எல். ஏ. செய்யும் சிறப்புப் பணிகள் ஏதேனும் இருந்தால் குறிப்பிட்டு எழுதலாம். தொகுதியின் வளர்ச்சிக்கான உங்கள் ஆலோசனைகளையும் எங்களுக்கு எழுதலாம்.

நீங்கள் எழுதும் ஒவ்வொரு விஷயத்தையும் எம். எல். ஏ. கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அவருடன் பேசுவோம்; கேள்விகள் கேட்போம். தொகுதியை நேரடியாக வந்து சுற்றிப் பார்த்து ஆராய்வோம்.

கடைசியாக எங்கள் அனுபவங்களையெல்லாம் கல்கியில் கட்டுரையாக வெளியிடுவோம்.

ஆரணி தொகுதியிலுள்ள கல்கி வாசகர்களின் கடிதங்கள் கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 9.5.90.

உறையின் மேல், 'மாதம் ஒரு தொகுதி' என்று மறக்காமல் குறிப்பிட்டு உடனடியாக எழுதுங்கள்.

— ஆசிரியர்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் அவர்களுக்கு எல்லாம் ஒரே அதிர்ச்சி. குழந்தையின் இதயத்தில் துளை இருக்க முடியும் என்றே அவர்களால் நம்ப முடியவில்லை.

குழந்தையின் நிலைமையை விளக்கி, மேலும் லீவு எடுத்துக் கொண்டு ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை ரயிலில் மனைவி — குழந்தையுடன் வந்து இறங்கிய ஆனந்த், எனக்கு போன் செய்தார். மறுநாள் காலை வருமாறும், ஒன்றும் பயப்பட வேண்டாம் என்றும் ஆதரவாகச் சொன்னேன். வசந்தராவை விட மோசமான நிலையிலிருந்த குழந்தைகளை இங்கே கண்டதும் அவர்களுக்கே நம்பிக்கை கூடுதலாயிற்று.

கார்டியாக் கேத்திட்டரைசேஷன் முறையில் அறுவைச் சிகிச்சை செய்வதாக முடிவாயிற்று. அதாவது ரத்த நாளம் மூலமாக மெலிதான குழாயைச் செலுத்தி அதன் உதவியுடன் இதயத்தில் உள்ள குறையைச் சரி செய்வது.

வசந்தரா ரொம்பவும் பலஹீனமாக இருந்ததால், கார்டியாக் கேத்திட்டரைசேஷன் பூரணமாகச் செய்ய முடியவில்லை. மறுபடி ஆபரேஷனுக்கு ஒரு தேதி குறிப்பிட்டோம். இம்முறை நெஞ்சைத் திறந்து நேரடியாக இதயத்தை அணுகி அதனை சீராக்கத் தீர்மானித்தோம். பெற்றோர் ரொம்பக் கலங்கிப் போயினர். நாலு மாதக் குழந்தைக்கு ஒபன் ஹார்ட் சர்ஜரி என்றால் யாரும் கவலைப்படத்தானே செய்வார்கள்! 'ஆபரேஷனை ஒத்திப் போடலாமா?' என்று கேட்டனர். 'தாமதிப்பது உசிதமில்லை' என்று கருத்துத் தெரிவித்தேன்.

மூன்று மணி நேரம் நடந்தது அந்த அறுவைச் சிகிச்சை. ஆபரேஷன் தியேட்டரிலிருந்தே, 'வெற்றிகரமாக எல்லாம் முடிந்து விட்டது' என்று வெளியே கவலையுடன் காத்துக் கொண்டிருந்த ஆனந்திடமும் அவர் உறவினர்களுடமும் சைகையால் தெரிவித்தேன்.

குழந்தை வசந்தரா, மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்து தீவிர கவனச் சிகிச்சைப் பிரிவிலேயே இருக்க நேர்ந்த போது, ஆனந்தும் அவரது குடும்பத்தினரும் தூரத்திலிருந்தே குழந்தையைப் பார்க்க முடிந்தது.

பிறகு பரெய்லி போய், ஆறு மாதம் கழித்து மறுபடி 'செக் அப்'புக்காக ஆனந்த் குழந்தையுடன் வந்தபோது எடை இரண்டு மடங்காகி இருந்தது. அதன் ஆரோக்கியமான வளர்ச்சி மன நிம்மதியைத் தந்தது! எனக்கும் என் உதவியாளர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி. ஒரு குழந்தையைக் காப்பாற்றி விட்டதில் ஏற்படும் சந்தோஷத்துக்கு ஈடு இணை ஏது?

— எஸ். வி. என்.



கால்குலேட்டரைத் தோற்கடிக்கும் சிறுவன்!

"வீட்டிலுள்ள அனைவரும் உட்கார்ந்து டீ.வி.யில் கிரிக்கெட்மேட்ச் பார்த்துக் கொண்டிருப்போம். அப்போது, பௌலர் எத்தனையாவது ஓவரில் எத்தனையாவது பந்தைப் போடுகிறார்? ஆட்டக்காரர் எத்தனையாவது ரன்னை எடுக்கிறார்? முந்தையமேட்சுகளில் அவர் எடுத்த ரன்கள் எத்தனை? — போன்றவற்றையெல்லாம் தனது ஏழாவது வயதிலேயே கடகடவென்று சொல்லுவான் வாசுதேவன். பையனுக்குக் கிரிக்கெட்டில்தான் எத்தனை ஆர்வம் என்று . நாங்கள் நினைத்துக் கொள்வோம். மற்றபடி அப்போது அதை நாங்கள் சீரியஸாகவே எடுத்துக் கொள்ளவில்லை.

"சென்ற ஆண்டு என் தாயார் — சிறுவனின் பாட்டி — காலமானார். இறுதிச் சடங்குகளுக்கு உறவினர்களெல்லாம் வந்திருந்தார்கள். நெருங்கிய உறவினர்கள் தங்கள் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்து சில நாட்கள் தங்கியிருந்த போது, சிறுவன் வாசுதேவன் அவனையொத்த சிறுவர்களோடு சேர்ந்து கொண்டு நம்பர்களைப் பெருக்கிக் கூட்டிக் கழித்து அவர்களைப் பிரமிப்பில் ஆழ்த்தி விளையாடிக் கொண்டிருந்தான். அதன் பிறகுதான் எங்களுக்கு அவனுக்குக் கணக்கின்மேல் உள்ள ஆர்வமும் திறமையும் புரிய ஆரம்பித்தது.

"நீ எப்படி இத்தனை சுலபமாகப் பெருக்கிச் சொல்கிறாய்?" என்றால், 'எப்படியோ அப்பா, நான் சொல்லுகிற விடை சரியா இல்லையா என்று பாரேன்?' என்பான். நானும் கால்குலேட்டரை எடுத்துப் பெருக்கிப் பார்த்தால் அவன் சொன்ன விடை சரியாக இருக்கும்!

"அனைவரும் தூங்குவதற்காக விளக்கை அணைத்த பிறகு, கட்டிலில் படுத்துக் கொண்டே அவனாகவே எதையாவது சொல்லிக் கொண்டிருப்பான்! 'பேசாமல் தூங்கு' என்று சொன்னால், 'என் மனசுக்குள் வெறும் நம்பர்களாகவே ஓடிக் கொண்டிருக்கிறது. அதனால் எனக்கு இப்போது தூங்க இஷ்டமில்லை' என்பான்.

"சரி, இவனுள் கணிதத் திறமை இருக்கிறது. அதை எப்படி வளர்ப்பது என்று

புரியாமல் சென்னைப் பல்கலைக் கழகத்தி லுள்ள கணிதமேதை ராமானுஜம் இன்ஸ்டிடியூட்டுக்கு அழைத்துச் சென்றேன். அங்குள்ள பேராசிரியர்கள் இவனைச் சோதித்துப் பார்த்துவிட்டு, 'பையன் மிகவும் சிறுவனாக இருக்கிறான். எனவே, இன்னும் சிறிது வளரட்டும்; பிறகு பார்க்கலாம். அதுவரை அவ்வப்போது சிறுவனை எங்களிடம் அழைத்து வந்து கொண்டிருங்கள்' என்று சொன்னார்கள். நானும் அவ்வப்போது அழைத்துச் சென்று கொண்டிருக்கிறேன்...'' என்றார் சிறுவன் வாசுதேவனின் தந்தை ஸ்ரீனிவாசன்.

பெரம்பூரிலுள்ள மான்ட்போர்டு மெட்ரிகுலேஷன் பள்ளியில் நான்காவது படித்துக் கொண்டிருக்கும் சிறுவன் வாசுதேவனுக்கு இப்போது வயது ஒன்பது. இன்னும் குழந்தைத்தனம் போகாத முகம்.

''வேண்டுமானால் நீங்களே அவனைச் சோதித்துப் பாருங்கள்'' என்றார் சிறுவனின் தாய் ராஜலட்சுமி.

''கேளுங்கள் மாமா...'' என்றான் சிறுவன்.

சரி, $13 \times 13 \times 13$ எவ்வளவு?''

''2,197.''

''அதையும் 13 — ஆல் பெருக்கு.''

''28,561.''

''13 — ஆல் பெருக்கிக் கொண்டே போ.''

''3,71,293... 48,26,809... 6,27,48,517...'' என்று சில வினாடிகளில் சொல்லிக் கொண்டே போகிறான் சிறுவன்.

''சரி, 2,025 க்கு ஸ்கொயர் ரூட் என்ன?''

''45.''

''இப்படி எது கேட்டாலும் சுலபமாக — மனக்குள்ளேயே சில வினாடிகளில் போட்டுச் சொல்லி விடுகிறாயே, அது எப்படி?''

''உதாரணத்துக்கு 149×37 க்கு என்ன விடை என்று நீங்கள் கேட்டால், நான் முதலில் 149 — ஐ 150 என்று எடுத்துக் கொண்டு அதை 37 — ஆல் பெருக்கிக் கொள்வேன். அது 5550 என்று வரும். பிறகு அதிலிருந்து 37 — ஐக் கழித்து 5513 என்று விடைக்கு வருகிறேன். ஆயினும் இன்னும் எனக்குப் பின்னங்களாக வரும் எண்களில் தடுமாற்றம் இருக்கிறது. அதையும் பழகிக் கொண்டு வருகிறேன்...'' என்கிறான் சிறுவன்.

''எப்போதும் விளையாட்டுத்தான் இவனுக்கு. பரீட்சை என்றால் ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம்தான் படிக்கிறான். ஆயினும் முதல் அல்லது இரண்டாவது ராங்க் வாங்கி விடுகிறான். அதனால் நாங்களும் அவனிஷ்டத்திற்கு விட்டுவிடுகிறோம். எதையும் வற்புறுத்துவதில்லை...'' என்றார்கள் தந்தை ஸ்ரீனிவாசனும், தாயார் ராஜலட்சுமியும்.

ஆக, இந்தச் சிறுவனுக்குள் உலகமே வியக்கும் இன்னொரு ராமானுஜம் ஒளிந்து கொண்டிருக்கக் கூடும். யார் கண்டது?

— ப்ரியன்

வண்ணப்படம்: யோகா



மனைவி ஒரு மாணிக்கம்

பாம்பு பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளை முடிந்த மட்டும் திரட்டி, மிக்ஸியில் போட்டு அரைத்தெடுத்து உருண்டை பிடித்தால் என்ன வரும்? மனைவி ஒரு மாணிக்கம் வரும்! புஸ் புஸ்ஸென்று இரட்டை நாக்கை நீட்டிச் சீறி ஏராளப் பாம்புகள் படம் எடுத்து வரும்!

ராதாரவி பாம்புச் சித்தர். சின்னக் கல்லிலே சாக்லேட் செய்து உள்ளூர்ச் சிறுவன் ஒருவனைப் பிரமிக்கச் செய்ததோடு, தன்னால் செத்தவனையும் பிழைக்க வைக்க முடியும் என்று பீற்றிக் கொள்கிறார்!

பாம்புத் தாத்தாவுக்காக நாவற் பழம் பறிக்க மரத்தில் ஏறிய சிறுவன், ஏற்கெனவே தன் மனைவிக்குப் பழம் பறிக்க மரத்தில் தொற்றியிருந்த பாம்பைக் கண்டு அலறி விழுந்து அல்பாயுசில் உயிரை விட —

அந்தப் பிள்ளையின் தாயார் — எஸ்டேட் எஜமானி — தன் பிள்ளையின் சடலத்தைத் தூக்கிப் போய்ப் பாம்புச் சித்தரிடம் நீட்டி, 'செத்தவங்களைப் பிழைக்க வைப்பீங்கன்னு உங்களைப் பத்தி என் பிள்ளை சொன்னான். இப்ப நீங்க என் பிள்ளையைப் பிழைக்க வைக்கலே, நீங்க சொன்னது பொய்யாயிடும்,' என்று உசுப்பிவிட —

'ஓர் உயிரைப் பிழைக்க வைக்க, இன்னோர் உயிரை எடுக்கணுமே!' என்று சித்தர் மகா வேதனைப்பட்டுக் கொண்டு, 'இந்தப் பிள்ளை சாகிறதுக்குக் காரணமா இருந்த அந்தப் பாம்புதான் இவனுக்கு உயிர் கொடுக்கணும்,' என்று அந்தப் பாம்பைப் பிடித்து, ஜபித்து, பையனை உயிர்ப்பித்து, விறைத்த பாம்புச் சடலத்தைத் தூக்கிப் போடுகிறார். அப்புறம்தான் வந்தது வினை.

இப்போது கணவனின் பாம்புச் சடலத்தைப் பாதுகாத்து வைத்துக் கொண்ட பெண் பாம்பு, தன் கணவனை இந்தக் கதிக்கு ஆளாக்கியவர்களைப் பழிவாங்கி, அந்தப் பையனின் உடலில் இருக்கும் தன் கணவனின் ஆவியை உறிஞ்சிக் கொண்டு வந்து கணவனை உயிர்ப்பித்துப் பழையவாறு தாம்பத்தியம் நடத்தப் போவதாய்ச் சபதம் செய்கிறது.

இதை ஞானதிருஷ்டியில் அறிந்த பாம்புச் சித்தர் எஸ்டேட் எஜமானியிடம், 'இனி இந்த எஸ்டேட்டுக்குத் திரும்பாதீர்கள். உங்கள் பிள்ளையை இந்த நாட்டை விட்டே வெளியேத்திடுங்க,' என்று அட்வைஸ் பண்ணி, அந்த நாகமலை எஸ்டேட்டை விட்டு அந்தப் பாம்பு தாண்டாதபடி மந்திர வேலி போட்டு விடுகிறார். அதாவது அந்தப் பாம்பு, எல்லையைத் தொட்டதும் குபீரென்று தீச்சுவாலை கிளம்பும்!

அந்தப் பெண் பாம்பு யார் வரவை நோக்கி ஊரெல்லை போர்டு பக்கம் காத்திருக்கிறது? அதுதான் 'பக்பக்' சஸ்பென்ஸ்! 'இப்படியெல்லாம் நடக்குமா?' என்ற பகுத்தறிவை விட, 'இப்படி நடந்தால்!' என்ற கற்பனையில் ஒரு சுகம் இருக்கத்தானே செய்கிறது?

ரொம்ப காலத்துக்குப் பிறகு கொஞ்சம் புஷ்டியான ராதா. புதுமுகக் கதாநாயகன் முகேஷ் அவருக்குத் தோதுதான். புதுமுகத்திடம் கொஞ்சம் மாமா களை.

முழுக்கமுழுக்கராதாதான்நீக்கமறநிறைந்திருக்கிறார். அதிலும் பெண் பாம்பு ஆவியாய் மாறி ராதாவுக்குள் ஆவாகனம் பண்ணிக் கொண்டுவிட்ட பிறகு, முகேஷின் ஆவியை உறிஞ்சுவதற்காக (சம்போகத்தின் மூலம்தான் சாத்தியமாம்) அவர் சரசமாடுவது கிளுகிளு போனஸ்.

எஸ்டேட் எஜமானியின் வளர்ப்புப் பிள்ளை ஆக்ஷன் கிங் அர்ஜுன். அவர் சர்ப்பத்தின் நடவடிக்கைகளை முறியடிப்பதும், அவரைச் சமாளிக்கச் 'சர்ப்பம்' செய்யும் தந்திரங்களும் சுவாரஸ்யமானவை.

சரளா–சந்திரன் ஜோடி காமெடி தனி டிராக்.

நடிக்கிறவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அந்தப் பாம்புகளும் பாய்ந்து கொத்தும் கழுகும் கிறல் போட, கதை காட்டும் சுவாரஸ்யம் முன்னுக்கு நிற்கிறது.

— பி. எஸ். எஸ்.

மீண்டும் ஒருமுறை

வழக்கம் போல் புகைச்சல் அவனுக்குள் இன்றும் மூண்டிருக்க வேண்டும். அது வாசுவின் செய்கைகளிலேயே தெரிந்தது.

சாப்பாட்டின் போது அவனுக்கு மட்டும் எல்லாவற்றையும் பரிமாறிக் கொண்டான். தண்ணீர் தம்ளரை 'டொக்' கென்று வைத்தான். முன்னாலேயே எழுந்து கொண்டான். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டேயிருந்தாள் சுதா.

வாசு சுதாவின் கணவன்.

இது என்ன குணம் என்ற எரிச்சல் பற்றிக் கொண்டது.

நேற்று அவன் ஆபீசில் யாராவது ஒரு பெண்ணின் திறமை வெளிப்பட்டிருக்கும். அதுதான் இப்படி ஓர் ஆத்திரம்.

'உனக்கு ஏதாவது வக்கு இருக்கா?' என்னும் விதமாய் புழுவைப் பார்ப்பது போல் பார்வை.

தெரிந்தும் எதுவும் செய்ய முடியாத நிலை சுதாவுக்கு.

திருமணம் ஆகி இரண்டு வருடம் ஆகியிருந்தது. அவ்வளவுதான். புரிந்து கொள்ளுதல் என்பது அத்தனை சுலபம் அல்ல என்பது புரியவே ஆயாசத்துடன் குக்கரைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள் சுதா.

போன வாரம் இப்படித்தான். ஒன்றுமில்லாத விஷயத்திற்கு ஒரு முகத் தூக்கல்.

'சுதா... எங்க அத்தை பெண் உமா... அவ ஹஸ்பெண்டுக்குக் கரகரன்னு எண்ணெய் தேய்ச்சு விடறா... பாவி... அவன் அப்படித் தூங்கறான்! ம்.. எல்லாம் என் அம்மாவோட போச்சு. நியாயப்படி உமாவைத்தான் நான் கல்யாணம் செய்து கொண்டு இருக்கணும்...'

அருவருப்பான பேச்சில் ஆத்திரம்தான் வரும்.

'இங்க பாருங்க.. நானும் ஆபீஸ் போகணும். நீங்களும் ஆபீஸ் போகணும். சண்டே சீக்கிரம் எழுந்திருங்கன்னு சொன்னா பத்து மணி வரை தூக்கம். என்ன செய்ய முடியும்?' சாத்விகமான பதில்தான்.

ஆனால் கோபத்தில் இரண்டு நாள் 'உர்' ரென்று இருந்தான். மறுபடியும் இந்த வாரம் சண்டை.

டீ.வி. ஓடிக் கொண்டிருந்தது.

ஏதோ ஓர் ஆங்கிலத் தொடரில் வாசு லயித்திருந்தான்.

சுதா பாலை அவனிடம் கொடுக்க, கடமையே என்று மடக்மடக் என்று குடித்தான்.

பால் தம்ளரை உள்ளே கொண்டு வைக்க அலுப்பு மேலிட்டது.

சே... என்ன வாழ்க்கை இது.

ஒரு சமயம் எதையோ அடைந்து விட்டோம். இந்த உலகமே நம் அடிமை என்பதாய்ச் சந்தோஷம். ஒரு சமயம் வாழ்க்கையா இது என்று வெறுக்கும் அளவுக்கு வேதனை. ஏன் இந்த மாற்றங்கள்?

நேற்று கோவிலில் ஒரு வெள்ளைக்கார ஜோடி.

கணவன், மனைவி, குழந்தை.

எந்தவிதக் கவலையும் இன்றி, ஒரே ஒரு ஹோல்டால் பையுடன், வாயில் சாண்ட்விச், கையில் கூல்டிரிங்ஸ். நிம்மதி. தோளில் காமிரா.

கணவன் ஒரு பக்கம். அவள் ஒரு பக்கம். குழந்தை ஒரு பக்கம். எல்லாம் கோவில் சிற்பங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

யானையின் நாமத்தை ரசித்தனர். அலங்காரத்தைப் பார்த்துத் திகைத்தனர். எல்லாவற்றையும் ஃபோட்டோ எடுத்தனர்.

இவளிடம் வந்து 'வாட் இஸ் தி மீனிங் ஆஃப் மணவாளன்?' என்றனர்.

மணவாளன் என்பது புரிய ஐந்து நிமிடம் ஆக... சந்தோஷத்துடன் மணவாள மாமுனிகளை ஆங்கிலத்தில் விவரித்தாள்.

நேற்றைய சந்தோஷம் பிடித்திருந்தது.

அப்படியே இருந்து விட்டால் பரவாயில்லை என்று தோன்றியது.

சட்டென்று மௌனம். டீ.வி.யை நிறுத்தியிருந்தான் வாசு.

''என்னங்க நாளைக்கு ஆபீஸ்ல ஆடிட்டிங்... கொஞ்சம் சீக்கிரம் கொண்டு விடணும்...'' என்றதும் தொண்டையைச் செரு

ஜெயந்தி சுந்தரம்

பினான்.

''சரி... சரி...'' என்றான்.

பாரதியின் கவிதை வரிகள் மனத்திற்குள் இடையே ஓடின.

''சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா..'' வாய் முணுமுணுக்கத் தூங்கிப் போனாள் சுதா.

காலையில் எழுந்த போது மணி ஐந்து ஆகிவிட்டிருந்தது. உடம்பு ஏனோ அசதியாக இருந்தது.

விடுவிடுவென்று காலை வேலைகளை முடித்து விட்டு காப்பியுடன் வாசுவை எழுப்பினாள். ஒரு நிமிடம் சிரிக்க முற்பட்டது போலிருந்தது. ஆனால் சிரிக்கவில்லை.

''இன்னும் கோபமா?'' என்றாள் சுதா.

''யாரு மேல கோவிச்சுட்டு என்ன செய்யணும்... அதுதுங்களுக்குச் சாமர்த்தியம் இருந்தா நான் ஏன் கோவிச்சுக்கணும்?'' இப்பொழுது நேற்றைய கோபம் இன்னும் கனன்றது. நீறுபூத்த உள்ளே சூடான ஆணவின் கோபம்.


சுதாவுக்கும் கோபம் வந்தது. காலை நேரத்தைப் பாழடிக்க வேண்டாம் என்ற எண்ணத்துடன் நகர்ந்தாள் சுதா.

''சாயந்திரம் வர லேட்டாகும். ப்ரெண்ட்ஸோட சினிமா போறேன்...''

''சாப்பாடு.... ராத்திரிக்கு...''

''வேணாம்... நீ எனக்காகக் காத்திருக்காம சாப்பிட்டுப் படு...'' இத்தனைக்கு இடையிலும் கரிசனம்.

இந்தக் கோபம்தான் பயங்கர மைனஸ்



பாயிண்ட். மனத்தினுள் நினைத்தாள் சுதா.

ஆபீஸில் வேலை கழுத்தைப் பிடித்தது.

மன உளைச்சலில் தலைவலி. சாயந்திரம் வீடு கிளம்புகையில் உடம்பு அல்லாடியது. நாக்கு கசந்தது. சமாளித்து வீடு வந்து சேர்ந்தாள் சுதா.

உள்ளே வந்து வாசல் கதவைத் தாழிட்டு விட்டுப் படுத்தாள். ஜுரம் எகிறியது. கண் மூடிக் கிடந்தாள்.

வாசலில் காலிங்பெல் அடிக்கும் சப்தம் கேட்கக் கண்விழிக்கையில் இரவு மணி எட்டு ஆகியிருந்தது. கஷ்டப்பட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தாள் சுதா.

வாசுதான்.

தள்ளாடி விழப் போனவளைப் பிடித்துக் கொண்டான்.

''என்னடா... ஆச்சு..'' என்றதும் சுதாவிற்கு அழுகை முட்டியது.

''ஜுரம்...'' என்றாள் ஈனஸ்வரத்தில்.

சற்று நேரத்தில் மிளகுக் கஷாயம் வந்தது. பக்கத்து மருந்துக் கடையில் மருந்து வாங்கி, காலை வரை கண்விழித்து, மருந்து கொடுத்து, தலை கோதி, ஹார்லிக்ஸ் கொடுத்தான் வாசு.

'இதுதான் வாத்ஸல்யம்.. இந்த அன்பு, இந்தப் பரிவுதான் நிரந்தரம். மற்ற குறைகள் எல்லாம் சில நாட்களுக்குத்தான்...' மனத்துள் நினைத்தவளாகத் தலைநிமிர்ந்து வாசுவை ஏறிட்டாள். கண்களில் நன்றியுடன் பார்த்தாள்.

இரண்டு நாட்களில் மீண்டும் உற்சாகம் வந்து விட்டது. உடம்பு தேறியும் விட்டது சுதாவுக்கு.

''என்னங்க... இன்னிக்கு உங்களுக்கு என்ன டிபன்... ஸேவுதானே.. நல்லதாச் செஞ்சு வெக்கறேனே...''

''ம்.. உனக்கு அடை, உப்புமா, தோசையை விட்டா என்ன தெரியும்.. நேத்திக்கு எங்க ஆபீஸ்ல ராதா மேடம் ஆல் இண்டியா லெவலில் சமையல் போட்டியில கோல்டு மெடல் வாங்கியிருக்காங்க. அதெல்லாம் சொன்னா உனக்குப் புரியாது...''

சுதா மௌனமானாள். மீண்டும் ஜுரம் வருமா? என்றது மனது.

அருள்வாக்கு


தர்மத்தை நமக்கெல்லாம் நடத்திக் காட்ட வந்த ஸ்ரீராமசந்திர மூர்த்தியே இந்தப் பிரேத ஸம்ஸ்காரத்தை விசேஷமாகச் செய்து காட்டியிருக்கிறார். ஜடாயு மாதிரியான ஒரு பக்ஷிக்குக் கூட அவரே ஸம்ஸ்காரம் செய்திருக்கிறார். அது மட்டுமில்லை, வாலியையும் பரம வைரியான ராவணனையும் கூட அவர் வதைத்தவுடன் அங்கதனையும், விபீஷணனையும் கொண்டு அவர்களுக்கு ஒரு குறைவுமில்லாமல் தஹனம் பண்ணச் செய்திருக்கிறார். ஏனென்றால் அந்தச் சரீரங்களுக்குள் இருந்த மனஸ்தான் அவற்றைத் துஷ்டத்தனமாக நடத்திற்று. அப்புறம் ஸ்வயமாகக் கெடுதல் இல்லாத, பகவானுடைய அத்புத ச்ருஷ்டியான அந்த உடம்புகளுக்கும் உரிய மரியாதையைச் செய்வதில் ராமரே கண்ணும் கருத்துமாக இருந்து, யதோக்தமாக ஸம்ஸ்காரம் பண்ணுவித்திருக்கிறார். கிருஷ்ண பரமாத்மாவும் கௌரவர்கள் உள்பட எல்லாருக்கும் குருக்ஷேத்திரத்தில் அந்திம ஸம்ஸ்காரம் பண்ணுவித்து, அப்புறம் த்ருதராஷ்ட்ரனையும் பாண்டவர்களையும் கங்காதீரத்துக்கு அழைத்துக் கொண்டு போய் தர்ப்பணாதிகள் செய்வித்திருக்கிறார்.



ஆனதால், அநாதை பிரேத ஸம்ஸ்கார விஷயத்தில் கவனக் குறைவாக இருப்பது நம்முடைய ஹிந்து ஸமூஹத்துக்கு உள்ள பெரிய தோஷம் — மன்னிக்க முடியாத தோஷம். இனிமேலாவது இதற்கு ஓர் ஏற்பாடு பண்ணிப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ள வேண்டும்.

அநாதையாக் ஒருவன் செத்துப் போனதாகத் தெரிந்தால், அவன் என்ன ஜாதியாக இருந்தாலும் அவனுடைய குலாசாரப்படி அவனுடைய குலத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு யதோக்தமாக ஸம்ஸ்காரம் செய்வதற்குப் பொருள் உதவி பண்ண வேண்டும். இதற்காகப் பலர் சேர்ந்து பணம் போட்டு மனஸாரப் பணிபுரிய வேண்டும். ஏகதேசமாகச் செய்யச் சக்தியுள்ள தனிகர்கள் இதைப் பெரிய தர்மம் என்று புரிந்து கொண்டு விசேஷமாக உதவி செய்ய வேண்டும். அநேக தர்மஸ்தாபனங்கள், டிரஸ்ட்கள் நம் ஹிந்து ஸமூகத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவர்களும் அநாதை ப்ரேத ஸம்ஸ்காரம் உத்தமமான கைங்கர்யம் என்று 'ஸ்பெஷல் இன்டரெஸ்ட்' எடுத்துக் கொண்டு இதற்காகத் தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



"தபாலில் ஆங்கிலம் பயில அனைவரும் ஆசியன் இன்ஸ்டிட்யூட்டையே அணுகுவது ஏன்?"

தபாலில் 'ஆங்கிலம்' பயில அனைவரும் ஆசியின் இன்ஸ்டிட்யூட்டையே அணுகுவதற்கு பல அனுகூலமான காரணங்கள் உள்ளன. என்ன அவை?...

நடைமுறையில் சிலர் M.A., படித்த ஆசிரியராக இருப்பர். அவரிடம் உயர்ந்த புலமையும் இருக்கும். ஆனால் அவர் கற்றுத் தரும் பாடங்கள் கடினமாக இருக்கும். எவருக்கும் புரியாது. புரியும் விதத்தில் M.A., படித்தவருக்கு கற்றுத்தரத் தெரியாது. உதாரணமாக, கர்நாடக இசை உயர்ந்த இசைதான். ஆனால் புரியும் வண்ணம் கற்றுக் கொடுத்தால்தானே அதனை எளிதில் கற்க இயலும்.

மெல்லிசை அனைவருக்கும் புரியும். எங்கள் பாடங்கள் மெல்லிசை போல் அமைந்தவை. பாமரனுக்கும் புரியும். அது மட்டுமல்ல; படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டும். நீங்கள் எமது பாடத்தின் பக்கங்களை பரபரப்போடு புரட்டுவீர்கள். தொடர் கதை படிப்பதைப் போன்ற மனநிலையில் தாங்கள் மாதா மாதம் பாடங்களை தபால்காரரிடம் பெறுவீர்கள்.

ஆரம்பக் கல்வியிலேயே ஆங்கிலத்தை சரிவர படிக்காதவரா நீங்கள்? மேல்நிலைப் பள்ளியில் மேலோட்டமாக கவனமின்றி ஆங்கிலத்தை கற்றவரா நீங்கள்?

பள்ளி அல்லது கல்லூரியில் மனப்பாடம் செய்து படித்துவிட்டு இப்போது ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என வருந்துபவரா நீங்கள்?

எந்த நிலையினராக நீங்கள் இருந்தாலும், போற்றத்தக்க விதத்தில் ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் எளிய தமிழில் தபாலில் மிகச்சிறந்த பயிற்சி பெறலாம். இது தொடர்பான இலவச விபரங்கள் பெற ஒரு போஸ்ட் கார்டில் உங்கள் முகவரியை எழுதி அனுப்புங்கள். உங்கள் வீடு தேடி இலவச விபரங்களை அனுப்பி வைக்கிறோம்.

ஆசியன் இன்ஸ்டிட்யூட்
பொன்மேனி (P.O) மதுரை-625010

மத்யமர்:

ஒரு லட்சியம்

பத்மாவதியும் சீனிவாசனும் 'வின்ஸர் மேனர்' ஓட்டலின் 'லாபி'யில் காத்திருந்தார்கள். லதா உள்ளேயே இருந்த புத்தகக் கடையில் நின்று கொண்டு பொம்மை பார்த்துக் கொண்டிருந்தாள். காலை பத்து மணி சுமார் இருக்கும். லிஃப்ட்டின் மேல் விளக்கு சிமிட்டிவிட்டுச் சந்தனநிறக் கதவு திறந்து வெள்ளைக்காரர்களுக்குமத்தியில்டைரக்டர் குள்ளமாக வெளிவந்தார். சலவைத் தூய வெண்மையில் சட்டை வேட்டி அணிந்து அவர்களை நோக்கி வந்தார். சீனிவாசன் எழுந்து அவர் கரத்தைப் பற்றி லேசாகக் குலுக்க பத்மாவதி வணங்கினாள்.

''உக்காருங்க நீங்கதானே சேஷாத்ரி அனுப்பிச்சது?''

''ஆமா ஸார். எம் பேர் சீனிவாசன். எல். ஐ. ஸி யில இருக்கேன். திஸ் ஈஸ் மை ஒய்ஃப்.''

''டாட்டரைக் கூட்டிட்டு வரலீங்களா?''

''வந்திருக்காளே... லதா!'' சீனிவாசன் மகளை அழைத்துவரச் செல்ல, ''உக்காருங்க... முதல்ல உங்களுக்குத்தானோன்னு தோணிச்சு. மனைவின்னு அறிமுகப்படுத்தினதும்தான்... உங்களுக்கு மகளா?''

லதா அதற்குள் வந்துவிட, ''திஸ் ஈஸ் லதா... லதா, திஸ் ஈஸ் தி ஃபேமஸ் டிரக்டர். நான் சொல்லலை?''

''ஹாய்!''

''தமிழ் பேசுவீங்களா?''

''பேசுவேனே!''

''படிக்கத்தான் வராது. முழுக்க கான்வென்ட்ல படிச்சதினால.''

''ஜோக்ஸ் படிப்பேன் மம்மி.''

''எழுத்து கத்துக் கொடுத்திருக்கேன்.''

''ஏதாவது சாப்பிடறீங்களா? உக்காருங்க. பத்மாவையே பார்த்து, ''நீங்களே நடிக்கலாம் போல இருக்கே?'' என்றார்.

பத்மா சற்று வெட்கப்பட்டுக் கணவனைப் பார்க்க, சீனிவாசன், ''என்னைப் பல பேர் உங்களுக்கு ரெண்டு டாட்டரான்னு கேட்டிருக்காங்க.''

''என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியுமில்லை?''

''ஓ! நன்னாவே தெரியும்.''

லதாவைப் பார்த்து, ''நீங்க என் படம் ஏதாவது பார்த்திருக்கீங்களா?''

லதா தன் தாயைப் பார்க்க, ''பார்த்திருக்கோம், பார்த்திருக்கோம். அது என்ன படம்னா? ஹீரோயின் கல்யாணமே வேண்டாம்பா... சின்ன வயசில...''

''நீங்க 'புதுப்புனலை' சொல்றீங்க. அது வேற டைரக்டர். என் படம் 'விரோதிகள்'னு. இந்த ஊர்ல கூட நட்ராஜ்ல ரொம்ப வாரமா ஓடிக்கிட்டு இருக்கு.''

''டாடி, 'விரோதிகள்' நாம பார்த்தமே, கோவால ஹெலிகாப்டர்... கமல் எல்லாம் வந்து.''

''அது 'வெற்றி விழா'ங்க. நான் சொல்றது... விட்டுடுங்க. நீங்க என் படம் எதுவும் பார்க்கலைன்னு தோணுது. ஆனால் நடிக்கிறதுக்கு முன்னாடி உங்க பெண் என் படம் ஒண்ணாவது பார்த்தே ஆகணும்.''

''இன்னிக்கே பார்த்துடறோம்.''

டைரக்டர் பத்மாவைப் பார்த்து, ''உங்க பெண்ணுக்கு டான்ஸ் ஏதாவது சொல்லித் தந்திருக்கீங்களா?''

''சின்ன வயசிலேருந்து பரதநாட்டியம் சொல்லிண்டிருக்கா. அரங்கேற்றம் ஆயி டீ. வி ல கூட ஆடியிருக்கா.''

''என்ன உயரம்?''

''5 -6 ஸார்'' என்றாள் லதா.

''தமிழ் சினிமாவுக்குக் கொஞ்சம் அதிக உயரம். உங்களைப் போல உங்கள் டாட்டரும்!''


''எங்க அப்பா வழியில எல்லாருமே உசரம். இவாத்திலதான் கச்சல்!''


''மிஸ்டர் சீனிவாசன், உங்க மாதிரி நல்ல குடும்பங்களைச் சேர்ந்தவங்க எங்க பக்கம் வர்றது எங்களுக்கெல்லாம் எவ்வளவோ மகிழ்ச்சி. சினிமாக்காரங்க அத்தனை பேரும் கெட்டவங்கன்னு ஒரு அபிப்பிராயம் பரவலா இருக்கு. அதை நீக்க மரியாதைக்கும் மதிப்புக்கும் உரிய குடும்பங்களைச் சேர்ந்தவங்க ஃபீல்டுக்கு வரணும். சினிமாவில நடிக்கிறதுங்கிறது ஒரு பாங்க் உத்தியோகம், கலெக்டர் உத்தியோகம் போல மரியாதைப்பட்ட தொழிலா மதிக்கப்படணும். அதனாலதான் உங்க மாதிரி உள்ளவர்களை நாங்க பெருவாரியா வரவேற்கிறோம். உங்க டாட்டரை ஒரு ஸ்க்ரீன் டெஸ்ட் எடுத்துரலாம். நீங்க சென்னைக்கு வர முடிஞ்சா நல்லது.''

''எப்ப சொல்லுங்கோ, அப்ப வர்றோம்.''

டைரக்டர் தம் கைக்கடிகாரத்தைப் பார்த்து, ''என் ஷெட்யூலைப் பார்த்துச் சொல்லணும். நீங்க எதுக்கும் மத்தியானம்

சுஜாதா





அடையாறு ஆலமரம்:

அப்புறம் என்ன ஆச்சு?

சுமார் எட்டு மாதங்களுக்கு முன்பு புயலில் விழுந்த அடையாறு ஆலமரம் இப்போது ஜோராகத் துளிர் விட்டுக் கொண்டிருக்கிறது. மரத்தைச் சுற்றிலும் ஈரப்பதம் இருக்க வேண்டும் என்பதற்காகப் புல் வளர்க்கிறார்கள். அதற்கு நான்கு ஸ்பிரிங்லர் குழாய்கள் போடப்பட்டு அவை சுழன்று சுழன்று தண்ணீர் தூவிக் கொண்டிருக்கின்றன. இருப்பினும், நாற்பதாயிரம் சதுர அடிப் பரப்பில் 1826 விழுதுகளைக் கொண்டு விரிந்து நின்று கொண்டிருந்த தாய் மரம் இப்போது தனிமைப்படுத்தப்பட்டு விட்டது. ஆம்; புயலில் விழுந்து, மீண்டும் நடப்பட்ட தாய் மரத்தோடு எந்த விழுதுக்கும் இப்போது தொடர்பு இல்லை. எனினும், "தாய் மரம் நன்றாகத் துளிர் விட்டதும், ஒட்டு முறை மூலம் மற்ற விழுதுகளுடன் இணையச் செய்து விட முடியும். அதற்கு இரண்டு ஆண்டுகள் பிடிக்கும்'' என்றார் தியோசபிகல் சொஸைட்டியின் தோட்டத் துறை நிபுணர் தயானந்த்.

எப்படியோ நானூறு வயது கொண்ட தாய் மரம் பிழைத்து விட்டதில் அனைவருக்கும் மகிழ்ச்சிதான்.

— மௌலி.
படம்: ரமணன்.

ஒரு மணிக்கு போன் பண்றீங்களா. ரூம் நம்பர் முப்பது நாப்பது.''

''சரி ஸார். சான்ஸ் இருக்கா? என்ன தோண்றது?''

''நான் எதுவும் ப்ராமிஸ் பண்ண முடியாது. பொதுவா ஓக்கேன்னு சொல்ல முடியும். உயரம் கொஞ்சம் அதிகம். ஏன்னா ஹீரோ கொஞ்சம் ஷார்ட். 'க்ளோஸ் அப்ல' கொஞ்சம் பாலன்ஸ் பண்ணிடலாம். அதுக்கு முன்னால சில பயிற்சிகள் தேவைப் படும். உங்கள் மக நடந்து வர்றப்ப கொஞ்சம் அழுத்தமா மாஸ்குலைனா இருந்தது. அதைத் திருத்தணும். வேற வேற காஸ்ட்யூம்ஸ் போட்டுப் பார்க்கணும். எடுக்கிறது பெரிய படம். புதுமுகத்தைத்தான் ஹீரோயினாப் போடறதுன்னு தீர்மானிச்சாச்சு. இது வரை எட்டு ஒன்பது பெண்களைப் பார்த்துட்டோம். ஒண்ணும் சரிப்பட்டு வரலை. முதமுதலா 'பளிச்'சுன்னு ஒரு பெண்ணைப் பார்க்கறோம்னா அது உங்க பெண் தான். அப்படியே உங்க மாதிரியே முகம்ங்க! அக்கா தங்கச்சின்னுதான் சொல்வாங்க!''

சீனிவாசன் ''எப்படியாவது சான்ஸ் கிடைச்சா இவதான் அதிகமாச் சந்தோஷப் படுவா'' என்றார்.

பத்மாவதி, ''ஆமாம் ஸார். எனக்குப் பதினேழு வயசிலேயே கல்யாணம். பத்தொன்பது வயசிலேயே இவ பொறந்தாச்சு.''

''அதான பார்த்தேன். உங்களுக்கே வயசாகலை இன்னும்.''

''சின்ன வயசிலே என்னை ரொம்ப ஃப்ரீயா வளர்த்தா. எங்கப்பா பெரிய வக்கீல் சேலத்தில. பாட்டு க்ளாஸ், பெயிண்டிங் க்ளாஸ், டான்ஸ் க்ளாஸ்னு போயிண்டிருப்பேன். கல்யாணம் ஆச்சு. இவா ஃபேமிலியே வேற. ரொம்ப கெடுபிடி. அடக்கம். இவா ஃபேமிலிக்கு வந்தப்புறம் மாமியாரும் நாத்தனாரும் ஒண்ணுமே கூடாதுன்னுட்டா. மாமனார் பூச்சி... எனக்கு எல்லாமே முடிஞ்சு போச்சு. அதனாலதான் என்னால சாதிக்க முடியாததையெல்லாம் என் மனசுக்குள்ளே இருக்கிற ஆசையையெல்லாம் என் டாட்டர் மூலமா நிறைவேத்திக்கணும்னு ஒரு மாதிரி வெறி ஸார்! முதல் காரியமா இவரை நச்சரிச்சுப் பெங்களூருக்கு மாற்றல் வாங்கிண்டு வந்துட்டோம். செலவானாலும் ஆறதுன்னு... இவளை நல்ல கான்வெண்டுக்கு அனுப்பிச்சு...''

''ஒரே பெண்ணா?''

''ஆமாம் ஸார்.''

சீனிவாசன், ''அதுக்காக எங்காத்தில சண்டையே போட்டாச்சு! அண்ணா கூட.''

''இவர் அப்பிராணி. எதுவும் அதட்டிக் கேட்கவே மாட்டார். கூடப் பிறந்தவா இவர் தலையில மிளகாய் அரைப்பா. காட்டிண்டே இருப்பார்.''

''அதெல்லாம் ஸாருக்கு எதுக்கு? நம்ம

மத்யமர்: வாசகர் விமர்சனம்

மத்தியதர வகுப்பினரின் பலங்கள், பலவீனங்கள் இவற்றைப் பிரதிபலிப்பது போல் பல சிறுகதைகளை எழுதி வருவார் சுஜாதா. கரு, அதனைக் கையாண்டுள்ள உத்தி, நடை, போன்ற பல அம்சங்களையும் கருத்தில் கொண்டு அவற்றுள் ஏதேனும் ஓர் அம்சத்தை மட்டும் தேர்ந்தெடுத்துத் தபால் கார்டில் எழுதி அனுப்பப்படும் விமர்சனங்களை வரவேற்கிறோம். தலைப்புத் தந்து, சிறுகதையின் பலத்தை மட்டுமின்றி பலவீனமிருப்பின் அதனையும் விமர்சிக்கலாம். பிரசுரமாகும் விமர்சனங்களுக்கு ரூ. 25 சன்மானம். சிறந்த விமர்சனத்துக்கு ரூ. 50 சிறப்புப் பரிசு.

இந்த வாரக் கதைக்கு முடிவு தேதி 24.4.90.

'ஒரு கல்யாண ஏற்பாடு' என்ற சுஜாதாவின் சென்ற வாரக் கதைக்கான விமர்சனம் அடுத்த இதழில் வெளியாகும். சுஜாதாவின் அடுத்த சிறுகதை மே 6 — ஆம் தேதி இதழில் வெளியாகும்.



ஃபேமிலி மேட்டர்ஸ்?"

டைரக்டர் எழுந்து, "அப்ப ஒரு மணிக்கு போன் பண்ணுங்க மெட்றாஸ் எப்ப வர்றதுன்னு சொல்லிடறேன்" பத்மாவதியைப் பார்த்து, "நீங்க கவலைப்படாதீங்கம்மா. உங்க ஆசைகள் நிறைவேற என்னால இயன்றதைச் செய்யறேன்."

மூவரும் ஓட்டலை விட்டுப் புறப்பட்டு லாங்க்ஸ் ரோடு வந்து ஆட்டோ தேடினார்கள்.

"நல்ல மனுஷன்" என்றார் சீனிவாசன். "சட்டுன்னு படம் பேர் வரலை பார்த்தியா?"

"பெரிய டைரக்டராம். இதுவரை எட்டு படம் எடுத்திருக்கார். அத்தனையும் 'ஹிட்'டாம்."

"மம்மி அந்த 'பொட்டிக்'ல பர்ப்பிள் யெல்லோ டிரஸ் ஒண்ணு வெச்சிருந்தது. பார்த்தியோ, ஃபாபுலஸ்!"

"சான்ஸ் குடுப்பாங்கிறியா பத்மா?"

"குடுத்துடுவான். ஸ்ரீதேவி மாதிரி வரப் போறா, பாருங்கோ."

"என்ன லதா?" என்று தலையைத் தட்டிக் கொடுத்தார்.

"எனக்கு சினிமாவில ஆசையே இல்லைப்பா. போறும்!"

"அதானே..." என்று சீனிவாசன் பத்மாவதியைப் பார்க்க. "அதெல்லாம் இல்லை. இவளை எப்படியாவது தலையால தண்ணி குடிச்சாவது படத்தில சான்ஸ் வாங்கிக் கொடுக்கப் போறேன். வாழ்க்கையில நான் ஒருத்தி கஷ்டப்பட்டது போதும். உங்கம்மாவோட அடுப்படியில கத்தரிக்கா வதக்கல் கறி, கோஸ் மரின்னு வேளா வேளைக்குப் பதினைஞ்சு வருஷமா சமைச்சுப் போட்டுட்டு என் எல்லாத் திறமையையும் மறந்து போய்... போதும்! எம் பொண்ணு என் மாதிரி கஷ்டப்பட வேண்டாம். உங்க அத்தையும் பாட்டியும் சேர்ந்துண்டு சமையல் உள்ளே என்னை ரேக்கிண்டு இருப்பா நாள் பூரா. உங்க அப்பா பாட்டுக்குப் புத்தகம் படிச்சுண்டு இருப்பார். எத்தனை பாத்திரம் தேச்சாச்சு. எத்தனை பேருக்குச் சமையல் பண்ணியாச்சு...? எத்தனை அபார்ஷன்!"

"சும்மா எக்ஸாஜிரேட் பண்ணாதே. ஒரே ஒரு தடவைதான் ஆச்சு! அதுவும் நீயா வேண்டிக் கேட்டுண்டது..."

"வேண்டாம்பா நான் பட்ட கஷ்டம்... என் பொண்ணுக்கு வேண்டாம்.

"மம்மி, இதையெல்லாம் எங்கிட்ட எதுக்குத்தான் சொல்றியோ?"

"நீயும் தெரிஞ்சுக்கணும். நீ குழந்தை இல்லை. உனக்காக உங்கம்மா சின்ன வயசில கஷ்டப்பட்டது, விட்டுக் கொடுத்தது விவரம் தெரிய வேண்டாமோ!"

"தெரிய வேண்டாம்..."

"அப்ப இந்த சான்ஸ் வேண்டாமா?"

சீனிவாசன், "அப்படி யார் சொன்னா? முதல்ல சான்ஸ் கிடைக்கட்டும்."

"முதல்ல ஆட்டோ கிடைக்கட்டும்" என்றாள் லதா.

அங்கிருந்து சீனிவாசன் ஆபீஸ் போய் விட்டார். லதா டான்ஸ் கிளாஸுக்குப் போய் விட்டாள். பத்மா சரியாக ஒரு மணிக்கு டைரக்டருக்கு போன் செய்தாள்.

"யாரு?" என்றார் டைரக்டர் குரலில் பரிச்சயம் காட்டாமல்.

''கார்த்தாலே வந்தோமே, மிஸஸ் சீனிவாசன்.''

''ஓ! அந்த உயரமான பொண்ணு, உயரமான தாய்!''

''ஆமாங்க!''

''என்ன விஷயம்?''

''நீங்கதான் ஒரு மணிக்கு போன் பண்ணச் சொன்னீங்க!''

''ஓ! ஆமாம், ஆமாம்!'' கொஞ்ச நேரத் தயக்கத்துக்குப் பின், ''ஒண்ணு செய்யுங்க. உங்களால இங்கே வர முடியுமா, மறுபடி?''

''எப்ப?''

''உடனே. ஏன்னா ப்ரொட்யூஸரும் அவர் மனைவியும் வர்றாங்க. உங்க மகளையும் புருஷனையும் கூட்டிக்கிட்டு உடனே வந்திங்கன்னா அவங்க ஒரு முறை பார்த்துட்டு ஓகே சொல்லிட்டாங்கன்னா அக்ரிமெண்ட் கூடப் போட்டு வாங்கிடலாம்.''

''ஸ்க்ரீன் டெஸ்ட்?''

''அது அப்புறம் மெட்ராஸ்ல வெச்சுக்கலாம். எனக்கு என்னவோ உங்க டாட்டர் ஃபேஸ் செட் ஆயிடும்னு தோணுது. ம. வில டான்ஸ் ஆடினான்னீங்களே, அது காஸட் இருக்கா?''

''இல்லையே!''

''பரவாயில்லை. நீங்க அவங்களை அழைச்சுக்கிட்டு உடனே வாங்க.''

பத்மாவதி தன் கணவனின் அலுவலகத்துக்கு போன் செய்து லதாவை டான்ஸ் கிளாஸிலிருந்து அழைத்துக்கொண்டு நேராக ஓட்டலுக்கு வந்து சேரும்படி சொன்னாள்.

பத்மாவதி 3040 — ஆம் நம்பர் அறையின் கதவைத் தட்டியபோது டைரக்டர்தான் திறந்தார்.

''அவங்க வரலை?'' என்றார் டைரக்டர் சற்று திகைத்து.

''போன் பண்ணியிருக்கேன். வந்துடுவாங்க.''

''ஒரு நிமிஷம். சட்டை மாத்திக்கிட்டு வந்துடறேன். ப்ரொட்யூஸரும் அவங்க மனைவியும் மற்றொரு ரூம்ல தங்கியிருக்காங்க. எல்லாரும் போகலாம் உட்காருங்க.''

''பரவாயில்லை.''

அறையில் பிரம்புத் தட்டில் நிறைய பழங்களும் பாட்டிலும் இருப்பதைப் பார்த்தாள். ம. வி. மௌனமாக பிம்பங்களை மாற்றிக் கொண்டிருந்தது.

''உங்க பேர் கேட்டு வெச்சுக்கலை'' என்று ஒரு ஜிப்பா அணிந்து கொண்டார்.

''மிஸஸ் சீனிவாசன்.''

''மிஸஸ்ஸை விடுங்க. அப்பா அம்மா வெச்ச பேரு?''

''பத்மா, பத்மாவதி.''

''பத்மா! உங்க டாட்டருக்கு நல்ல எதிர்காலம் அமைக்க உங்ககிட்ட இருக்கிற ஆர்வத்தை நான் பாராட்டறேன். நீங்க சொன்னது மனசில ஆழமாப் பதிஞ்சுடுத்து. உங்க பெண்ணுக்கு சினிமாவில சான்ஸுக்காக நீங்க என்ன வேணாலும் செய்வீங்க, இல்லே?''

பத்மா டைரக்டரை நிமிர்ந்து பார்த்தாள்.

''நம்ம பிரயத்தனத்தில முடிஞ்சது என்ன வேணாலும் செய்யலாம். கடவுள் கடாட்சம்னு ஒண்ணு இருக்கு இல்லையா?''

''நான் அதைச் சொல்லலை.''

''பின்னே?''

டைரக்டரின் முகம் சற்றே அசட்டுத்தனமானதாயிற்று. குரலும் தளர்ந்தது. முதல் வரி சரியாகக் கேட்கவில்லை.

''...உங்க விருப்பமில்லாம நான் எதுவும் செய்ய விரும்பலை. உங்களுக்கு இஷ்டம்னா கதவை உள்பக்கம் சாத்திக்கலாம். இல்லை, கதவு திறந்தே இருக்கு.''

பத்மாவதியின் மேலுதட்டில் சற்று வியர்த்தது. மறுபடி ஒருமுறை டைரக்டரை நிமிர்ந்து பார்த்தாள். மூக்குக் கண்ணாடியில் லேசாகக் கறுப்பு ஏறியிருந்தது. முகத்தில் சிறு வயது அம்மைத் தழும்புகள் பாக்கியிருக்க தலை படிய வாரி, ஜிப்பா கழுத்தில் திறந்து, அதில் சங்கிலி தடிமனாகத் தெரிந்தது. அயல்நாட்டு வாசனை விரவியிருந்தது. ஒரு விரலில் இரண்டு மோதிரங்கள் போட்டிருந்தார்.

பத்மாவதி கீழே லாபிக்கு வந்த போது தான் சீனிவாசனும் லதாவும் வந்து சேர்ந்தார்கள்.

''மோதிரம் புதுசாம்மா?'' என்றாள் லதா.

''ஆமாம். உனக்காக.''

எங்கள் ஊரில் வருவாய்த்துறை ஊழியர்கள் 02.04.90 அன்று, தங்கள் கோரிக்கைகள் நிறைவேற ஊர்வலம் போனார்கள். அப்போது அவர்கள் எழுப்பிய கோஷங்களில் ஒரு பகுதி இதோ:—

சிட்டா, பட்டா நாங்கதான்!
செத்தா, பெத்தா நாங்கதான்!
ஓ.ஏ.பி. (O.A.P.)யும் நாங்கதான்!
வி.ஐ.பி. (V.I.P.) யும் நாங்கதான்!

மற்ற கோஷங்களிலிருந்து சற்று வித்தியாசமாக இல்லை...?

— வி. ரேவதி.



பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 72

தியாகப் போட்டி

மழவர் குலத்தில் உதித்தவரும் சிவஞான கண்டராதித்த சோழரின் வாழ்க்கைத் துணைவியுமான செம்பியன் மாதேவியை, 'ஸ்ரீ மதுராந்தகத் தேவரான உத்தம சோழ தேவரைத் **திருவயிறு வாய்த்த** உடைய பிராட்டியார்' என்று அவர் காலத்திய கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. சாதாரணமாகத் தாய்மார்கள் தம் குழந்தைகளைப் பத்து மாதம் வயிற்றில் வைத்துச் சுமந்தே பெறுவார்கள். சில தாய்மார்கள் வேறு பெண்மணிகளின் வயிற்றில் பிறந்த குழந்தைகளைத்தங்கள் குழந்தைகளைப்போலவே வளர்ப்பதும் உண்டு.

செம்பியன் மாதேவி வேறொரு பிள்ளையை வெகு காலமாகத் தம் பிள்ளையென வளர்த்து வந்த காரணத்தினால், அந்த உண்மையை அறிந்திருந்த ஒருவர் மேற்கண்டவாறு 'உத்தம சோழரைத் திரு வயிறு வாய்த்தவர்' என்று கல்வெட்டிலே குறிப்பிட்டார் போலும்!

உத்தம சோழர் ஐந்து பிராயத்துச் சிறுவனாயிருந்த போதே செம்பியன்மாதேவி அவனையும் வாணி அம்மையையும் பார்க்கும்படி நேர்ந்தது. பல ஆண்டுகள் கழித்து வாணி அம்மையைச் சந்தித்ததும் அவளுடைய க்ஷேம லாபங்களைப் பற்றிச் செம்பியன் மாதேவி அன்புடன் விசாரித்தார். வர்ணியின் குழந்தை என்று எண்ணிய சேந்தன் அமுதனிடம் இயற்கையாகவே அம்மூதாட்டிக்கு அன்பு சுரந்தது. குழந்தையைப் பற்றி விசாரித்த போது வாணி அம்மையின் முகத்தில் திகைப்பும் அச்சமும் உண்டானதைக் கண்டார். முதலில், அதற்கு வேறு காரணங்கள் இருக்கக் கூடும் என்று எண்ணினார். வாணி பேசத் தெரியாதவளாய் இருந்தபடியால் திட்டமாக அவளிடமிருந்து ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் வாணி அம்மை ஒரு காலத்தில் தமக்குச் செய்த உதவியைக் கருதியும், அவளுடைய குழந்தையிடம் ஏற்பட்ட பாசங் காரணமாகவும், தாயும் பிள்ளையும் கவலையின்றி வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். தஞ்சை நகருக்கு அருகில் குடியிருந்து தளிக் குளத்தார் கோயிலுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்து வருவதற்காக மானியங்களும் அளித்தார்.

சேந்தன் அமுதன் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிவ பக்தியிலும் சிறந்து வளர்ந்து வந்தான். அன்னைக்கு உதவியாகப் புஷ்பத் திருப்பணி செய்வதிலும்மிக்கஊக்கம்காட்டி வந்தான். இதைக் காணக் காணச் செம்பியன் மாதேவிக்கு அவனிடம் இயற்கையாகச் சுரந்த அன்பு வளர்ந்து வந்தது. ஒருநாள் அவருடைய மனத்தில் விசித்திரமான ஐயம் ஒன்று தோன்றியது. அது அவருக்கு ஒரே சமயத்தில் இன்

அமரர் கல்கி

பத்தையும் வேதனையையும் இனந்தெரியாத பீதியையும் உண்டாக்கியது. எத்தனையோ விதமாக அந்த ஐயத்தைப் போக்கிக் கொள்ள முயன்றும் இயலவில்லை. பிறந்து சில தினங்களில் இறந்து போன தம் குழந்தையைப் பற்றிய நினைவு அடிக்கடி எழுந்த வண்ணமிருந்தபடியால் அவர் உள்ளம் அமைதி கொள்ளவில்லை.

கடைசியாக ஒருநாள் வாணி அம்மையிடம் தெளிவாகக் கேட்டுத் தெரிந்து கொள்வது என்று தீர்மானித்தார். வாணியைத் தனியாக அழைத்து வரும்படி செய்தார். இறந்து போன தம் குழந்தையை வாணியிடம் கொடுத்து ஒருவரும் அறியாமல் புதைத்து விட்டு வரச் சொன்னார் அல்லவா? அவ்வாறு புதைத்த இடத்தில் அதன் ஞாபகார்த்தமாகப் பள்ளிப்படைக் கோயில் ஒன்று எழுப்ப வேண்டும் என்று சொல்லி, புதைத்த இடத்தைச் சொல்லும்படி கேட்டார். இந்தப் பழைய நிகழ்ச்சியைப் பற்றிய ஞாபகமே அவருக்குத் துன்பம் அளித்தது. செவிடும் ஊமையுமான வாணியிடம் இதையெல்லாம் சமிக்ஞை பாஷையினால் கேட்க வேண்டியதாக இருந்தது. அது அவருக்கு மேலும் சொல்ல முடியாத வேதனையை அளித்தது.

அவருடைய கேள்விகளுக்கு விடை கூற வாணி மிகவும் தயங்கினாள். கடைசியாக, பேரரசியின் கட்டளையை மீற முடியாமல் உண்மையைச் சொல்லி விட்டாள். புதைப்பதற்காகத் தன்னிடம் கொடுக்கப்பட்ட குழந்தை உண்மையில் இறக்கவில்லை என்பதையும், அதைத் தனக்குக் கருத்திருமன் என்பவன் எடுத்துக்காட்டியதையும், பின்னர் அரசியிடம் திரும்பி வந்தால் என்ன நேரிடுமோ என்று அஞ்சிக் கருத்திருமனுடன் திருமறைக்காடு சென்றதையும், சில காலத்துக்கெல்லாம் கருத்திருமன் தன்னை விட்டு விட்டுப் போய்விட்ட படியால், தான் திரும்பப் பழையாறைக்கு வந்ததையும் விவரமாகக் கூறினாள்.

சேந்தன் அமுதன் உண்மையிலேயே தன் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைதான் என்பதை அறிந்த செம்பியன் மாதேவி ஒரு புறத்தில் எல்லையற்ற ஆனந்தம் அடைந்தார். அவர் உடம்பெல்லாம் சிலிர்த்துப் பூரித்தது. கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்தது. ''மகனே!'' என்று கூவிச் சேந்தன் அமுதனைக் கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. ஆயினும், அந்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டார். அந்த உண்மை வெளியானால், அதிலிருந்து ஏற்படக் கூடிய குழப்பங்களை எண்ணி ஒருபுறம் பீதி கொண்டார். ''உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் இறைவனுடைய குழந்தைகளே'' என்று கருதக்கூடிய உயர் ஞான பரிபக்குவத்தை அவருடைய உள்ளம் அடைந்திருந்தபடியால், பெற்ற பிள்ளையிடம் தாய்க்கு ஏற்படக்கூடிய பாசத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவரால் முடிந்தது. ''அரண்மனையில் வளர்ந்தால் என்ன? குடிசையில் வளர்ந்தால் என்ன? இந்த நிலையில்லா மனித வாழ்வின் சுகபோகங்கள் எல்லாம் வெறும் மாயை அல்லவா? உலக வாழ்வை நீத்த பிறகு அடைய வேண்டிய கதி அல்லவோ முக்கியமானது? என் பதி அரச போகங்களை வெறுத்துச் சிவபெருமானுடைய இணையடி நிழலில் திளைத்து வாழ்க்கை நடத்தியபடியால் அவருக்குப் பிறந்த பிள்ளை இவ்விதம் குடிசையில் வாழ்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்றான் போலும்!'' என்றெல்லாம் அடிக்கடி எண்ணி மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டார்.

ஆயினும் சேந்தன் அமுதன் தமது வயிற்றில் பிறந்த மகன் என்று அறிந்ததினால், தாம் வளர்த்த குமாரனாகிய மதுராந்தகனைச் சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்கக் கூடாது என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் வலுப்பட்டது. முன்னமேயே கண்டராதித்தரிடம் தாம் செய்த குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டு மன்னிப்பும் பெற்றிருந்தார். ''உன் வயிற்றில் பிறந்த குழந்தையானால் என்ன? அநாதைப் பெண்மணிக்குப் பிறந்த குழந்தையாயிருந்தால் என்ன? இறைவனுடைய திருக்கண்ணோட்டத்தில் இருவரும் சமமானவர்கள்தான். ஆகையால் மதுராந்தகனை உன் மகனைப் போலவே வளர்த்து வா! ஆனால் சோழ சிங்காதனத்தில் அவன் ஏற வேண்டும் என்று ஆசைப்படாதே! அதற்கு இணங்கவும் இணங்காதே! அது நான் பிறந்த சோழ குலத்துக்குத் துரோகம் செய்ததாகும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதாயிருந்தால் நீ உண்மையை ஒப்புக் கொள்வதற்கும் தயங்காதே!'' என்று கண்டராதித்தர் தேவியிடம் சொல்லி அவ்வாறு வாக்குறுதியும் பெற்றிருந்தார். அந்த வாக்குறுதியை எப்படியும் நிறைவேற்றி வைக்கப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி நிச்சயித்திருந்தார்.

ஆனால் தங்களுடைய சொந்தக் குமாரன் வாணி அம்மையின் மகனாகக் குடிசையில் வளர்ந்து வருவதை அறியாமலேயே அந்த மகான் சிவபதம் அடைந்து விட்டார். இது தெரிந்திருந்தால், அவர் என்ன செய்திருப்

பார்? சேந்தன் அமுதன் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டிருப்பார்! — இதைக் குறித்துச் செம்பியன்மாதேவி எவ்வளவோ முறை சிந்தனை செய்தார். ''இறைவனுடைய சித்தத்தினால் இவ்விதம் நேர்ந்து விட்டது. ஊமையின் மகன் அரண்மனையில் வளர வேண்டும் என்பதும் பேரரசரின் மகன் குடிசையில் வளர வேண்டும் என்பதும் இறைவனுடைய திருவுள்ளம். அதில் நாம் குறுக்கிடக் கூடாது. அதை மாற்ற முயல்வதால் பல குழப்பங்கள் விளையும். தம் வளர்ப்புக் குமாரனின் மனம் அதனால் பெரிதும் புண்படும். அத்தகைய பாவத்தைச் செய்யக் கூடாது!'' என்று முடிவாகத் தீர்மானித்துக் கொண்டார்.

இறைவனுடைய திருவருளில் அவர் கொண்டிருந்த இணையில்லாத நம்பிக்கையின் துணையினாலேதான் மேற்கூறிய தீர்மானத்தை அவர் காரியத்தில் நிறைவேற்றுவதும் சாத்தியமாயிற்று.

ஆயினும் அடிக்கடி சேந்தன் அமுதனைப் பற்றி அவரால் நினைக்க முடியாமலிருப்பதில்லை. அவனுடைய நினைவு வரும்போதெல்லாம் இயற்கையான தாய்ப் பாசம் அவருடைய உள்ளத்தில் பொங்கிப் பெருகாமலுமிருப்பதில்லை. இந்தப் போராட்டமானது அவருடைய இதய ஆழத்திலே பல ஆண்டு காலமாக நிகழ்ந்து கொண்டிருந்தது.

நெடுங்காலமாக அணை போட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த வெள்ளம் திடீரென்று ஒருநாள் அணையை உடைத்துக் கொண்டு கிளம்புவது உண்டு அல்லவா? அப்போது வெள்ளம் எவ்வளவு சக்தியுடனும் வேகத்துடனும் பாய்ந்து செல்லும் என்பதைப் பலர் பார்த்து அனுபவித்துமிருப்பார்கள்.

செம்பியன்மாதேவியின் உள்ளத்தில் அணை போட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தாய்ப் பாசமாகிய உணர்ச்சி வெள்ளமும் இப்பொழுது கரையை உடைத்துக் கொண்டு பாய்ந்தது.

முதன் மந்திரி அநிருத்தர் ''**தேவியின் திருவயிற்றில் உதித்த தேவர்**'' என்று குறிப்பிட்டதுதான் அவ்வாறு செம்பியன்மாதேவி உள்ளத்தின் அணை உடைவதற்குக் காரணமாயிற்று.

அந்த வார்த்தைகளை அநிருத்தர் கூறியவுடன், செம்பியன்மாதேவி பத்து மாத காலம் குழந்தையைத் தம் வயிற்றில் வைத்து வளர்த்த அனுபவம் அவ்வளவையும் ஒரு



வினாடிப் பொழுதில் மறுபடியும் அனுபவித்தார். தம்மை மறந்து, தாம் செய்து கொண்டிருந்த சங்கல்பத்தை மறந்து, சேந்தன் அமுதனை ''என் மகனே!'' என்று அழைக்கவும், அவனைத் தழுவிக் கொண்டு கண்ணீர் வெள்ளம் பெருக்கவும் நேர்ந்தது.

இவ்விதம் செம்பியன்மாதேவி உணர்ச்சிப் பெருக்கினால் மெய்மறந்த நிலையில் இருந்தபோதிலும், அமுதன் கூறிய வார்த்தைகள் அவருடைய மனத்தில் நன்கு பதிந்திருந்தன. ''தாயே! என்னை 'மகனே!' என்று அழைக்க இப்போதேனும் தங்களுக்கு உள்ளம் உவந்ததோ?'' என்று கூறினான் அல்லவா? அவ்வார்த்தைகளின் கருத்து என்ன? அமுதனுக்கு அவனைப் பெற்ற அன்னை யார் என்பது முன்னமேயே தெரியுமா? தெரிந்தும் இத்தனை காலம் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தானா?

சற்று நேரம் வார்த்தை சொல்ல முடியாத பரவச நிலையில் இருந்த பிறகு, செம்பியன் மாதேவி தம் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''மகனே! உனக்கு முன்னமே தெரியுமா, நான் உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற பாவி என்று? தெரிந்து என் பேரில் கோபம் கொண்டிருந்தாயா? அதனால் என்னிடம் அதைப் பற்றிக் கேளாமல் இருந்தாயா?'' என்று தழுதழுத்த குரலில் கூறினார்.

அப்போது சேந்தன் அமுதன் கடல்மடை திறந்தது போல் பின்வருமாறு உணர்ச்சி நிறைந்த வார்த்தைகளைப் பொழிந்து தள்ளினான்:—

''தாயே! நான் தங்கள் வயிற்றில் பிறந்த பாக்கியசாலி என்பதைச் சில காலமாக அறிந்திருந்தேன். உலகம் போற்றும் புண்ணியவதியாகிய தாங்கள் ஒரு நாள் என்னை 'மகனே!' என்று அழைக்க வேண்டும் என்று தவம் செய்து கொண்டிருந்தேன். தங்களுடைய மகன் என்ற சொல்லுக்குத் தகுதி யாவதற்குப் பிரயத்தனம் செய்து வந்தேன். அல்லும் பகலும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருந்தேன். தாங்களே என்னை அழைக்காவிட்டாலும் நானே தங்களிடம் வருவதாகத்

தானிருந்தேன். ஆனால் இந்த இராஜ்யத்தின் உரிமை விஷயம் தீரட்டும் என்று காத்திருந்தேன். தங்களை 'அன்னை' என்று அழைக்கும் உரிமையைத்தான் நான் வேண்டினேன். இராஜ்யத்துக்கு உரியவர் யார் என்று நிச்சயமான பிறகு தங்களிடம் வந்து 'தாய்' உரிமை கோர விரும்பினேன். அம்மணி! தங்களுடைய மனம் கோணாமல் நடப்பதற்காக என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பூங்குழலியைத் தியாகம் செய்யவும் சித்தமாயிருந்தேன். நல்ல வேளையாக அவளும் தன்னுடைய மனத்தை மாற்றிக் கொண்டான். தாயே! மூன்று நாளைக்கு முன்பு என் உயிருக்குப் பெரும் அபாயம் வந்தது. தங்களிடம் நானும் பூங்குழலியும் வணங்கி ஆசிபெற்றுக் கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த அபாயம் வந்தது. அந்த அபாயத்திலிருந்து உத்தம நண்பன் ஒருவன் என்னைக் காப்பாற்றினான். அதைப் பற்றி நான் அப்போது அவ்வளவு மகிழ்ச்சி அடையவில்லை. அவனிடம் அவ்வளவாக நன்றி செலுத்தவும் இல்லை. இப்போது அவனுக்கு நான் எவ்வளவு நன்றிக்கடன் பட்டவன் என்பதை உணர்கிறேன். தாங்கள் என்னை 'மகனே' என்று தங்கள் திருவாயினால் அழைத்தீர்கள் அல்லவா? இந்த நாளைக் காண நான் உயிரோடு இருந்தேன் அல்லவா? இதுவே போதும்! நான் பாக்கியசாலி ஆகி விட்டேன். இனி ஒன்றும் எனக்கு வேண்டாம். இங்கு இப்போது நடந்தது இங்கு உள்ளவர்களுக்கு மட்டும் தெரிந்திருக்கட்டும். வேறு யாருக்கும் தெரிய வேண்



டாம். இராஜ்யத்தில் மேலும் குழப்பம் விளைய வேண்டாம்! கோடிக்கரைக்கு உடனே புறப்பட்டுப் போவதற்கு எனக்கும் பூங்குழலிக்கும் விடைகொடுத்து அனுப்புங்கள்!''

இந்த வார்த்தைகள் பெரிய பிராட்டி செம்பியன்மாதேவியின் உள்ளத்தில் உண்டாக்கிய உணர்ச்சிப் புயலைச் சொற்களினால் விவரிக்க முடியாது.

விம்மலுடனும் கண்ணீருடனும் கலந்த மெல்லிய குரலில், ''குழந்தாய்! நீயே என் உத்தமப் புதல்வன்! நீயே தெய்வாம்சம் பொருந்திய என் கணவரின் உத்தமக் குமாரன்!'' என்று கூறினார்.



இவ்வளவு நேரமும் சுந்தர சோழர், சின்னப் பழுவேட்டரையர், இளைய பிராட்டி குந்தவைதேவி ஆகியவர்கள் பிரமித்துப் போயிருந்தார்கள். அங்கே வெளியான இரகசியமும், அதனால் விளையக் கூடிய பலாபலன்களும் அவர்களுடைய உள்ளங்களில் பெருங் கொந்தளிப்பை உண்டாக்கியது.

அவர்களில் குந்தவைதான் முதலில் பேசும் சக்தி பெற்றாள். ''தந்தையே! பெரிய பிராட்டியார் மதுராந்தகருக்குப் பட்டம் கட்டக் கூடாது என்று பிடிவாதம் பிடித்ததின் காரணம் இப்போதுதான் தெரிகிறது!'' என்றாள்.

சுந்தர சோழரும் அப்போது பிரமிப்பும் திகைப்பும் நீங்கி, ''ஆமாம், குமாரி! ஆனால் அந்தக் காரணம் இப்போது நீங்கி விட்டது. என் பெரிய அன்னையின் திருவயிற்றில் உதித்த உத்தமப் புதல்வனுக்கு முடிசூட்டுவதில் இனிமேல் அவருக்கு ஆட்சேபம் இருக்க முடியாது அல்லவா?'' என்றார்.

செம்பியன்மாதேவி சிறிது பரபரப்புடன் சுந்தர சோழரைப் பார்த்து, ''சக்கரவர்த்தி! என் குமாரன் சற்று முன் கூறிய வார்த்தைகளைக் கேட்கவில்லையா? இந்தச் செய்தி இங்கே உள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியவே வேண்டாம்! என் மகன் இராஜ்ய உரிமை கோரவில்லை. அதைத் தங்கள் முன்னால் அவன் வாயினாலேயே தெரிவித்து விட்டானே!'' என்றார்.

''ஆம், பிரபு! இந்தச் சோழ இராஜ்யத்தில் ஏற்கெனவே உள்ள சிக்கல்கள் போதும்! என்னால் வேறு புதிய சிக்கல் உண்டாக வேண்டாம். எனக்கு விடை கொடுங்கள்! என்னையும் என்னை மணந்து கொள்ள உவந்த பூங்குழலியையும் ஆசிர்வதித்து அனுப்புங்கள்!.... பூங்குழலி! இங்கே வா!'' என்றான் அமுதன்.

வாசற்படியின் அருகில் நின்று கொண்டிருந்த பூங்குழலி உள்ளே வந்தாள். சேந்தன் அமுதனும் பூங்குழலியும் முதலில் செம்பியன்மாதேவிக்கு நமஸ்காரம் செய்தார்கள். பின்னர், சக்கரவர்த்தியை வணங்கினார்கள்.

எழுந்து நின்றதும் சேந்தன் அமுதன் ''பிரபு! நாங்கள் உடனே கோடிக்கரை போக விடை கொடுங்கள்! தாயே! விடை கொடுங்கள்!'' என்றான்.

செம்பியன்மாதேவி சக்கரவர்த்தியைப் பார்த்து, "ஆம், ஐயா! இவர்களுக்கு விடை கொடுத்து அனுப்புவோம். எனக்கு விருப்பமான போது நான் கோடிக்கரை சென்று இவர்களைப் பார்த்துக் கொள்கிறேன்!" என்றார்.

சுந்தர சோழர் "அது ஒருநாளும் இயலாத காரியம். நான் விடை கொடுக்க மாட்டேன்!" என்றார்.

முதன் மந்திரி குறுக்கிட்டு, "சக்கரவர்த்தி! எதுவும் இப்போது தீர்மானம் செய்ய வேண்டாம். இன்னும் சில தினங்கள் இவர்கள் என் இல்லத்திலேயே இருக்கட்டும். பெரிய பிராட்டியின் மகன் கிடைத்து விட்டார். ஆனால் சின்னப் பழுவேட்டரையரின் மருமகர் கிடைக்கவில்லை. அவரைப் பற்றிய செய்தி வரும் வரையில் இவர்கள் இங்கு இருக்கட்டும். அதுவரை இங்குள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் இந்த இரகசியம் தெரிய வேண்டாம்!" என்றார்.

"அருள்மொழியிடமாவது அவசியம் சொல்லித்தான் ஆக வேண்டும்!" என்றாள் இளையபிராட்டி குந்தவை தேவி.

"வேண்டாம், வேண்டாம்! அது மட்டும் செய்ய வேண்டாம்," என்று கேட்டுக் கொண்டான் சேந்தன் அமுதன்.

கடைசியாகச் சக்கரவர்த்தி, "தேவி! எது எப்படியானாலும் ஆகட்டும். இத்தனை தினங்கள் கழித்து இன்றைக்குத் தங்கள் திருவயிற்றில் உதித்த மகன் உங்களிடம் வந்திருக்கிறான். உங்களை உடனே பிரிப்பதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். சில தினங்களாவது இங்கே நீங்கள் சேர்ந்திருங்கள். என் அரண்மனையிலோ, முதன் மந்திரியின் மாளிகையிலோ தங்கியிருங்கள். இராஜ்ய உரிமையைப் பற்றி முடிவான தீர்மானம் ஆன பிறகு இவர்களைக் கோடிக்கரை அனுப்புவது பற்றி யோசிக்கலாம். அதுவரையில் இங்குள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் இச் செய்தி தெரிய வேண்டாம்!" என்றார்.

அத்தியாயம் 73

வானதியின் திருட்டுத்தனம்

அருள்மொழிவர்மரின் மனம் பெரிதும் கலக்கம் அடைந்திருந்தது. இராஜ்ய உரிமை சம்பந்தமாகச் சோழ நாட்டில் எழுந்த கொந்தளிப்பின் வேகம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்ததே அதற்கு முக்கிய காரணமாகும். அவர் மக்களை அமைதிப்படுத்துவதற்காகப் போன இடங்களிலெல்லாம் மக்களின் ஆவேசந்தான் அதிகமாயிற்று. "பொன்னியின் செல்வரே எங்கள் மன்னர்!" "அருள்மொழிவர்மரே திருமுடி சூட வேண்டும்!", என்பவை போன்ற கோஷங்கள் எங்கெங்கும் எழுந்து நாலாபுறமும் முழங்கி எதிரொலி செய்தன.

இவற்றுடன் போட்டியிட்டுக் கொண்டு "பழங்குடி மக்களான பழுவேட்டரையர்கள் வாழ்க!" "கொடுங்கோலரான கொடும்பாளூர் வேளார் வீழ்க!" என்பவை போன்ற கோஷங்களும் சிற்சில இடங்களில் கேட்கும். அத்தகைய இடங்களில் அதிக பலம் தேடலாம் என்று இளவரசர் நெருங்கிச் சென்றால், உடனே அங்குள்ளவர்களும் "பொன்னியின் செல்வர் வாழ்க!" என்று முழங்கத் தொடங்கினார்கள்.

ஏன்? கோட்டைக் காவலுக்காக மாற்றி நியமிக்கப்பட்டிருந்த பழுவூர் வீரர்கள் கூடப் பொன்னியின் செல்வரைக் கண்டதும் தங்கள் பழைய கோஷங்களைக் கைவிட்டு, "அருள்மொழிவர்மரே திருமுடி புனைய வேண்டும்!" "ஈழங் கொண்ட வீராதி வீரர், பொன்னியின் செல்வர் நீடூழி வாழ வேண்டும்!" என்று முழங்கலானார்கள்.

இவ்வாறு தம்முடைய முயற்சி பொது மக்களிடையிலும் போர் வீரர்களிடத்திலும் வெற்றி பெறாமல் போனது மட்டுமின்றி, தம் கருத்துக்கு மாறான சூழ்நிலை பலப்பட்டு வருவதைக் கண்டு பொன்னியின் செல்வர் சங்கடம் அடைந்தார். சில தினங்களாக மதுராந்தகத் தேவர் காணப்படாமல் இருந்தது வேறு அவருடைய கவலையை அதிகமாக்கிற்று. இதன் பொருட்டுச் சின்னப் பழுவேட்டரையர் கொடும்பாளூர் வேளார் மீது குற்றம் கூறிக் கொண்டிருந்தது அவருக்குத் தெரிந்திருந்தது. அதற்குக் காரணம் இல்லையென்று சொல்ல முடியாது. அருள்மொழிவர்மருக்கே அதைப் பற்றிச் சிறிது சந்தேகம் இல்லாமற் போகவில்லை. தமக்குப் பட்டம் சூட்டி விட வேண்டும் என்று கொடும்பாளூர் வேளார், திருக்கோவலூர் மலையமான் ஆகியவர்கள் உறுதி கொண்டிருந்தார்கள். அவர்களுடன் முதன் மந்திரி அநிருத்தரும் கலந்து சதி செய்வது போலத் தோன்றியது. இவர்கள் எல்லாரும் சேர்ந்துதான் மதுராந்தகத் தேவரை எங்கேனும் மறைத்து வைத்து விட்டார்களோ, என்னமோ? அல்லது ஒருவேளை

மதுராந்தகத் தேவரின் உயிருக்கே அபாயம் விளைவித்து விட்டார்களோ?

அவருடைய அருமைத் தமையனாரான ஆதித்த கரிகாலரின் மரணத்துக்குப் பழுவேட்டரையர்களும் சம்புவரையர்களுமே பொறுப்பாளிகள் என்று வேளாரும் மலையமானும் கருதினார்கள். அதற்குப் பழிக்குப் பழி வாங்குவதாக எண்ணிக் கொண்டு மதுராந்தகருக்கு ஏதேனும் தீங்கு செய்து விட்டார்களோ?

ஆகா! இவர்களுக்கு என்ன? யோசனையின்றி ஏதோ செய்து விடுகிறார்கள். கடைசியாகப் பழி எல்லாம் தம் தலையில் அல்லவோ சார்ந்து விடும்?

இன்றைக்குச் சோழ நாட்டு மக்கள் இவர் பெயரைக் கூறி வாழ்த்துகிறார்கள். இவரைச் சிங்காதனம் ஏற வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். பொது ஜனங்களின் மனம் இப்படியே என்றுமிருக்குமா? மக்களின் உள்ளம் அடிக்கடி சலிக்கும் இயல்பு உடையதல்லவா? இதே ஜனங்கள் நாளைக்கு இவர் பேரிலேயே பழி கூறினாலும் கூறுவார்கள். சிங்காதனம் ஏறுவதற்காகச் சித்தப்பன் மதுராந்தகனைக் கொலை செய்வித்த பாதகன் என்று சொன்னாலும் சொல்வார்கள். ஏன்? கடம்பூர் மாளிகையில் ஆதித்த கரிகாலர் இறந்ததற்குக் கூடத் தம் பேரில் பழி சுமத்தினாலும் சுமத்துவார்கள்? — தெய்வமே! அத்தகைய பயங்கரமான பழிகளைச் சுமப்பதற்காகவா என்னைக் காவேரியில் முழுகிச் சாகாமல் மந்தாகினி தேவி காப்பாற்றினாள்? இன்று தெய்வமாகியிருக்கும் அந்தப் பெண்ணரசிதான் இந்த இக்கட்டான நிலையிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். வாழ்க்கையில் ஒருவன் அடையக் கூடிய அபகீர்த்திகளில் மிகக் கொடிய அபகீர்த்தி என்னைச் சாராமல் தடுத்து அருள் புரிய வேண்டும்.

ஈழநாட்டு இராஜ வம்சத்தில் நெருங்கிய உறவினர் ஒருவரையொருவர் கொன்றுவிட்டுச் சிங்காதனம் ஏறிய வரலாறுகள் அருள்மொழிவர்மரின் உள்ளத்தில் பதிந்திருந்தன. ஆகையால் அம்மாதிரியான இழிவைத் தரும் அபகீர்த்தி தம்மையும் அடையலாம் என்ற எண்ணமே அவருக்குச் சகிக்க முடியாத வேதனையை உண்டாக்கிற்று.

யாரிடமாவது நம் அந்தரங்கத்தைச் சொல்லி யோசனை கேட்கலாம் என்றால், அதற்கும் தகுதியுள்ளவராக யாரும் தென்படவில்லை. அவரைச் சுற்றியுள்ளவர்கள் அனைவருமே அவருக்கு விரோதமாகச் சதி செய்கிறார்கள் என்று தோன்றியது. அவர்களில் சிலர் உண்மையாகவே அவரிடம் விரோத பாவம் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் அவருக்கு நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு பயங்கரமான பழியை அவர் தலையில் சுமத்தி விடுவதற்குப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்த நிலைமையில் யாரை நம்புவது, தம் அந்தரங்கத்தை யாரிடம் வெளியிட்டு ஆலோசனை கேட்பது என்று அவரால் நிர்ணயம் செய்ய முடியவில்லை.

ஏன்? அவரிடம் இணையில்லா அன்பு கொண்டவரும் அவருடைய பக்திக்கு உரியவருமான தமக்கை குந்தவைப் பிராட்டியிடங் கூட அவருக்கு நம்பிக்கை குன்றிவிட்டது. அவரும் தமக்குத் தெரியாமல் ஏதோ காரியம் செய்து கொண்டிருப்பதாகத் தோன்றியது. ஏன்! அவருடைய உயிருக்கு உயிரான வானதி கூட அல்லவா அவருக்குத் தெரியாமல் எதையோ மறைத்து வைக்கப் பார்க்கிறாள்? திருட்டுத்தனமாக எங்கேயோ போய் விட்டு மர்மமான முகபாவத்துடன் திரும்பி வருகிறாள்?....

வேறு எதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம், வானதியின் மர்மமான நடத்தையை இனிப் பொறுக்க முடியாது; — என்று அருள்மொழிவர்மர் தீர்மானித்தார். வானதி சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு எங்கேயோ தனியாகப் புறப்பட்டுப் போவதை அவர் கவனித்தார். உடனே அவளை அறியாமல் பின்தொடர்ந்து செல்லலானார்.

அரண்மனையின் மேல் மாடங்களின் தாழ்வாரங்களின் வழியாகச் சென்று, பின்னர் கீழ் மாடங்களில் இறங்கிச் சென்று, இருபுறமும் நெடிய சுவர்கள் அமைந்த இரகசியப் பாதை வழியாக வானதி மேலும் மேலும் சென்றாள். மதுராந்தகரை இரகசியமாகச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் இடத்துக்குத்தான் அவள் போகிறாள் என்று கருதி அருள்மொழிவர்மர் மிக்க ஆர்வத்துடனும் ஆத்திரத்துடனும் அவளைப் பின் தொடர்ந்து சென்றார்.

கடைசியாக, வானதி மற்றொரு பெரிய அரண்மனைப் பகுதியை அடைந்து அங்கு ஓர் அறைக்குள் பிரவேசித்துக் கதவைச் சாத்த முயன்றாள். அப்போது அருள்மொழிவர்மர் பாய்ந்து சென்று வானதியால் கதவைச் சாத்த முடியாமல் ஒரு காலை அறைக்குள்ளே வைத்தார்.

கதவைச் சாத்த முயன்ற அவளுடைய கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, ''வானதி! உன் திருட்டுத்தனம் என்னிடம் பலிக்காது! இந்த அறையில் நீங்கள் ஒளித்து வைத்திருப்பது யார்?'' என்று கோபமாக வினவினார்.

வானதியோ புன்னகை மலர்ந்த முகத்துடன் ''ஐயா! உண்மையில் என் திருட்டுத்

தனம் பலித்து விட்டது! நான் அழைத்திருந்தால் தாங்கள் வந்திருக்க மாட்டீர்கள். உள்ளே வந்து இங்கு இருப்பது யார் என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றாள்.

மதுராந்தகத் தேவரை எதிர்பார்த்துச் சென்ற அருள்மொழிவர்மர், அங்கே வல்லவரையன் வந்தியத்தேவன் கட்டிலில் படுத்திருப்பது கண்டு வியப்பும் உவப்பும் அடைந்தார்.

அவரைப் பார்த்த வந்தியத்தேவன் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்து, ''ஐயா! வாருங்கள்! இரண்டு நாளாகத் தங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்தப் பெண்களின் சிறையிலிருந்து என்னை எப்படியாவது விடுதலை செய்யுங்கள்!'' என்றான்.

பொன்னியின் செல்வர் விரைந்து சென்று வந்தியத்தேவன் அருகில் அமர்ந்து, ''நண்பா! இது என்ன? இங்கு எப்படி வந்தாய்? பாதாளச் சிறையிலிருந்து தப்பியவன் இந்தப் பெண்களின் சிறையில் எப்படி அகப்பட்டுக் கொண்டாய்? இத்தனை நேரம் நீ ஈழத்தில் இருப்பாய் என்று அல்லவோ நினைத்தேன்? இன்னும் சில நாளைக்கெல்லாம் நானும் அங்கு வந்து உன்னுடனே சேர்ந்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேனே?'' என்றார்.

''ஆம், இளவரசே! இவ்வளவு நேரம் நான் ஈழநாட்டில் இருக்க வேண்டியவன்தான்! அங்கே பாண்டிய வம்சத்தாரின் மணிமுடியையும் அவர்களுக்கு இந்திரன் தந்த இரத்தின ஹாரத்தையும் தேடிக் கொண்டிருக்க வேண்டியவன். சைவப் பைத்தியமான சேந்தன் அமுதனை வைத்தியர் மகன் கொல்லாமல் தடுக்க முயன்று இந்தத் துர்க்கதிக்கு உள்ளானேன். பினாகபாணியின் ஈட்டி என் மேல் பாய்ந்ததும் நினைவிழந்து விழுந்தேன். கண் விழித்துப் பார்த்ததும் இங்கே இருக்கக் கண்டேன். இந்தப் பெண்மணிகளின் சிறைக்கு எப்படி வந்து சேர்ந்தேன் என்பது தெரியாது. கருணை கூர்ந்து நான் இங்கிருந்து தப்பிச் செல்வதற்கு உதவ வேண்டும். இல்லாவிட்டால், தங்கள் அருமைச் சகோதரரும் என் அருமைத் தலைவருமான ஆதித்த கரிகாலரைக் கொன்றதாக என்பேரில் வீண் பழியைச் சுமத்தி விடுவார்கள்!'' என்றான் வந்தியத்தேவன்.

வானதி குறுக்கிட்டு, ''ஐயா! இவர் கூறுவது தவறு. இவர் தப்பி ஓடிப் போனால் தான் அத்தகைய பழி இவர் மீது ஏற்படும். உண்மை வெளியாகும் வரையில் இவர் இங்கேயே இரகசியமாக இருக்க வேண்டும் என்பது தங்கள் திருத்தமக்கையின் விருப்பம்!'' என்றாள்.

''இவள் கூறுவதிலும் உண்மை இருக்கிறது. நீ தப்பி ஓட முயன்றால்தான் அந்தப் பழி உனக்கு ஏற்படும். என்னையும் அது பிடிக்கலாம். அதைக் காட்டிலும் உண்மையில் நடந்ததை உலகம் அறிய நிரூபிப்பது தான் நல்லது. முதலில், என்னிடம் சொல்லு! கடம்பூரில் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லு!'' என்றார் பொன்னியின் செல்வன்.

வந்தியத்தேவனும் தான் அறிந்தபடி நடந்ததையெல்லாம் கூறினான்.

எல்லாவற்றையும் கேட்ட பின்னரும், ஆதித்த கரிகாலரின் மரணம் நேர்ந்தது எப்படி என்பதை இளவரசரால் நிர்ணயிக்க முடியவில்லை.

(தொடரும்)

பாம்புக்குள்ளிருந்து நாய்க்குட்டிகள்!



தென்னாப்பிரிக்காவில் உள்ளது நெல்ஸ்புருக். அங்கு மாக்டா, ஹென்னி தம்பதி தங்கள் பண்ணையில் சுற்றி வரும் பொழுது அதிர்ச்சிக்குள்ளாயினர். மலைப்பாம்பு ஒன்று நகர முடியாமல் இரையை விழுங்கிய நிலையில் இருப்பதைக் கண்டனர். கூடவே, ஓடி வரும் வளர்ப்பு நாய்க்குட்டிகளைக் காணோம்! உடனே, கணவர், மலைப்பாம்பின் தலையை வாயைப் பிளந்து தாழ்த்திப் பிடிக்க மனைவி பாம்பின் வால் புறத்தைப் பயப்படாமல் உயரத் தூக்கி, உப்பியிருந்த பாகத்திற்குக் கைகளைக் கொண்டு வந்து, இரு கைகளாலும் தலைப்புறமாகப் பக்குவமாக உருவ, மலைப்பாம்பின் அகன்ற வாயிலிருந்து மூன்று நாய்க் குட்டிகளும் கீழே விழுந்தன. அவற்றில் இரண்டு இறந்து விட்டிருந்தன. மூன்றாவது நாய்க்குட்டிக்குச் சிறிது உயிர் இருக்க, உடனடியாக முதலுதவி செய்து பிழைக்க வைத்தனர்!

— தகவல்: டி. வி. கிருஷ்ணசாமி.

கல்கி விடுமுறை மலர்-90



விடுமுறையில் செல்வோரின் உல்லாசத்தை அதிகரிக்கும்! அல்லது விடுமுறை அனுபவத்தை வீட்டிலேயே தரும்!

இன்னொரு

அந்த பஸ்ஸை விட்டு இறங்கினால் போதும் போலிருந்தது சுகந்திக்கு.

பேருந்தில் புளி மூட்டை போல் கூட்டம் அடைத்திருந்தது. காலையில் இரண்டு ட்ரிப், மாலை இரண்டு ட்ரிப் என்று மொத்தமே நாலு வேளைதான் அந்த கிராமத்திற்கு பஸ் வரும்.

சுகந்தி டவுனில் படித்து, வளர்ந்தாலும் அவளுக்கு டீச்சர் வேலை கிடைத்தது என்னவோ இந்தக் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியில்தான்.

போஸ்டிங் இந்தக் கிராமத்தில் என்று தெரிந்ததும் வீட்டிலுள்ள அனைவரும் சந்தோஷப்பட்டனர். ஏன், சுகந்தியும்தான்.

தினசரி காலையிலும், மாலையிலும் ஒரு மணி நேரப் பயணம்தான். வீட்டை விட்டு வெளியில் தங்க வேண்டியதில்லை. ஊர் இருக்கும் இருப்பில் வயதுக்கு வந்த தன் பெண்ணுக்கு அருகிலேயே வேலை கிடைத்தது குறித்து அவள் அம்மாவுக்குத்தான் ரொம்ப மகிழ்ச்சி.

ஆனால் இந்த பஸ் பயணமும், பள்ளிக்கூட சூழ்நிலையும் சுகந்தியின் சந்தோஷத்தைப் போக்கடித்தன.

அந்தக் கிராமத்தின் அருகிலுள்ள டவுன் இதுதான் என்பதால் சாமான் மூட்டையுடன் கிராமவாசிகள் பேருந்தை அடைத்துக் கொண்டு விடுவார்கள். சுகந்திக்கு அதில் ஏறி, நிற்க இடம்பிடித்து, வியர்வையும், சாராயமும், விளக்கெண்ணெயும் கலந்த நாற்றத்தைச் சகித்துக் கொண்டு, ஒரு மணி நேரம் பயணம் செய்வதைத் தண்டனை போல் உணர்ந்தாள்.

பள்ளியும் மோசமாயிருந்தது. கிராமத்தின் வசதியின்மையால் இங்கு வரும் டீச்சர்கள் அனைவரும் உடனேயே ட்ரான்ஸ்ஃபருக்கு அப்ளை செய்து விட்டு லீவில் போய் விடுவார்கள்.

ஹெட்மாஸ்டர் அதே ஊர் என்பதால் அவர்தான் அங்கு பல வருடங்களாய் நிரந்தரமாய் இருப்பவர்.

மற்றவர்கள் விடுப்பில் இருப்பதால் ஐந்து வகுப்புகளுக்கும் சேர்த்து அவரும், சுகந்தியும்தான் பாடம் எடுக்க வேண்டும்.

மாணவர்களும் ஐந்து, பத்துப் பேருக்கு மேல் எந்த வகுப்புக்கும் வருவதில்லை.

சுகந்தியும் மாற்றலுக்கு முயற்சி செய்து வருகிறாள். ஆனால் புதிதாக வேலையில் சேர்ந்துள்ளதால் ஓர் ஆறு மாதத்திற்கு மேல்தான் முடியும் என்று மேலிடத்தில் சொல்லி விட்டார்கள்.

இன்னும் மூன்று மாதங்களுக்குப் பல்லைக் கடித்துக் கொண்டு ஓட்டியே ஆக வேண்டும் என்று அழுத்துக் கொண்டு பேருந்தை விட்டு இறங்கிப் பள்ளியை அடைந்தாள்.

அன்று மாணவர்களின் எண்ணிக்கை சற்று குறைவாயிருந்தது.

'பொம்பளைக்குப் படிப்பெதற்கு' என்று சிறுமிகளை அதிகமாகப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. சிறுவர்களும் தோட்ட வேலை, வயல் வேலை என்று சொல்லி பள்ளிக்கூடத்துக்குத் தொடர்ந்து வருவதில்லை.

''டீச்சர்'' என்ற குரல் கேட்டுப் பதிவேட்டிலிருந்து நிமிர்ந்தாள்.

''என்ன சுப்பு?'' என்று கனிவுடன் விசாரித்தாள்.

சுப்பு சூட்டிகையான பையன். கற்பூர புத்தி. பாடங்களை அவன் கிரகித்துக் கொள்ளும் சக்தியைக் கண்டு அவளே பிரமித்துப் போயிருக்கிறாள்.

''டீச்சர், நான் இனிமே ஸ்கூலுக்கு வர மாட்டேன் டீச்சர்'' என்று குரல் கம்மச் சொன்ன அவனைக் கேள்விக்குறியுடன் பார்த்தாள் சுகந்தி.

''எங்க அம்மா கூலி வேலை செய்யற இடத்துல எனக்கும் வேலை வாங்கித் தந்துட்டாங்க. இன்னியிலேயிருந்து நான் வேலைக்குப் போகணும். உங்களைப் பார்த்துச் சொல்லிட்டுப் போகலாம்னுதான் காத்துக்கிட்டு இருந்தேன். அம்மா எனக்காக வீட்ல காத்துக்கிட்டு இருப்பாங்க. வரேன் டீச்சர்,'' என்று கைகூப்பி, ஏக்கத்துடன் கரும்பலகையைப் பார்த்த அவன் பார்வை சுகந்தியின் மனத்தைப் பிசைந்தது.

''இரு சுப்பு. நானும் உன்னோட வரேன். உங்கம்மாவிடம் சொல்லிப் பார்க்கறேன்.''

சுகந்தியின் வார்த்தைகளால் அவன் கண்கள் பனிச்சிட்டன.

''அம்மா, வணக்கம்!''

''வாங்க டீச்சரம்மா! என்ன இவ்வளவு தூரம்?'' என்று கையில் பூட்டு, சாவியுடன் வரவேற்றாள் சுப்புவின் அம்மா. அவள் செயலில் வேலைக்குப் போகும் அவசரம் தெரிந்தது.

''சுப்புவை ஸ்கூலுக்குப் போக வேண்டாம்னு சொல்லிட்டீங்களாமே?''

''ஓ, அதுக்குத்தான் வந்தீங்களா? நேத்து ராத்திரி முச்சூடும் ஒரே அழுகை இவன்.



பக்கம்

ஏண்டா அவ்வளவு நேரம் புத்தி சொல்லியும் டீச்சரை கூட்டிட்டு வந்திருக்கியே மறுபடியும்?'' என்று சுப்புவை முறைத்தாள்.

அவன் சுகந்தியின் பின்னால் பதுங்கினான்.

''டீச்சர், இவனும் நாலு காசு சம்பாரிச்சாத்தான் மத்த புள்ளைங்களுக்கு கால் வயித்துக் கஞ்சியாவது கிடைக்கும். அந்த ஆளோ ஓடிப் போயிட்டாரு. அவரு இருந்தாலாவது இவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாம். ஹூம்! அதோட இந்த வயசுல உடம்பு வணங்கி வேலை செஞ்சாத்தானே நல்லது பின்னாடி...'' என்று பெருமூச்சு விட்டாள்.

''அம்மா, கொஞ்ச காலம் நீங்க பல்லைக் கடிச்சுக்கிட்டுக் குடும்ப பாரத்தைச் சுமந்துட்டீங்கன்னா, சுப்பு படிச்சு முடிச்சு உங்க எல்லோரையும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவானே?''

''இந்தப் பள்ளிக்கூடத்தை நம்பி நான் எப்படிம்மா அவனுக்கு இப்பக் கிடைச்ச வேலையை உதற முடியும்?''

''என்னம்மா சொல்றீங்க?''

''பின்னே என்னம்மா? வர டீச்சர், வாத்தியார் எல்லோரும் உடனே மாத்தல் வாங்கிட்டுப் போயிடறாங்க. பள்ளிக்கூடப் பக்கம் வருவதே கிடையாது. நீங்களும் அதே மாதிரிதானே செய்யப் போறீங்க? இப்படிப்பட்ட உங்களை நம்பி, என் பையன் பெரிய படிப்பெல்லாம் படிப்பான்னு எப்படிம்மா நான் கனவு காண முடியும்?''

சாட்டையடிகளாய் வந்த அவள் வார்த்தைகள் சுகந்தியைத் தடுமாற வைத்தன.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப மறுக்கும் கிராமத்துப் பெற்றோரை மட்டும் குறை சொல்லிப் பயனில்லை.

சுயநலமாய் நடந்து கொள்ளும் தன்னைப் போன்ற ஆசிரியர்கள் மேலும் தவறு இருப்பதை உணர்ந்தாள்.

சட்டென்று முடிவுக்கு வந்தாள்.

''இதோ பாரும்மா, நான் இந்த ஊர் ஸ்கூலை விட்டு நிச்சயமா போக மாட்டேன். உங்க பேச்சு பிரச்னையின் மறுபக்கத்தையும் எனக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிடுச்சு. என்னை நம்பி தைரியமா நீங்க சுப்புவை ஸ்கூலுக்கு அனுப்பலாம். அது மட்டுமல்ல; ஊர்ல மத்தவங்களிடமும் சொல்லி அவங்க பிள்ளைங்களையும் ஸ்கூலுக்கு அனுப்ப ஏற்பாடு பண்ணுங்க.'' என்று சொல்லி சுப்புவின் கையைப் பிடித்துக் கொண்டு ஸ்கூலை நோக்கி நடந்தாள் சுகந்தி.

அவளின் நடையில் ஓர் உறுதியும், தெளிவும் தெரிந்தன.

கிருஷ்ணா

மணல்வெளி மான்கள்

15

காத்திருப்பது அதுவும் கோட்டைக்குள் நீதிமன்றத்தின் எதிரில். கௌதமுக்கு அது புத்தம் புது அனுபவம்.

அவன் அமர்ந்திருந்த ஆலமர மேடையில் ஐஸ் கலர் விற்றார்கள். சர்பத், பழம், பூ, சுக்குக் காப்பி என்று சுற்றிலும் ஒரு வியாபார மும்முரம். ஒரு பக்கம் பத்திரம் எழுதுபவர். இன்னொரு பக்கம் விண்ணப்பம் டைப் அடிப்பவர். கோர்ட் பீஸ் ஸ்டாம்பு விற்பவர்.

வேலூர்க் கோட்டையின் அகழிக்கு மேல் வரும் பிரதான பாதையின் வாகன சஞ்சாரம் சுழிவிட்டுப் பிரியும் கேந்திரம் அது.

வக்கீல்களின் கறுப்பு அங்கிகள் வலது புறம் படையெடுத்தன. அங்கேதான் செஷன்ஸ் கோர்ட். ஆதியை 'பெய்லில்' அழைத்து வர அவன் வக்கீல் போய் இரண்டு மணி நேரமாகப் போகிறது.

''தள்ளிக் குந்து சார்!'' பூ விற்பவன் எச்சரிக்கை கொடுத்தான்.

அவன் வியாபாரத்திற்கு இடைஞ்சலோ?

மெதுவாக எழுந்து கோர்ட்டு வராந்தாவிற்கு நடந்தான். கட்சிக்காரர்கள், வக்கீல் குமாஸ்தாக்கள். வக்கீல்கள், போலீஸ்காரர்கள். கடந்து சென்ற ஒவ்வொரு மனித முகமும் ஒரு பிரச்னையைச் சுமந்து நகர்ந்தது.

இவர்கள் எல்லாம் எந்த அச்சு மையத்தில் சுழல்கிறார்கள்? உலகில் இத்தனை வழக்குகளா? இவர்கள் வேண்டுவது நீதியும் நியாயமுமா? கௌதம் உள்ளுக்குள் கூர்மையாகச் சிரித்துக் கொண்டான்.

இல்லை. சிக்கலில் தன் பக்கம் விழுந்த முடிச்சை அவிழ்த்துக் கொள்ள அல்லது அறுத்து விடத்தான் இந்த அலைச்சல். தனது நலத்தின் பாதையில் இந்த நிமிஷத்தில் விழுந்த முட்டுக் கட்டையைத் தூக்கிப் போடத்தான் இந்தப் பாடு.

கோர்ட்டு வராந்தா மூலையில் ஒரு கட்சிக்காரர் தமது வக்கீலிடம் ஒரு சின்ன பிளாஸ்டிக் பர்ஸிலிருந்து நாலாக மடித்து வைக்கப்பட்டிருந்த நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துப் பிரித்து கை வெடவெடக்க பீஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அது எந்த நகையையோ எந்த நிலத்தையோ அடகு வைத்து வந்தது என்று கட்சிக்காரர் கை வெடவெடப்பதைப் பார்த்துப் புரிந்து கொள்ள முடிந்தது.

பணம். இதுதான் விஸ்வரூபம் எடுத்து நிற்கும் உன்னத சக்தி! அதை வழிபாடு செய்யவோ அல்லது அதன் சர்வ வல்லமையுள்ள சக்ராயுதத்திலிருந்து தப்பிக்கவோ தான் இந்த விநாடியில் இந்தக் கூட்டம் நடமாடுகிறது! இங்கே ஒரு கட்சிதான் ஜெயிக்க முடியும். மறு கட்சிக்காரருக்குத் தோல்விதான். அது யார்? அது யார்? இந்தப் படபடப்புத்தான் நீதிமன்றத்தின் வராந்தாவில்; உள்ளே; வெளியே!

கொஞ்சம் சிந்தனையை நீட்டிப் போட்டான். உலகெங்கிலும் என்று தோன்றியது.

எல்லாம் பணமா? எங்கும் பணமா?

காலையில் வக்கிலைச் சந்திக்கும் போது அவர் அவனிடம் ஒரு கனத்த உறையை நீட்டினார்.

''என்ன சார்?''

''பிரிச்சுப் பாருங்க.''

அவன் பிரித்தான். நூறு ரூபாய் நோட்டுக்கள். அவன் கொடுத்தவை.

''ஏன் சார் திருப்பிக் குடுக்கறீங்க?''

அவர் புன்னகை செய்தார்.

''இந்தக் கேஸை எடுக்க இஷ்டமில்லீங்களா?''

''உங்க நேர்மையும் உறுதியும் என்னைத் தொட்டுருச்சு.''

கௌதம் இன்னும் விளக்கம் எதிர் நோக்கினான்.

''போய் உங்க வாட்ச்சை மீட்டுட்டு வந்துடுங்க! இந்தக் கேஸ் என்னோடதுதான்.''

''பீஸ் சார்?''

''யார் அந்த ஆதி?''

''கூடப் படிச்சவன். ஏழை. அவங்க அம்மா ஓர் ஊமை.''

''அதுக்கு மேலே உங்களுக்கு இந்த கேஸுலே வேற என்ன ஸ்பெஷல் கமிட்மெண்ட்?''

''அநியாயமா ஒரு நிரபராதி மாட்டிட்டிருக்கான் சார்.''

''தட்ஸ் இட்! அதான் எனக்கும் உறைச்சுடுச்சு. குறிப்பா... நீங்க உங்க வாட்ச்சை இழக்கக் கூடத் தயாரானது!''

கௌதம் மீண்டும் அவரிடம் கவரை நீட்டினான்.

''மன்னிக்கணும் சார்! பொன் வைக்க வேண்டிய இடத்திலே பூதான் வச்சிருக்கேன். அதுகூடத் தேவை இல்லேன்னா எனக்குத் திருப்தி வராது.''

''ஆக பணம் வாங்கிக்கலேன்னா நான் முழுசா ஈடுபட மாட்டேன்னு சுத்தி வளைச்சுச் சொல்றீங்க.''

''அப்படி இல்லே சார்! நீங்க தர்ம வக்கீல்

வையவன்

இல்லே. உங்க நேரம் எவ்வளவு காஸ்ட் லின்னு எனக்குத் தெரியும்.''

''ஆல் ரைட்... ஆல்ரைட்'' என்று அவனை மேலே வளர்க்க விடாமல் வெட்டினார். கவரை வாங்கி மேஜை மேல் வைத்தார்.

''நீங்க நம்பறதுக்காக இதை வாங்கிக்கறேன்! பணம் முக்கியமானதுதான், எனக்கும் சரி, உங்களுக்கும் சரி. ஆனா இன்னமும் கூட பணத்தை விட முக்கியமானது இருந்துண்டிருக்கு.''

அவர் எது முக்கியம் என்று விவரிக்கவில்லை. அவனும் கேட்கவில்லை.

கௌதம் தன் பழைய சிந்தனைக்கு மீண்டான்.

இந்தக் கூட்டம், இந்தப் படபடப்பு, பணத்திற்கும் அதன் எதிர்ச்சக்தியான மனிதத் தன்மைக்குமிடையில் நடக்கும் இழுபறிதான். பணம் மட்டுமல்ல; அந்த முகம் தெரியாத இன்னொன்றும் கூட இந்த உலகின் அச்சைச் சுழற்றிக் கொண்டிருக்கின்றன.

ரொம்ப யோசிக்காதே கௌதம். இது தான் முந்தா நாள் ஆற்றங்கரையில் நித்யா சொன்னது.

யோசனை. அது எப்போது நிற்கும்? ஜடமானால் யந்திரமானால். அல்லது ஆடியாடி அகம் கரைந்து, இசை பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி எங்கும் நாடி நாடி நரசிங்கா என்று வாடி வாடுகின்ற திருவாய் மொழிப் பக்குவத்திற்குப் போனால். அப்போது கூட யாவுமொழிந்த ஒரு யோசனையாவது



வேண்டுமே! அது வருமா? வரலாம். ஒரு வேளை வராமலும் போகலாம்.

யாரோ யாருக்கோ கை தட்டினார்கள். கௌதம் திரும்பவில்லை.

எதிரில் வந்த ஒருவர் ''சார், உங்களைத்தான்... அதோ வக்கீல் கூப்பிடறாரு பாருங்க'' என்றார்.

கௌதம் திரும்பினான். அவன் வக்கீல் தான். கையை ஆட்டிக் கூப்பிட்டார். போனான்.

''ஆதிக்கு எதிரா பெரிய கை வேலை செஞ்சுட்டிருக்கு.''

''என்ன ஸார் ஆச்சு?''

''பெயில்லே விட மாஜிஸ்திரேட் யோசிக்கறார். அவன் வெளியே வந்தா ஜாதிக் கலவரம் எழும்னு போலீஸ் ரிப்போர்ட்டாம்.''

கௌதம் திகைத்தான். விட்டலாபுரத்தில் வெடிமருந்து போல் ஜாதிக் கலவரம் தீப்பற்றிக் கொள்ளும். அப்படி இரண்டு மூன்று முறை நடந்திருக்கிறது. ஆதியின் ஜாதி ஜனம் அதை அந்தக் கோணத்தில் இதைப் பார்க்கவில்லை.

''ஆதி அப்படியெல்லாம் தூண்டி விடறவன் இல்லே சார்.''

''அவன் இல்லீங்க. அவன் வெளியே வந்ததும் அவங்க ஜாதிக்காரங்க சும்மா விட்டுருவாங்களா? அவங்க ஒண்ணாச் சேர்ந்து யார் 'சஸ்பெக்டோ' அவனோட மோதப் போனா...''

வழக்கில் ஒரு புதிய பாதை பிரிவது அவனுக்குப் புலப்பட்டது.

துளசிங்கம்தான் திரை மறைவில். அவனது ஆதிக்கம் பரவுவதற்கு ஆதி மட்டும் எதிர்ப்பல்ல. அங்குமிங்கும் ஆதியின் ஜாதிக்காரர்கள் முணுமுணுப்பும் முறைப்புமாக பலவீன எதிர்ப்புக்களைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

துளசிங்கத்தின் நோக்கம் ஆதியை என்ன செய்ய முடியும் என்று அவன் ஜாதிக்காரர்களுக்குக் காட்டுவதாகவும் இருக்கலாம்.

''இப்போ என்ன செய்யறது சார்?''

''ஹைகோர்ட்டுக்குப் போய் ஜாமீன் வாங்கிட்டு வரலாம்.''

ஹைகோர்ட்! சென்னைக்குப் போய் இவரை அலைய விட்டு ஜாமீன் வாங்கி வந்து விடலாம்! மேலும் பணம் செலவாகும்.

ஒருவேளை இந்த எல்லைக்கு வந்த துளசிங்கத்திற்கு ஹைகோர்ட்தானா பிரமாதம்? அங்கேயும் பிடி நெகிழாதபடி வழி வைத்திருப்பான்.

''என்ன செய்யலாம்னு நீங்களே சொல்லுங்க சார்!''

''ஒண்ணு செய்யுங்க! நீங்க போய் தென்னை மரத் தெருவிலே என் ஆபீஸ்ல வெய்ட் பண்ணிட்டிருங்க. இங்கே எனக்கு வேற ரெண்டு கேஸ் இருக்கு. நான் வர மூணு நாலு மணியாகும். நீங்க சாப்பிட்டீங்களா?'' என்றார்.

''இல்லே சார்!''

''ஆல் ரைட். நீங்க போய்ச் சாப்டுட்டு ஒரு நாலு மணிக்கு அங்கே வந்துடுங்க. லெட்ஸ் டிசைட்.''

இனி காத்திருக்க வேண்டியதில்லை. அவன் வக்கீலிடம் விடைபெற்றான்.

இது புதிதல்ல. தோல்விகளைச் சொந்த வாழ்க்கையிலும் தொழில் முறையிலும் கௌதம் பலமுறை சந்தித்திருக்கிறான். ஒவ்வொரு முறையும் ஏற்படுவது போல இப்போதும் அவனுக்குள் ஒரு சுறுசுறுப்பு விழித்தெழுந்தது.

அடுத்து என்ன செய்வது? மனசு ஓர் உஷார் நிலைக்கு வந்து நின்றது.

முதலில் சாப்பிடுவோம். யோசிக்க இன்னும் நிறைய நேரமிருக்கிறது.

அவன் கோட்டையிலிருந்து அகழி மீது ஓடிய பாதையில் நடந்தான்.

சாலை வந்த போது ஒரு பாண்டு செட்டின் ஆரவாரமும் ஊர்வலக் கூட்டமும் அவனை நிறுத்தின.

சாலையில் ஒரு தேர் போல் சிங்காரித்த காரின் மேடையில் ஓர் இள வயதுப் பெண் எல்லா நகைகளும் பூண்டவளாய் வீற்றிருந்தாள். மார்வாடிப் பெண். கூட்டத்தைக் கவனித்தான். எல்லாம் மார்வாடிகள்.

என்ன விஷயம்... இவள் மணமகளோ? பக்கத்தில் போனவரை விசாரித்தான்.

''அந்தப் பொண்ணு இன்னிக்கு ஜைனத் துறவியாகப் போவுதுங்க.''

நச்சென்று மண்டையில் அடி விழுந்த மாதிரி இருந்தது. திரும்பி மீண்டும் அலங்கரிக்கப்பட்ட அந்தக் காரின் விதானத்தில் அமர்ந்திருக்கும் பெண்ணைப் பார்த்தான். முகத்தில் பால் வடிந்தது. பதினாறு...



''யாருங்க, லெட்டர் போட்டிருக்காங்க?''

''போன வாரம் நம்ம வீட்டிலே வந்து, டி. வி., வி. சி. ஆர்., ஃப்பிரிட்ஜ் எல்லாம் திருடிக்கிட்டுப் போனவன் தான் எழுதியிருக்கான். 'கேரண்டி கார்டெல்லாம் எடுத்துத் தயாரா வையுங்க. அடுத்த வாரம் வர்றேன்'னு.''

— டி. என். பாலகிருஷ்ணன்.

பதினைந்தாகவும் இருக்கலாம்.

இந்த வயசில் இந்தக் காலத்தில் இவனுக்கு இப்படி ஏன் தோன்றியது?

கௌதமுக்குச் சிலிர்த்தது. அவன் மனசுக்குள் அந்த இளம் பெண்ணைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

நேற்று இந்நேரம்?

அவனுக்கு பிலோமினா ஞாபகம் மீண்டது.

அவனது டென்னிஸை ரசித்த போது அதற்கு இங்கிதமாகப் பாராட்டுத் தெரிவித்த போது, சொட்டுச் சொட்டாக நட்சத்திரம் உதித்த சாயங்கால வேளையில் அவனுடன் நடந்தவாறே சின்னச் சின்ன சிரிப்புகளுடன் அவள் பேசி வந்த போது, அவளுக்குள் இப்படி ஓர் எண்ணம் இருந்திருக்குமென்று ஊகிக்க முடியவில்லையே.

எது அவளை இப்படித் துறவியாக உந்தியது?

விரக்தியா.. தோல்விகளா? காதல்? இல்லை. எதுவுமில்லை. ஆசைகளும் ஆண்மயக்கமும் கறைப்படுத்த முடியாத குழந்தை உள்ளம் அது. கௌதம் அவளது நெருக்கத்தை, பேச்சை, சிரிப்பை விரும்பியிருக்கிறான். நேசித்திருக்கிறான்.

ஆனால் அவை காதலுக்கு அப்பாற்பட்டவை என்று உணர்ந்துமிருக்கிறான்.

பிலோமினா காதலிக்கப்பட முடியாதவள் என்று ஏனோ அவனுள் ஓர் அழுத்தமான எண்ணம் நிலைத்திருந்தது.

முதலில் அவள்தான் பேசியவள். அவன் டென்னிஸைப் பார்த்து விட்டு.

மிக இயல்பாக, பாராட்டுத் தெரிவிக்கிற மாதிரிதான் அவள் ஆரம்பித்தாள்.

இந்தப் பாராட்டில் எந்த வித்தியாச பாவமும் இல்லை. அதை வெகு லகுவாக அவள் உணர்த்தி விட்டாள்.

அவர்கள் சந்திப்பே சாலையில்தான். சில சமயம் சாலையோரத்து டென்னிஸ் கோர்ட்டில். இவற்றைக் கடந்து அது எங்கும் போனதில்லை.

ஒருமுறை அவள் கையில் ஓர் ஆங்கிலப் புத்தகம் வைத்திருந்தாள். அட்டையில் அன்னை தெரஸா.

"என்ன புத்தகம்?"

அவள் அவனிடம் நீட்டினாள்.

'சம்திங் பியூட்டிஃபுல் ஃபர் காட்."

"இது மதர் தெரஸா வாழ்க்கை வரலாறா?"

"அது மட்டுமில்லே. அவங்க தொண்டு, சிந்தனை, ஆக்டிவிடீஸ் பத்தி எல்லாம் ஒரு சின்ன அறிமுகம்."

"டு யூ லைக் ஹெர்?"

"யாருக்குத்தான் பிடிக்காது?" கேட்டு விட்டு அவள் மெலிசாக கன்னம் குழியச் சிரித்தாள்.

"ஆச்சரியமானது."



"உங்க சொத்தையெல்லாம் மார்வாடி கிட்டே அடமானம் வைச்சுப் படம் எடுக்கறீங்களாமே, படத்துக்கு என்ன பேரு?"

"சேட்டுக்கு நான் அடிமை!"

— டி. என். பாலகிருஷ்ணன்.

"எது?"

"டென்னிஸுக்கு ரசிகையா இருந்துக்கிட்டு மதர் தெரஸாவுக்கும் ரசிகையா இருக்கறது!"

"நீங்க சொல்றது தப்பு."

"எங்கே... எப்படி?"

"நான் மதர் தெரஸாவுக்கு ரசிகை இல்லே. அவங்களைப் போற்றி வணங்குகிறவள்."

ஒருவேளை அந்தப் போற்றுதலும் வணக்கமும் கூட பிலோமினாவைத் துறவியாக்கி இருக்கலாம். வித்து எங்கு விழுந்ததென்று விளைவை வைத்துச் சொல்லி விட முடியாது.

மதர் தெரஸாவிடம் பிலோமினா என்ன கண்டாள் என்று கௌதம் கேட்கவில்லை. கேட்டறிய முடியாத ஆயிரமாயிரம் மர்மங்கள் எங்கும் பரவியிருக்கின்றன.

எதிரில் தெரிந்த ஹோட்டலுக்குள் அவன் நுழைந்து ஒரு சாப்பாட்டு டிக்கெட் வாங்கினான்.

காஷியர் கொடுத்த சில்லறையை எண்ணும் போது "ஹலோ கௌதம்!" என்ற குரல் நிமிர்ந்து பார்க்க வைத்தது.

இன்ஸ்பெக்டர் இருதயராஜ்.

"குட்மார்னிங் சார்!"

அவர் பர்ஸைத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டே குட்மார்னிங் சொன்னார்.

"எங்கே கோர்ட்டுக்கு வந்தியா?"

"ஆமா ஸார்."

அவரும் ஒரு சாப்பாட்டு டிக்கெட் வாங்கினார்.

"சாப்பிடத்தானே?" என்று அவனைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமா சார்."

"சாப்பாட்டுக்கு மேலே போகணும் சார்" என்ற ஹோட்டல் சிப்பந்தி அவருக்கு மாடிப்படியைக் காட்டினான்.

"தெரியும்பா" என்று சொல்லி விட்டு "நீ வேலைக்குப் புதுசா?" என்றார்.

"ஆமா சார்."

"அதான் கஸ்டமருங்களுக்கே வழி காட்றே. போகலாமா கௌதம்?"

கௌதம் பின்தொடர்ந்தான்.

(தொடரும்)



வரதட்சணைப் பணம்

மாப்பிள்ளை விட்டாரான எங்களுக்கு, சிவப்புக் கம்பள வரவேற்புதான். ராஜ மரியாதைதான். தடபுடலான உபசாரங்கள்தான்.

பெண் விட்டைச் சேர்ந்த பெரியவர்களும் பெண்களும் ஏதாவது ஒரு சாக்கை வைத்துக் கொண்டு, அடிக்கடி நாங்கள் தங்கியிருந்த விட்டுக்கு வருவதும், என்னை ஓரக் கண்ணால் பார்த்து விட்டுப் போவதுமாக இருந்தனர்.

அவர்கள் கண்களில் ஆச்சரியம் மின்னுவது வெளிப்படையாகவே தெரிந்தது.

ஒரு சிலர் என் காதுகளில்படும்படியாக, வெளிப்படையாகவே என்னுடைய வருங்கால மாமனாரின் அதிர்ஷ்டத்தை எண்ணி வியந்து கொண்டனர்.

'நம்ப மூர்த்தி ரொம்பக் கொடுத்து வச்சவன்தான். மாப்பிள்ளை பாக்கறதுக்கு 'ஜம்'முன்னு ராஜா மாதிரி இருக்கார். எம்.பி.ஏ. பாஸ் பண்ணிட்டு, பாங்க்லே பெரிய ஆபிஸரா இருக்காராம். அப்பா அம்மாவுக்கு ஒரே பிள்ளையாம். நல்ல வசதியான குடும்பம். இவ்வளவிருந்தும் ரொம்ப நல்லவங்களாத் தெரியறது. வரதட்சணைன்னு ஒரு பைசாக் கூட வேண்டாம்னு சொல்லிட்டாங்களாம். மூர்த்தி நல்ல புண்ணியம் பண்ணியிருக்கான்.'

அவர்கள் பேசியது உண்மைதான்.

வரதட்சணை, சீர் செனத்தி போன்ற விஷயங்களை அருவருப்பாக எண்ணும் ரகம் எங்கள் குடும்பம். அதனால்தான், பெண்ணின் அப்பா பெண்ணுக்கு இருபத்தைந்து பவுனில் நகை போடவும், பதினைந்தாயிரம் ரூபாய்க்கு, வெள்ளி, எவர்சில்வர் பாத்திரங்கள் தரவும், வரதட்சணையாக இருபத்தையாயிரம் கையில் தரவும், தாமாகவே முன் வந்த போதும், என் அப்பா எதுவும் தேவையில்லை என்று மறுத்து விட்டார்.

'பெண்கள் அதிகமாக நகை போட்டுக்கறது எனக்குப் பிடிக்காது' என்று சிரித்துக் கொண்டே சொன்னவர், 'கடவுள் கிருபையிலே எங்க வீட்டிலேயே தேவையான அளவுக்குப் பாத்திர பண்டம் எல்லாம் இருக்கு. மருமகள் கொண்டு வந்துதான் ஆகணும்ங்கற நிலை இல்லை. பையனும் கை நிறையச் சம்பளம் வாங்கறான். உங்ககிட்டே கைநீட்டிப் பணம் வாங்க வேண்டிய அவசியம் அவனுக்குக் கிடையாது. அவன் என்கிட்டேயே ஒரு பைசாக் கேட்க மாட்டான்' என்று அந்த விஷயத்துக்கே முற்றுப் புள்ளி வைத்து விட்டார்.

மாப்பிள்ளை அழைப்பு சம்பிரதாயமெல்லாம், எளிமையாக முடித்துக் கொண்ட பிறகு, மூர்த்தி என் அப்பாவிடம் வந்தார்.

''நாளைக்கு மாங்கல்யதாரணம் முடிஞ்சதும், கோவிலுக்குப் போயிட்டு வந்துடுவோம். இரண்டு தெரு தள்ளி ஒரு பெருமாள் கோவில் இருக்கு. ரொம்பச் சக்தி வாய்ந்த பெருமாள். நீங்க அவசியம் பார்க்கணும்'' என்றார்.

அவருடன் வந்திருந்த பெரியவர் ஒருவர் நாங்கள் கேட்காமலேயே, அந்தப் பெருமானின் பெருமைகளைச் சொல்ல ஆரம்பித்தார்.

''ரொம்பவும் சக்திவாய்ந்த பெருமாள் ஸார்... ஒரு பொண்ணு காவிரியிலே குளிச்சிட்டு இருந்தப்போ, திமர்னு வெள்ளம் பெரிசா வந்துட, அவ சமாளிச்சுக்கிட்டு கரை ஏறதுக்குள்ளே, கரையிலே உட்கார்ந்திருந்த அவளுடைய ரெண்டு வயசுக் குழந்தையை வெள்ளம் அடிச்சுட்டுப் போயிடுத்து. வெள்ளத்துக்குப் பயந்து, யாரும் ஆத்துலே இறங்கலே. அந்தப் பொண்ணு,

சந்த்யா ஸ்ரீநிவாசன்

இந்தப் பெருமாள் கோவில்லே வந்து நின்னு முட்டி மோதி அழுதிருக்கா. அடுத்த நாள் காலையிலே, வெள்ளம் குறைஞ்சப்புறம் ஊர் ஜனங்க போய்ப் பார்த்தபோது குழந்தை ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து ஜாலியா விளையாடிட்டிருந்ததாம்!'' என்று சொன்னதும் எனக்கே உடம்பு ஒருமுறை சிலிர்த்தது.

''இப்படி எத்தனையோ சம்பவம் ஸார்...'' என்ற மற்றொருவர், ''பத்து வருஷங்களுக்கு முன்னாலே, ஊமையாயிருந்த ஒரு பொண்ணுக்கு, இந்த கோவிலுக்கு வந்த உடனேயே பேச்சு வந்துடுத்தாம்!'' என்றார்.

''அது மட்டுமில்லே ஸார். பெங்கால்லேர்ந்து சைதன்ய மகாப்பிரபு, ஸ்ரீரங்கம் போனப்போ, வழியிலே இந்தப் பெருமாளையும் சேவிச்சுட்டுத்தான் போனாராம்'' என்றார் இன்னொருத்தர்.

''அவசியம் பார்த்தேயாக வேண்டிய இடம்தான்,'' என்று சொன்ன என் அப்பாவின் குரலில் ஆர்வம் தெரிந்தது.

மறுநாள் காலை.

ஏழரை மணிக்கெல்லாம் முகூர்த்தம் முடிந்ததும், கோவிலுக்குப் புறப்பட்டோம்.

முக்கியமான நான்கைந்து பேர் மட்டும் காரில் பயணப்பட்டோம்.

ஊர் செழிப்பாக இருந்தது. காவிரிப் பாசனம் பளிச்சென்றிருந்தது. நவீன மோஸ்தரில் நிறைய மாடி வீடுகள் தென்பட்டன.

ஐந்து நிமிட பயணத்துக்குப் பிறகு கார் நின்றது.

''அந்தச் சந்துலேதான் கோவில் இருக்கு. வண்டி போக முடியாது'' என்று புன்னகை செய்தபடியே என் மாமா இறங்கிக் கொள்ள, அப்பா, அம்மா, நான், என் புது மனைவி அனைவரும் இறங்கினோம்.

அவரைத் தொடர்ந்து அந்தக் குறுகிய சந்தில் நுழைந்தோம்.

''இதுதான் கோவில். உள்ளே எல்லோரும் உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருக்காங்க'' என்று அவர் ஓர் இடத்தைக் காட்டியதும் எனக்குச் சப்பென்றாகிவிட்டது. என் உற்சாகம் எல்லாம் பறந்து விட்டது. அப்பாவின் முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது.

கோயிலுக்குள் முன் செடிகள் முளைத்து விட்டிருந்தன. மண்டபத்தைச் சுற்றி ஒரே கல், முள்.

''பார்த்து வாங்க. ஒரே முள்ளும் புதருமா இருக்கு'' என்றபடி முன்னே நடந்த என் மாமனார், ''கோவில் தர்மகர்த்தா திருச்சியிலே இருக்கார். ஒண்ணுமே கண்டுக்கறது இல்லே...'' என்றார்.

பிராகாரம் முழுவதும் ஒரே ஒட்டடை. நிமிர்ந்து நின்றால் ஒட்டிக் கொள்ளும் போலிருந்தது. தலைகீழாகத் தொங்கிக்





வாரா வாரம் பரபரப்பு!

* ''வல்லமை தாராயோ?'' ஓர் எளிமையான — இனிமையான — மனத்தில் இடம் பெற்றுவிட்ட அருமையான தொடர்கதை. பட்டுக்கோட்டை பிரபாகருக்குப் பாராட்டுக்கள்.

பெங்களூர் — 21. ப. மூர்த்தி.

* பெண்ணுரிமை, சமதர்மம் எனச் சொல்லிக் கொண்டு எதற்கெடுத்தாலும் குதர்க்க மனப் பான்மையையே வளர்த்துக் கொண்டு எல்லோரையும் கஷ்டப்படுத்தும் பெண்ணாகவே தெரிந்தாள் வந்தனா. கடைசியிலாவது அரவிந்தின் மனத்தைப் புரிந்து கொண்டாளே...!

சென்னை — 45. ஏ. ஜப்பார் காதர்.

* ஹலோ! பட்டுக்கோட்டை பிரபாகிரா? வணக்கம் சார்! நான் கடலூர்லேர்ந்து வேணு மணி பேசறேன். உங்க அரவிந்த், கோபி, வந்தனா எல்லோரையும் கேட்டதாச் சொல்லுங்க. மனசிலேயே தங்கிட்டாங்க!

கடலூர் — 2. ஆர். வேணுமணி.

* 'வல்லமை தாராயோ?' தொடர்கதையைப் படித்த பிறகாவது சில பெண்கள் தங்களுக்குள் எண்ணியுள்ள ஆண்களைப் பற்றிய தவறான அபிப்பிராயத்தைக் கைவிடுவார்களா!

ஊத்தங்கரை. கவி. செங்குட்டுவன்.

* பெண்மையின் பெருமைக்குரிய வந்தனா என்ற ஸ்டிராங் கேரக்டர், கடைசியில், 'தொபுகடீர்' என்று கீழே விழுந்து விட்டதாகத்தான் தோன்றுகிறது.

ஸ்ரீரங்கம். ஆர். கோபாலன்.

* கொலை, கொள்ளை என்று க்ரைம் கதைகளையே கொடுத்து வந்த பட்டுக்கோட்டை பிரபாகர் இவைகளிலிருந்து அப்பாற்பட்டு ஒரு வித்தியாசமான குடும்பக் கதையைக் கொடுத்து எங்கள் நெஞ்சங்களில் புதிய பிரபாகராக இடம் பெற்று விட்டார்.

தக்கோலம். அ. முஸ்தபா.

* அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்று வாசகர்கள் எண்ணும்படி ஒவ்வொரு வாரமும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார், பட்டுக்கோட்டை பிரபாகர். இக்கதைக்கு 'ஜெ'வின் ஓவியம் அத்தனையும் வைரமாகத் திகழ்ந்தன. பாராட்டுக்கள்!

சீர்காழி. ஜெயலக்ஷ்மி ஷண்முகம்.

கொண்டிருந்த வௌவால்கள் எங்கள் காலடி சப்தத்தைக் கேட்டதும், பறந்து மற்றோர் இடத்தில் தொங்கின. இரண்டு மூன்று சொறி நாய்கள் அருகே நின்று எங்களை முறைத்தன.

ஒரு சின்ன அறை. அதுதான் கர்ப்பகிருகம் போலும். மேலே விமானம் என்று ஒன்றும் இல்லை. மொட்டையாக இருந்தது. அங்கேயும் ஒட்டடை, வௌவால் முதலியன. கூடவே எலிப் புழுக்கைகளின் துர்நாற்றம். கரப்பான் பூச்சிகளின் நடமாட்டம்.

மூக்கைப் பிடித்துக் கொண்டு, உள்ளே பார்வையை ஓட விட்டேன். ஒரே ஒரு சின்ன விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உள்ளே ஆண்களும் பெண்களுமாகச் சிலர்.

பெருமாள் கிழிந்து போன அழுக்கு வஸ்திரத்தில் அழுது வடிந்து கொண்டிருந்தார். தலையில் கிரீடம் இருக்க வேண்டிய இடத்திலும் ஒரு கிழிந்த துணி. இன்றைக்குப் போடப்பட்டிருந்த மாலை மட்டும் கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது!

அங்கே கூடியிருந்தவர்களை உற்றுப் பார்த்தேன்.

பெண்கள் உடுத்தியிருந்த பட்டுப் புடைவை ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவிருக்காது. கழுத்து, காது, மூக்கு, கைகள் என்று எல்லா இடங்களிலும் நகைகளைச் சுமந்து கொண்டிருந்தார்கள்.

ஆண்கள் மயில்கண் பட்டு உடுத்தி, டெரின் ஷர்ட் அணிந்து, மைனர் சங்கிலி, மோதிரம், வாட்ச் என்று அமர்க்களமாயிருந்தனர்.

ஆனால் அவர்கள் 'சக்திவாய்ந்த தெய்வம்' என்று நம்பி வந்திருந்த பெருமாளோ, கிழிந்து போன அழுக்குத் துணியில் பரிதாபமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

மனத்தில் ஒரு தீர்மானத்துடன், ''மாமா'' என்று அழைத்தேன்.

''என்ன மாப்பிள்ளை, என்ன வேணும்?'' என்று அன்பாகக் கேட்டபடி அருகே வந்து நின்றார் அவர்.

''மாமா, எனக்கு வரதட்சணையா ஏதோ பணம் தர்றதாச் சொன்னீங்க இல்லே?'' என்றேன்.

''ஆமாம்'' என்று குழப்பத்துடன் சொன்னவர், ''இருபத்தையாயிரம் தர்றதாச் சொன்னேன். இப்பக் கூட, நான் அதை தரத் தயாராயிருக்கேன்'' என்றார்.

''எனக்குத் தர வேணாம் மாமா. அதிலே ஒரு பத்தாயிரம் செலவு பண்ணி இந்தக் கோவிலைச் சுத்தம் செய்து தினமும் மூணு கால பூஜை நடக்கற மாதிரி ஏற்பாடு பண்ணுங்களேன்'' என்று சொன்ன என்னை, அவர் பார்த்த பார்வையில் அபரிமிதமான மரியாதை தெரிந்தது.

''ஓகே மாப்பிள்ளை. அவசியம் செய்யறேன்'' என்று சொன்ன அவர் குரலில் பெருமிதம் இருந்தது.

பாட்டியின் பாடலில் ஏத்தனை குறும்பு!



ரொம்பப் பெரிய மனிதர் வீட்டுக் கல்யாணம். அழைப்பு வந்து விடுகிறது. நமக்குப் பெருமையாகக் கூட இருக்கிறது. மனைவி மக்களுடன் புறப்பட்டு விடுகிறோம். கல்யாண மண்டபத்தை நெருங்கினால் கூட்டமாவது கூட்டம்! அலைமோதுகிறது. மண மக்களை வாழ்த்தக் 'கியூ' வரிசை! நாமும் நிற்கிறோம். வி. ஐ. பி.க்கள் கியூவை அலட்சியம் செய்து முந்திச் சென்று வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள். பொறுத்துக் கொள்கிறோம். வெகுநேரம் காத்திருந்து பரிசைக் கொடுத்து வாழ்த்தி விட்டு உட்கார இடம் தேடுகிறோம். ஒரு நாற்காலியாவது கிடைக்க வேண்டுமே? 'வந்தது வந்தோம், சாப்பிட்டு விட்டுப் போய் விடலாம்' என்று பார்த்தால் சாப்பாட்டு ஹால் வாசலிலும் 'ஜே ஜே' என்று கூட்டம்! மேலும் மேலும் கூட்டம் வந்து கொண்டே இருக்கிறது. நிற்கவும் இடமில்லாமல், இடிபட்டு, மிதிபட்டு... கொஞ்ச நேரத்தில் 'போதும் போதும்' என்றாகி விடுகிறது. அலுத்துச் சலித்து, வெறுத்து வீட்டுக்கே கிளம்பி விடுகிறோம்!

ஔவையாருக்கும் இப்படி ஒரு நிலைமை ஏற்படுகிறது. ஆனால் அவள் நம்மைப் போல் அலுத்துக் கொள்ளவோ, வெறுக்கவோ இல்லை. அந்தச் சந்தர்ப்பத்திலும் அவள் நகைச்சுவை உணர்வைக் கைவிடவில்லை!


வண் தமிழைத் தேர்ந்த வழுதி
கலியாணத்(து)
உண்ட பெருக்கம் உரைக்கக் கேள் — அண்டி
நெருக்குண்டேன்; தள்ளுண்டேன்
நீள் பசியினாலே
கருக்குண்டேன்; சோறுண்டிலேன்!

பாய்ந்து சென்று பந்தியிலமர்வது பழங்காலத்திலும் உண்டு. ஔவை முதியவளானதால் அவளால் முடியாமல் போனது. ஆனால் சிரிக்க முடியாமல் போகவில்லை!

''உண்ட பெருக்கம் உரைக்கக் கேள்'' என்பதில்தான் எவ்வளவு கிண்டல்! அந்தக் கலியாணத்தில் அவள் சாப்பிடவேயில்லை. ''ஆனாலும் உண்ட பெருக்கம் உரைக்கக் கேள்'' என்று கூறுகிறாள். என்னென்ன உண்டாளாம்? அவளே பட்டியலிடுகிறாள்: நெருக்குண்டேன்; தள்ளுண்டேன்; கருக்குண்டேன்; என்று அவள் பட்ட அவஸ்தைகளை அடுக்குகிறாள்! 'உண்டேன்' 'உண்டேன்' என அடுக்கி, உண்ணாமை, எள்ளலாக உணர்த்தப்படுகிறது. பிறிதும் நகைச்சுவையுடன் அமைந்த அற்புதமான உத்தி. ''உண்டேன், உண்டேன்'' என்ற சொல்லடுக்கின் இறுதியில் ''சோறுண்டிலேன்'' என்ற வார்த்தை எதிர்மறையாக விழுவதால் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இந்த எளிய அரிய பாடலில் பாட்டிக்குத்தான் எத்தனை குறும்பு!

— கா. சுப்பிரமணியன்,
திருநெல்வேலி.

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னேற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டு போதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்கமின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA

தி.மு.க. பிளந்தது!

ஜூன் மாதம் ராஜாஜி நோயுற்றார். அவர் புறத்தோலில் எரிச்சல் இருந்தது. வயிறு சங்கடப்படுத்தியது. அவர் இந்த உபாதைகளை வெற்றிகண்டு உடல் தேறினார். "கடவுள் அருளால் நான் தொடர்ந்து உயிர் வாழ்கிறேன்" என்று எழுதினார். முன்னைவிடவும் அவர் குறைவாகத்தான் எழுதினார். தம்மைக் காண விரும்புவோரை வரவேற்பதையும் குறைத்துக் கொண்டார். அதிகம் பேரை அனுமதிப்பதில்லை. என்றாலும், "அன்பார்ந்த நேயர்களுக்கு..." என்ற தலைப்பில் அவர் வாராவாரம் சுயராஜ்யாவில் எழுதி வந்த கருத்துக்கள் மட்டும் தொடர்ந்து வெளியாயின. இந்த "ராஜாஜியின் கருத்துக்கள்" சில வாரங்களில் இரண்டு அல்லது மூன்று சிறிய பத்திகள்தான் இருக்கும். ஆனாலும் தவறாமல் எழுதி வந்தார்.

சுதந்திரா கட்சித் தலைவர்கள் ராஜாஜியின் உள்ளத்தில் சதா குடி கொண்டிருந்தனர். அக்டோபரில், "மசானியிடம் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு" என்று எழுதினார். பெங்களூர் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார் மசானி. கட்சியின் புதிய தலைவர் பிலூ மோடியைத் தமது இல்லத்தில் வரவேற்றார் ஸி. ஆர். அதுமட்டுமல்ல, ஆளும் இ. காங்கிரஸ் கட்சியில் ரங்கா சேர்ந்து விட்டிருந்த போதிலும், அவர் மனைவி இறந்து போன போது, சுயராஜ்யாவில் எழுதிய ஒரு குறிப்பில், "ரங்காவிடம் எனக்குள்ள அன்பு என்றும் மாறாது" என்று குறிப்பிட்டார்.

அதே மாதத்தில் ஜயப்பிரகாஷ் நாராயண் "புதிய அரசியல் உருவாக வேண்டும்" என்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். அரசியல் போராட்டத்தில் ஜே. பி. ஈடுபட வேண்டும் என்று பல ஆண்டுகளாக நம்பிக்கையுடன் எதிர்பார்த்து, அதற்காக உழைத்தும் வந்த ஸி. ஆர்., இந்த அறிவிப்பினால் மகிழ்ந்து போனார். "ஜெயப்பிரகாஷ் நாராயணனின் அறிவிப்பை மிகுந்த மனநிறைவுடன் வரவேற்கிறேன்" என்று எழுதினார்.

கருணாநிதி, ராஜாஜியின் இல்லம் தேடி வந்தார். மதுவிலக்கை மீண்டும் அமுல்படுத்தப் போவதாகக் கூறுவதற்கு அல்ல; தாமிரப் பத்திரம் வழங்குவதற்குத்தான். நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான சுதந்திரப்போராட்டத் தியாகிகளுக்குத் தாமிரப் பத்திரம் வழங்கியது மத்திய அரசு. ராஜாஜிக்கு அதனை அவர் இல்லத்தில் கொண்டு போய்க் கொடுத்தார் கருணாநிதி. அது ஒரு முக்கியமான, அதிகார பூர்வமான நிகழ்ச்சியானதால், 'பாரத ரத்னா' பதக்கத்தைத் துழாவி எடுத்து அணிந்து கொண்டு, கருணாநிதியை வரவேற்றார் ஸி. ஆர். முதலமைச்சரும் ஸி. ஆரும் ஒருவருக்கு ஒருவர் மாலை அணிவித்தனர். பிறகு கருணாநிதி ராஜாஜிக்குத் தாமிரப் பத்திரத்தை, ஆப்பிள், திராட்சை போன்ற பழங்களுடன் தட்டில் வைத்து அளித்தார்.

தமது வாழ்நாள் முழுவதும் பலரைப் பல காரணங்களுக்காக எதிர்த்தவர் ராஜாஜி. கருத்து மாறுபாடு அல்லது கொள்கை மாறுபாடு காரணமாக விளைந்த எதிர்ப்பு இது. ஆயினும் தாம் யாரையெல்லாம் எதிர்த்தாரோ, அவர்களையெல்லாம் நேசிக்கவும் செய்தார் ஸி. ஆர். அந்த முறையில் அவர் தமது அளப்பரிய அடக்கத்தை — கர்வமின்மையை — வெளிப்படுத்திக் கொண்டார்.

கிரிக்கெட் குழுவினருக்கு நடந்த ஒரு வரவேற்பு உபசாரத்தின் போது, "உங்கள் ஆட்டக்காரர்களைச் சந்திக்க விரும்புகிறேன்" என்று காப்டன் விஜய் மர்சண்ட்டிடம் கூறினார் முதலமைச்சர் ஸி. ஆர். அவர் உடனே, "இதோ அவர்களை அணிவகுத்து நிற்கச் செய்கிறேன்" என்று நகர்ந்தார். ஸி. ஆர். அவரைத் தடுத்து, "அவர்களை அவர்கள் நண்பர்களிடமிருந்து

யாரையெல்லாம் எதிர்த்தாரோ அவர்களையெல்லாம் நேசித்தார் ராஜாஜி.



பிரிக்க நான் விரும்பவில்லை; என்னை அவர்களிடம் அழைத்துப் போங்கள்; அவர்கள் இந்தக் கூடத்தில் எங்கிருந்தாலும் சரி'' என்றார்.

ஒரு தடவை மோனிகா ஃபெல்டனிடம், ''இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு யார் அது, ராஜகோபாலாச்சாரி? நாங்கள் கேள்விப்பட்டதேயில்லையே? என்று மக்கள் பேசிக் கொள்வார்கள்!'' என்று கூறிச் சிரித்தார் ராஜாஜி. பல பெரிய மனிதர்களை அச்சத்தில் ஆழ்த்துகிற இந்த எண்ணம், ராஜாஜிக்கு வேடிக்கையாகத் தோன்றி, சிரிப்பை வரவழைத்தது!

அவரது நல்ல பண்புகளில் ஒன்று தவறான முறையில் ஒரு பைசா கூடச் சம்பாதிக்காததாகும். மற்றொன்று, எந்த ஒரு கருத்தையும் ஒளிவு மறைவு இன்றி வெளியிட்டதாகும். ''என் வாழ்க்கை சுத்தமானது'' என்று அவர் எழுதியிருக்கிறார். ''வாழ்நாள் முழுவதும் உண்மையாக நடந்து கொண்டிருக்கிறேன். எனக்கு எது சத்தியம், நியாயம் என்று தோன்றுகிறதோ அதை மட்டுமே பேசியிருக்கிறேன்.''

ஸி. ஆரின் மனைவி மங்கா காலமாகி ஐம்பத்தேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்போது **ஸி.ஆரு**க்கு வயது 37 தான். அன்று முதல் இறுதி மூச்சு வரை மங்காவுக்கு அவர் விசுவாசத்துடன் இருந்து வந்தார். தமது கொள்கைகளிலும் அதே அளவு விசுவாசம் காட்டினார்.

எப்போதுமே அவர் பேராசைப்பட்டதில்லை. ஸி. ஆருடைய சேலம் வீட்டையும் நிலத்தையும் டாக்டர் வாங்க நினைத்த போது, 'நல்ல காரியம்' என்று மலிவு விலைக்குத் தந்தார்.

1940 களிலேயே 'ரைட் ஆனரபிள்' ஸ்ரீனிவாச சாஸ்திரி பின்வருமாறு ஸி. ஆர். பற்றிக் கூறியிருந்தார்: ''அந்த மனிதருக்குத் தம்மைப் பற்றிய நினைப்பே கிடையாது. இரவு பகல் எந்நேரமும் அவர் பொதுப் பணி, பொது நலன் பற்றியே சிந்திக்கிறார். இம்மாதிரி எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' சீனிவாச சாஸ்திரி கூறியது கடைசி மூச்சு வரை ராஜாஜியின் செயல்பாடாக விளங்கியது.

தம்மிடம் உள்ள ஒரே ஒரு குறையை ராஜாஜியே சுட்டிக்காட்டியிருக்கிறார்! ''என்னிடம் ஒரு கெட்ட பழக்கம், பெருந்தீனி தின்பது போல் ஏராளமாகப் படித்து மூளைக்குத் தீனி போடுவேன்!''

ஒரு சலவைத் தொழிலாளியையோ, தையல் கலைஞரையோ காக்க வைப்பது கூட அவருக்குப் பிடிக்காது. ''அவனுக்கு இருக்கிற ஒரே சொத்து நேரம்தான்; அதை நாம் வீணடித்து விடக்கூடாது'' என்பார்.

அஞ்சா நெஞ்சம் படைத்த அவர், சில சமயங்களில் வருந்தியதுண்டு. நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் மறைவைவிட அதிகமாக அவர் நாட்டுக்காகவே விசனப்பட்டார். அக்டோபர் 8 — ஆம் தேதி அவர் காந்தி மண்டபத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பதின்மூன்றே வாக்கியங்கள் பேசினார். அதுதான் அவர் கடைசியாகப் பொதுக்கூட்டத்தில் பேசியது. அப்போது அவர் சொன்னார்:

''வாராவாரம் நான் சுயராஜ்யாவில் என் மனத்திலிருப்பதைக் கொட்டி எழுதுகிறேன். சந்தோஷப்படக் காரணம் ஏதும் எனக்குப் புலப்படவில்லை. அடக்கத்துடன் பகவானைப் பிரார்த்திப்பதுதான் வழி. செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ளும் பக்குவத்தை நாம் கிறிஸ்துவ மதத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். கடவுளிடம் பயப்படுகிற தன்மையை இஸ்லாமிடமிருந்து பெறவேண்டும். இவற்றை அடைந்தால் கீதை காட்டும் மார்க்கத்தில் நடக்க நம்மால் முடியும்.''

அதே மாதம் தி. மு. க. இரண்டாகப் பிளந்தது.

(தொடரும்)

''ஜோஸ்யர் ஐயா, என் ஜாதகப்படி என்ன வியாபாரம் தொடங்கலாம்னு சொல்லுங்களேன்?''

''இப்பத்திய சீசனுக்கு ''மலிவு விலை ஊறுகாய்'' வியாபாரம் ஆரம்பிச்சு நடத்துங்க. அமோகமா நடக்கும்!''

— சீர்காழி. எஸ். புவனா.



''மன்னா! கலகக்காரர்கள் மஹாராணியைத் தேருடன் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்!''

''அவர்களுடன் எப்படியாவது போராடி தேரை மட்டுமாவது மீட்டு வர ஏற்பாடு செய்யுங்கள் தளபதி!''

— ஞா. ஞானமுத்து.



"மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது!"

வட்டமேஜை

* மூர்த்தி (இலவச இணைப்பு) சிறிதானாலும் கீர்த்தி (விஷயம்) பெரிது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

மதுரை — 1, பிரபாகர் ப்ரியன்.

* 'டென்ஷனைக் குறைக்க...' பயனுள்ள இலவச இணைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. பத்திரமாய்க் காக்க வேண்டிய அருமையான புத்தகம்.

மேலகிருஷ்ணன்புதூர், ஆர். கே. லிங்கேசன்.

* சினிமா கலெக்டராய் ஜொலித்தவர் சென்னை கலெக்டரைச் சந்தித்தது புதுமையாக இருந்தது மட்டுமல்ல. இரு துறைகள் பற்றிய பல்வேறு சங்கதிகளையும், சங்கடங்களையும் அறிந்து கொள்ள உதவியது.

சென்னை — 93, சாலி சத்யா.

* 'சினிமா கலெக்டராய் ஜொலித்தவர் சென்னை கலெக்டரைச் சந்திக்கிறார்' என்ற சௌகார் ஜானகி, ஷீலா ராணி சுங்கத் உரையாடல் — கருத்துப் பரிமாறல் அருமையாக அமைந்துள்ளது. திருமதி ஷீலா ஆங்கிலத்தில் எழுதிய சிறுகதைகளைப் பற்றிச் சற்று விவரமாகத் தெரிவித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மதுரை — 1. எஸ். சங்கரநாராயணன்.

* எனக்குக் கூட ஆரம்பத்தில் இருந்தே இன்ஸ்பெக்டர் மீது பலத்த சந்தேகம், இவரும் உடந்தையாக இருந்தாரோ என்று. கடைசியில் அது உண்மையான கொலைகாரனைக் கண்டுபிடிக்க அவர் கையாண்ட தந்திரமான உத்தி என அறிந்த போது உற்சாகம் அடைந்தேன். எழுதிய அபர்ணா நாயுடுவுக்குப் பாராட்டுக்கள்.

வேலூர், கே. வெங்கடேசன்.

* ஏழாவது இரவின் போக்குக்குத் தகுந்தாற் போல் அமைந்த 'ராமு'வின் ஓவியம், திரைப்படம் பார்க்கும் உணர்வை ஏற்படுத்தியது.

மதுரை, க. மாதவன்.

* ''தாற்காலிக வெற்றிகளுக்கே ஆசைப்படும் போது ஜனநாயகம் கேலிக் கூத்தாகிறது'' என்ற தலையங்க வரிகள் ஒவ்வோர் அரசியல்வாதியின் இதயத்திலுள்ளும் இருக்க வேண்டிய வரிகள்.

ஈரோடு, டி. சந்திரன்.



* பாண்டிச்சேரி சட்டமன்றத் தலைவர் தேர்ந்தெடுப்பு முறையில் நடந்த அராஜகங்களையும், சூதுவாதுகளையும் எடுத்துரைத்து, தற்கால அரசியல்வாதிகளின் பதவி வெறியினால் ஜனநாயக மரபு குழிதோண்டிப் புதைக்கப்படுவதைத் தலையங்கம் சாட்டை அடியாய் எடுத்துரைத்தது!

சென்னை — 82, எஸ். யோகலிங்கம்.

* இனம் புரியாத ஆர்வத்துடன் ஓடி வந்து, ஓநாய்கள் முன் விழித்து நிற்கும் சின்னஞ்சிறிய அப்பாவி மான்களை நினைவூட்டியது, 'கனவுச் சுமைகளுடன் ஓடிப் போனவர்கள்' என்ற உண்மை நிகழ்ச்சியின் தொகுப்பு.

மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.

* 'பாலைவனமாகிறது தஞ்சை மாவட்டம்' படிப்பதற்கே மனசு ரொம்பவும் சங்கடப்படுகிறது. ஆனால், அதுதான் உண்மை என்கிற போது அதற்கான மாற்று ஏற்பாடுகளில் மாநில அரசும், மத்திய அரசும் ஈடுபட வேண்டியது உடனடிப் பிரச்னையாகும். அறிஞர்களின் ஆலோசனைகளைப் பெற்று, ஆக வேண்டிய செயலில் இரண்டு அரசுகளும் ஈடுபடும் என்று எதிர்பார்க்கிறேன்.

பெங்களூர் — 2, ப. மூர்த்தி.

* 'ஆயிரம் கஷ்டம் இருந்தாலும்' சிறுகதை நடைமுறை வாழ்க்கையை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

சென்னை — 45. ஏ. ஜஹ்பர் காதர்.

* 'கவிதைக்குள் ஒரு கவிதை'ப் பகுதி மிக்க நயமாகவும், இலக்கியத்தை அதிகம் படித்தறியாதவர்கள் மனத்திலும் இலக்கியச் சுவையை ஊட்டுவனவாகவும் இருக்கிறது.

மகேந்திர மங்கலம், டி. ஜே. இராமலிங்கம்.

* 'கவிதை பாடும் அலைகள்' படத்தின் இயக்குனர் டி. ஜே. போஸ் அல்ல; டி. கே. போஸ். மேலும் அவர் ஒன்றும் புது இயக்குனர் அல்ல. ஏற்கெனவே ராமராஜன் நடித்த 'என்னப் பெத்த ராசா' உள்பட பல படங்களை இயக்கியவர்தாம்.

மானாமதுரை, ஜெ. எம். முகம்மது ரஃபி.

* அதிகமான செலவு பண்ணி அன்பளிப்பு வழங்க முடியாத குறையை நீக்கும் பொருட்டு, சித்ராவின் கணவன் உடலுழைப்பால் எல்லோரையும் கவர எண்ணியது புத்திசாலித்தனமே. 'உயரங்கள்' சிறுகதை எழுதிய நாகராஜனுக்கு என் பாராட்டுக்கள்.

கோயமுத்தூர், ஏ. ஜி. கல்யாண சுந்தரம்.

* 'அம்மன் நகை' சிறுகதை படித்தேன். 'கடமையை விட வழிபாடு ஒன்றும் இடையாது; அபிஷேகம் செய்வதனால் மட்டும் உன்னத நிலை வராது...' என்ற வரிகள் கதையின் கருத்தை 'நறுக்'கென்று புரிய வைத்தன.

இராணிப்பேட்டை, பேப்பர் கார்த்திக்.

* ''ஏதோ மூக்குத்தி போட்டுக் கொள்வது முக அழகுக்கு மட்டும் தான் என்று நினைத்திருந்தேன். மூக்குத்தி இன்றைய பேஷன் கட்டுரையை படித்த பிறகுதான் மூக்குத்தி போடுவதால் நரம்பு சம்பந்தமான சில நோய்களும் தீருகின்றன என்பதைத் தெரிந்து கொண்டேன்.

தக்கோலம், அ. முஸ்தபா.

எம்.ஜி.ஆர். விளம்பரம்; கலைஞர் விளம்பரம் – வித்தியாசம் என்ன?



• இலக்கியச் சிற்றோடை



• மூவகை விருதுகள்

* வித்யா, தர்ம்புரி.

? டீ.வி. யில் **Spectacular World of Guinness Records** பற்றி...?

! படித்த செய்திகளைப் படமாகப் பார்க்கும் போது பிரமிப்பாகத்தான் இருக்கிறது.

* எல். டேனியல் சந்துரு, சேத்துப்பட்டு.

? முதல்வருடன் 'கம்' போன்று ஒட்டிக் கொண்டுள்ளாரே, துரைமுருகன்?

! ஹூம். இப்படித்தான் ஆர்க்காடு வீராசாமியும் ஒட்டிக் கொண்டிருந்தார்.....

* லவ்லி பாலகிருஷ்ணன், மங்களக்குடி.

? தர்மபுரி உணவு விடுதி ஒன்றில் ஒரு முட்டை உணவுக்குக் 'கல்கி' என்று பெயர் இடப்பட்டுள்ளது பற்றி...?

! ரொம்பச் சுவையான. அதே சமயம் ஆரோக்கியமான உணவாக இருக்க வேண்டும். அதனால்தான் 'கல்கி' என்று பெயர் வைக்கத் தோன்றியிருக்கிறது.

* எஸ். சரவணன், புதுப்பேட்டை.

? முதல்வர் எம். ஜி. ஆரின் ப. திரிகை விளம்பரத்துக்கும் இன்றைய முதலவரின் விளம்பரத்துக்கும் வித்தியாசம் என்ன?

! முன்னவர், 'என் மனைவியேயானாலும்' என்று தொடங்கி, உறவினர்களின் தலையீட்டை அதிகாரிகள் ஏற்று எதுவும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். கருணாநிதியோ, தமது உறவினர்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு வரும் நபர்களை நம்பாதீர்கள் என்கிறார். இரண்டுக்கும் ரொம்ப வித்தியாசம் உண்டு. அதுதான் சொல்லிவிட்டாரே ஸி. எம்., "உறவினர்கள் தலையீடு இருந்தால், ஒன்று அவர்கள் வாழ்வார்கள்; இல்லை நான் வாழ்வேன். இரண்டில் ஒரு உயிர்தான் நிலைக்கும்" என்று. கடுமையான பேச்சுத்தான் — எச்சரிக்கையும் கூட.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

அ. ராஜா ரஹ்மான்,
பி. ஆர். சி. நடத்துனர்,
திருப்பரங்குன்றம் கிளை,
மதுரை — 625 005.

* டி. சீனிவாசன், சென்னை — 79.

? நேபாள நிலைமை குறித்து...?

! நிம்மதிப் பெருமூச்சு விடலாம். பல கட்சி ஜனநாயக முறை அமுலுக்கு வரும் என்று வீரேந்திரா அறிவித்து விட்டார். இத்தனை உயிர்ச் சேதம் இன்றியே இது நடந்திருந்தால் இன்னும் சந்தோஷமாக இருந்திருக்கும்.

* பாக்கியமுத்து, திருச்சி — 20.

? கலைப்படம் எடுக்கத் தயாரிப்பாளர்கள் தயங்குவது ஏன்?

! கேரளத்தில் அடூர் கோபாலகிருஷ்ணனும் அரவிந்தனும் ஷாஜியும் பத்து லட்சத்துக்குள் படமெடுத்து உலகப் புகழ் பெற்று விட முடிகிறது. இங்குள்ள தயாரிப்பாளர்களுக்குக் கலைப் படமும் வேண்டாம், கதைப் படமும் வேண்டாம். கலப்படமாக எதையோ காட்டி, காசு வாரிக் கொட்டினால் போதும்!

* மேலை பழ. நாகப்பன், சென்னை.

? தாதா சாகேப் விருது பெற்றிருக்கிறாரே லதா...?

! உரிய சமயத்தில் உரிய நபருக்குத் தரப்பட்ட தகுதியான கௌரவம்.

* ஏ. சரவணன், குடியாத்தம்.

? கம்யூனிசவாதி மறைந்த பி. டி. ரணதிவேயிடம் தங்களைக் கவர்ந்த அம்சம்?

! சமரசம் செய்து கொள்ளாத கொள்கைப் பிடிப்பு. இந்த விஷயத்தில் இவர் ஈ. எம். எஸ். ஸுக்கும் ஒரு படி மேலே!

* எழிலன், திருச்சி.

? இந்த வயதிலும் மனோரமா அவார்டு வாங்கியிருக்கிறாரே?

! நடிப்பாற்றலுக்கு வயது வரம்பு கிடையாது.

* டி. மகேஷ், வீரராக்கியம்.

? ஜெயலலிதாவைக் குறைகூற யாருக்கும் தகுதி கிடையாது என்று எஸ். டி. எஸ். கூறியுள்ளாரே?

! தமது சொந்த அனுபவத்தைப் பொது

உடைமையாக்குகிறார். ஏற்பதும் ஏற்கா ததும் நம் இஷ்டம்.

* ஆர். ஸ்ரீதரன், கும்பகோணம்.

? மறைந்த மலையாள நடிகர் அடூர் பாஸி பற்றிச் சில வரிகள்?

! சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர் என்று மூன்று விதமாகவும் பாராட்டுப் பெற்று மூன்று வகை விருதுகளும் வென்றவர் அவர் ஒருவ ராகத்தான் இருப்பார் என்று தோன்றுகிறது. நகைச்சுவையுடன் கூடவே சோகத்தையும் பிரதிபலிப்பதில் நமது நாகேஷ் மாதிரி பிரகா சித்தவர். நகைச்சுவை நடிப்பிலும் இலைமறை காயாக அமைந்த உயர்தர, அடக்கமான நடிப்பு; அப்பட்டமான அசட்டு ஹாஸ்யம்; இரட்டை அர்த்தம் தொனிக்கும் கீழ்த்தர மான நகைச்சுவை என்று எல்லாவற்றை யும் ஏற்றுப் படிப்படியாக உயர்ந்து காட் டியவர்.

* அ. ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.

? 'என்னுடைய டெலிஃபோன் பேச்சுக் களை இந்த அரசு ஒட்டுக் கேட்கிறது' என்று சந்திரசேகர் குற்றம் சுமத்தியிருக்கிறாரே?

! அப்படிக் குற்றம் சுமத்தியவர் ஸி. பி. ஐ. அதிகாரிகள் விசாரணைக்கும் சோதனைக் கும் வந்தபோது ஒத்துழைத்திருந்தால் அவர் கூறுவதற்கு மதிப்பு இருக்கும். அல்லாத போது மீண்டும் ஒரு முறை நம் மதிப்பில் தாழ்ந்து போகிறார்.

* எஸ். கணேசன், பாண்டிச்சேரி.

? சமீபத்தில் தங்கள் நெஞ்சை நெருடிய நிகழ்ச்சி?

! தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகள் பிடித்துப் போய்க் காவலில் வைத் திருந்து, பிறகு விடுவித்ததுதான். விடுதலைப் புலிகளைப் பாம்பு என்று மிதிக்கவும் முடி யாது, பழுதை என்று தாண்டவும் முடியாது என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக் கிறார்கள்.



* விளம்பரத்தில்...



* ...வித்தியாசம



* இந்த வயதிலும்...

* ரகுவீர், சென்னை.

? ஸாம்பிட்ரோடா என்னவாகப் போகி றார்?

! அவரது ஸி. டாட் இலாக்காவின் செயல் பாடு பற்றி ஆராயப் புகுந்த கமிட்டி, இரண்டு விதமாகவும் கருத்துத் தெரிவித்துள்ளது. 'போதிய முன்னேற்றமில்லை' என்று ஒரு முடிவு இருந்தாலும், அதே அறிக்கையில் 'முன்னேற்றம் கணிசமாக இருக்கிறது' என் பதாக ஆட்சேபணைக் குறிப்பும் கமிட்டியில் உள்ள சிலரால் எழுதப்பட்டுள்ளது. எனவே அமைச்சர், பிட்ரோடாவுக்கு மீண்டும் காலக் கெடு நிர்ணயித்து, மேலும் ஒரு வாய்ப்புத் தருவது உசிதமாக இருக்கும். அமைச்சர் உன்னிகிருஷ்ணனுக்குப் பிட்ரோடா மீது உள்ள தனிப்பட்ட ஒரு விரோத உணர்வு, பிட்ரோடாவைக் கழற்றி விடுவதிலேயே குறியாகச் செயல்படக் கூடாது. பிட்ரோடா நாட்டுக்கு நல்லது செய்யவே மனப்பூர்வ மாக எண்ணுகிறார் என்பதை அவர் சொல் லும் செயலும் உணர்த்துகின்றன.

* கமலா, செங்கல்பட்டு.

? கல்கியில் முன்பு வெளியான "ரவி சந்திரிகா" இப்போது டி. வி. யில் தொடர் நாடகமாக வருகிறதே, பார்க்கிறீர்களா?

! டேக் ஆஃப் சரியாக இல்லை; லாண்டிங் ஸ்மூத்தாக இருக்கிறது! கடந்த இரு வாரப் பகுதிகள் மனநிறைவை அளித்தன. சோமு வின் கதை, திடீர் திருப்பங்கள், மர்மங்கள் எதுவுமின்றி அளவான உணர்ச்சிப் பிரதி பலிப்புடன் சலசலத்துச் செல்லும் இலக்கியச் சிற்றோடை. அந்தக் கதையில் வரும் பாத்தி ரங்களின் குணசித்திரங்களை நடிப்பிலே கொண்டு வருவது ரொம்பக் கஷ்டம். முடிந்த மட்டில் நடிகர்கள் மனப்பூர்வமாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்றாலும், சங்கீ தம் — நாட்டியம் இரண்டுமே பிரதானமான கதைக்கு ஏற்றவர்களாக அவர்களால் பிர காசிக்க முடியாமலிருப்பது ஏமாற்றமே.

* தகுதியான கௌரவம்





* இன்னொரு வாய்ப்பு



* குற்றச்சாட்டு

அதிர்ஷ்ட தேவதை

சென்ற வாரம்

கிருஷ்ண சாண்டில்யா அண்ட் பிரதர்ஸ் நிறுவனத்தின் அதிபர், ரமேஷ் சாண்டில்யா, பம்பாய் சென்றிருக்கிறான். அவன் இல்லாத வேளையில் ஆபீஸ் அரட்டையில் இறங்குகிறது.

ரமேஷின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ரமணி ஒரு மூத்த குமாஸ்தா. அவனும் மாலு என்கிற பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள். சுகந்தி என்னும் இருபத்தொன்பது வயது டைப்பிஸ்டும், 'நெய் தோசை' கிச்சா எனும் குமாஸ்தாவும், வெங்கி என்னும் வெங்கிடாசலமும், ரங்கன் என்பவனும் மற்ற சிப்பந்திகள். ரங்கன் ஒரு சோனி. குள்ளம். பரம சாது. ரங்கனுக்கு ரமணிதான் எல்லாம். அவன் கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கையில் ஈடுபட விரும்புகிறான். மாதம் தவறாமல் லாட்டரிச் சீட்டு வாங்கி வரும் அவனுடைய பழக்கத்தைக் கண்டிக்கும் ரமணி, அவன் மணவாழ்க்கையில் ஈடுபட வேண்டாம் என்று புத்தி கூறுகிறான்.

2

மாலு சிரித்தாள்.

''என்ன ரமணி, ஷாக் அடிச்சாப்ல உட்கார்ந்துட்டீங்க?''

''ஷாக் அடிச்சிருந்தா உட்கார்ந்தா இருப்பேன், மாலு? கீழே விழுந்திருப்பேனே?''

''ரெண்டாவது நியூஸைச் சொல்லட்டுமா?''

''உன் இஷ்டம்.''

''ஒருவழியா என் அக்கா கலியாணம் முடிவாயிடுச்சு. எனக்கு ரெயில்வே கேட்டைத் திறந்து விட்டாச்சு!''

''ரொம்ப சந்தோஷம். நானே வந்து உன் அக்காவைப் பார்த்து வாழ்த்துச் சொல்றேன்.''

''எல்லாம் கலியாணத்தன்னிக்குச் சொன்னாப் போதும்... என் அம்மாவுக்கு ஓர் ஆசை.''

''என்ன?''

''ரெண்டு பெண்களோட கலியாணமும் ஒரே நாள்லே ஒரே மணமேடையிலே நடக்கணும்னு.''

''ஒரே பிள்ளைக்கேவா?''

''ரமணி, விளையாடாதீங்க! நாம ரெண்டு வருஷமா இருபத்து நாலு மாசமா காதலிச்சுட்டு வர்றோம்.''

''நீ நினைக்கிற மாதிரி நம்ப கலியாணம் அவ்வளவு எளிதா முடிஞ்சுடும்னு எனக்குப் படலே!''

''ஏன் ரமணி?''

''என் வீட்டுக்கு வந்திருக்கே இல்லே?''

''ஒரே ஒரு தடவை!''

''அன்னிக்கு ஈஸி சேர்லே ஒருவர் உட்கார்ந்திருந்தாரே அவர்தான் தாத்தா... போன நூற்றாண்டிலே பொறந்தவர். 1898... முழுசா இன்னொரு நூற்றாண்டையும் முடிச்சுட்டு அடுத்த நூற்றாண்டிலே போய்ச் சேரலாம்ங்கற கங்கணத்தோட இருக்கார்.''

''நம்ப கலியாணத்துக்கும் உங்க தாத்தாவுக்கும் என்ன சம்பந்தம், ரமணி?''

''இருக்கு. நிறைய இருக்கு மாலு! எங்க வீடு பெரிய வீடுதான். தாத்தாவுக்கு முப்பது வயசு இருக்கறப்ப மயிலாப்பூர்லே கிரவுண்டு ஐநூறு அறுநூறுன்னு இருந்தது. பாட்டியோட மஞ்சக்காணி நிலத்தை வித்து நிலத்தை வாங்கி வீடும் கட்டினார். மராமத்து இலாகாவிலே ஓவர்சீரா இருந்தாரா, கட்டறது எளிதா இருந்தது. அஞ்சு கிரௌண்ட். அதிலே மூவாயிரம் சதுர அடிக்கு வீடு.''

''இதெல்லாம் எதுக்குச் சொல்றீங்க, ரமணி?''

''கொஞ்சம் பொறுமையாக் கேளு, மாலு... பாட்டி போய் வருஷம் பத்தாறது. அறுபத்தஞ்சு வயசுப் பெரியப்பா, பெரியம்மா, நாப்பத்தஞ்சு வயசுப் பிள்ளை, அவரோட மூணு பிள்ளைகள், அப்புறம் என்னோட அப்பா, அம்மா, அண்ணா, இன்னும் சித்தப்பா, அவரோட ரெண்டு பிள்ளைகள் எல்லாரும் இந்த மூவாயிரம் சதுர அடியிலே ஒடுங்கி இருக்கோம். கலியாணமாகாத ரெண்டு பெண்கள் வேறே உண்டு. இருக்கிறது ஒரு ஹால். கீழே மூணு ரூம். மாடியிலே மூணு ரூம். கீழே ஒரு ரூம்லே தாத்தா. அதுக்குள்ளே யாரும் அனாவசியமா பிரவேசிக்கவே படாது.

''எல்லாப் பிள்ளைகளும் அவங்க மனைவிமாரும், பேரன்களும் அவங்க பெண்டாட்டிகளும், அவருக்கு சிசுருஷை செய்தே ஆகணும்னு தாத்தா தீவிரமா இருக்கார். அவர் மனசுப்படி நடக்கலேன்னா வெளியே போயிடலாம்னு உறுதியாகவும் சொல்றார். ஆனா யாருக்கும் வெளியே போகப் பைத்தியம் பிடிக்கலே. தாத்தாவைத் தவிர, நாங்க பதினேழு பேர் இருக்கோம். அப்பா, பெரியப்பா, சித்தப்பா மூணு பேரும் அப்பா எப்ப உயில் எழுதுவார்,

பி.வி.ஆர்.

எப்ப மண்டையைப் போடுவார்ன்னு காத்திருக்காங்க! தினசரி வாசல்லே நின்னு யமன் வர்றானான்னு பார்த்திட்டிருக்காங்க!''

''ஏன்?''

''அக்கம் பக்கத்திலே ரெண்டு மூணு வீடு வித்துப் போச்சு. எங்க வீட்டை விடச் சின்ன வீடு. எல்லாம் பன்னிரெண்டு லட்சம், பதினைஞ்சு லட்சம்னு போச்சு. மூணு அடுக்கு, நாலு அடுக்குக் கட்டடமாக் கட்டியிருக்காங்க. எங்க வீடு குறைஞ்சது இருபது இருபத்திரண்டு லட்சத்துக்காவது போகும்.''

''அதாவது தலா குறைஞ்சது ஏழு லட்சமாவது கிடைக்கும்னு மூணு பிள்ளைகளும் நம்பறாங்க.''

''ஆமாம். ஆனா இதிலே ஒரு சிக்கல்.''

''என்ன?''

''அம்மாவோட மஞ்சக்காணியை வித்ததுக்கு இப்ப ஆதாரம் தேட முடியாது. தாத்தா சொந்த சம்பாத்தியத்திலேர்ந்து கட்டினார்ங்கறதுக்கு ஆதாரம் இருக்கு. அதனாலே அவர் இஷ்டம் போல வீட்டை யார் பேருக்கு வேணும்னாலும் எழுதி வைக்கலாம்.''

''அப்பமென்னா?''

''எனக்கு மூணு அத்தைகள். மூணு பேரும் வாரா வாரம் தாத்தாவுக்கு என்னென்ன பிடிக்குமோ அதையெல்லாம் பண்ணி எடுத்துட்டு வருவா. அவருடைய கால்களைப் பிடிச்சு விடுவா. பாட்டியோட மலரும் நினைவுகளை அள்ளித் தெளிப்பா... தாத்தா மூணு பெண்களையும் உயில்லே மறக்கமா எழுதுவார்னு எல்லாருக்கும் பயம்.''

''இது உங்க வீட்டு விவகாரம், ரமணி. எனக்கு இதிலே அக்கறை இல்லே. எனக்கு வேண்டியது நீங்கதான். நீங்க மட்டும்தான்.''

''நீ ஒண்ணைப் புரிஞ்சுக்கலே, மாலு.''

''என்ன அது?''

''நமக்குக் கலியாணம் ஆனா நமக்குன்னு ஒரு ரூம் வேண்டாமா? அது கூட இப்ப இல்லே.''

''கலியாணமானப்புறம் நான் பத்தொன்பதாவது பேர்வழியாக் குடிவந்து அங்கே



குப்பை கொட்டுவேன்னு எதிர்பார்க்கறீங்களா, ரமணி?''

''நான் என் வீட்டையும் அப்பா அம்மாவையும் உதறி எறிஞ்சுட்டு நீ கை காட்டற திசையில் ஓடி வந்துடுவேன்னு நீ எதிர்பார்க்கிறியா மாலு?''

''தனிக்குடித்தனத்திலே என்ன தப்பு?''

''நான் என் மனசில ஒரு பெரிய திட்டம் தீட்டி வைச்சிருக்கேன். அது வெற்றியா முடியணும்னா, நான் தாத்தா வீட்லேயே இருந்தாகணும்.''

''என்ன திட்டம்?''

''சித்தப்பா ஒரு ரெண்டுங்கெட்டான். தாடியோட எந்தக் காவி போனாலும் பின்னாலே போயிடும். அதைத் திருப்பி இழுத்துட்டு வர்றதுக்குள்ளே சித்திக்கு உசிர் போய் உசிர் திரும்பி வந்துடும். வயசு அறுபது ஆச்சு. இன்னும் விவேகம் வரலே. பெரியப்பாவுக்கு வயசு அறுபத்தஞ்சு. ஒரு அட்டாக் வந்தாச்சு. இன்னொரு அட்டாக் வந்தா, தாத்தாவுக்கு முன்னாடி போயிடுவார். அவரோட ரெண்டு பிள்ளைகள்ளே ஒருத்தன் ஸ்டேட்ஸ்லே இருக்கான். இன்னொருத்தன் வீட்லே இருக்கான். ஆனா ஒட்டாம. அப்புறம் என் அப்பா. அவர் நான் வரைஞ்ச கோட்டைத் தாண்ட மாட்டார்.''

''உங்க திட்டம்தான் என்ன?''

''பிதாமகர் — அதுதான் தாத்தா ஒரு நாள் கண்ணை மூடித்தான் ஆகணும். அப்புறம்? யாருக்கும் வீடு வேண்டாம்! பணம்தான் வேணும்! அதை நான் எப்படியாவது ஏற்பாடு செய்து அவங்களைக் கழட்டி எறிஞ்சுடுவேன். இந்த வீட்டை இடிச்சுத் தள்ளுவேன். அப்புறம் என்ன? அஞ்சு கிரௌண்ட் நிலத்திலே குறைஞ்சது முப்பது ஃப்ளாட் கட்டலாம். மயிலாப்பூர்லே நிலத்தோட விலை ஏறிட்டே போறது. இந்த இடத்திலே சதுர அடி மூந்நூறு ரூபாய்னாலும் க்யூவிலே மனுஷா வந்து நிப்பா!''

''நம்ப காதல் முடிஞ்சுட்டுதுன்னு வைச்சுக்கலாமா, ரமணி?''

''ஏன் இப்படிப் பேசறே, மாலு?''

''காதலுக்கு இளமைதான் இருக்கலாம். மூப்பும் கிழட்டுத்தனமும் வர்ற அளவுக்குத் தொடரக் கூடாது ரமணி. என் அக்கா கலியாணம் முடிஞ்சு ஆறு மாசத்துக்குள்ளே நீங்க என் கழுத்திலே தாலியைக் கட்டியாகணும். உங்க வீட்லே நமக்குத் தனியா ஒரு பெட் ரூம் இல்லேன்னா, கிடைக்கிற இடத்தை பெட்ரூமா மாத்திப்போம்! அதுக்கு அப்புறம், நீங்க உங்க திட்டத்தை எப்படி வேணும்னாலும் தீட்டிக்குங்க, நிறைவேத்திக்குங்க!''

''யோசிக்கிறேன், யோசிக்கிறேன்! ஒரு வழி கிடைக்காமலா போயிடும்?'' என்றான் ரமணி.

மாலு கோபமாய்த் தன் இருக்கைக்கு சென்றாள்.

ரங்கன் சோர்ந்து போனான்.

ரமணி அவனைக் கடிந்து பேசவில்லை. ரங்கன் மீது எரிச்சல் கொள்ளவில்லை.

தன்னுடைய கண்ணோட்டத்தில் ரங்கனுடைய வாழ்க்கையை அலசிப் பார்த்து, அதன் யதார்த்தத்தில் புத்திமதி சொல்லுகிறான். என்ன செய்ய?

பழைய நாட்கள் கண்முன் நின்றன.

வானத்தில் பறந்து கொண்டிருக்கும் இரு பறவைகள் திடீரென்று சந்தித்துக் கொள்ளுவது போல அவனும் ரமணியும் நான்கு ஆண்டுகளுக்கு முன் சந்தித்துக் கொண்டார்கள். ஆனால் பறவைகளைப் போல அவர்கள் உடனடியாகப் பிரிந்து விடவில்லை. ஏதோ ஒரு சக்தி ஒருவரையொருவர் ஈர்த்து ஒட்ட வைத்தது.

''ஏம்ப்பா நீ யாரு... எங்கேயிருந்து வர்றே?''

''கும்பகோணம். அங்கேயிருந்து வர்றேன்.''

''பட்டணத்திலே பிழைப்புத் தேடவா?'' என்று கேட்டான் ரமணி.

''ஆமாம் ஐயா... அண்ணனும் அண்ணியும் துரத்திட்டாங்க!''

''ஏன் ஏதானும் திருடிட்டியா?''

''ஐய்யோ... திருட்டா? நானா? ஐயா நீங்க என்னைத் தப்பாப் புரிஞ்சுட்டிருக்கீங்க... நான் அண்ணனுக்கு ஒரு சுமையாம். எனக்கு தம்பி ஒருத்தன் இருக்கான். அவன் தான் அண்ணியுடைய அஞ்சு சவரன் சங்கிலியைத் திருடிட்டு ஓடிட்டான். நான் அப்படியில்லீங்க!''

''பிழைப்புத் தேடிட்டு வந்திருக்கியே, உன்னாலே எந்த வேலை செய்ய முடியும்? வாயாலே ஊதினாக் காத்துலே பறந்து கும்பகோணத்திலேயே போய் விழுவே போலிருக்கு. உனக்கு யார் என்ன வேலை கொடுப்பாங்க?''

ரங்கனால் அழத்தான் முடிந்தது.

''உன்னைப் பார்த்தா சாதுவாப் படறது. பாவமாகவும் இருக்கு.. ஆமாம், எது வரையில் படிச்சிருக்கே?''

''எட்டாங்கிளாஸ் பெயிலுங்க.''

''சாப்பிட்டியா?''

''உம்.''

''என்ன?''

''ரெண்டு பன், ஒரு டீ.''

''கையிலே காசு இருக்கா?''

''ஒரு ரூபாயும் சில்லறையும்.''

''ஒண்ணு செய்.''

''என்னங்க?''

''இப்ப என் வீட்டுக்கு வா. அங்கே என் தாத்தா இருக்கார். அவருக்கு வயசு தொண்ணூறுக்கு மேலாறது. அவர் அறையைச் சுத்தம் பண்ணி, அவருக்கு வேண்டியதைச் செய்... அவரோட வேட்டி துணிகளைத் தினசரி தோய்ச்சு வை.''

''சரிங்க.''

''எங்க வீட்லே நிறையப் பேர் இருக்காங்க... ஆளுக்கு ஒரு வேலை சொல்லுவாங்க.''

''செய்யறேன்.''

''ஆனா யாரும் சம்பளம் கொடுக்க மாட்டாங்க.''

''ஐயா!''

''பயப்படாதே... ரெண்டு வேளை சாப்பாடு, காப்பி, பலகாரம் எல்லாம் கிடைக்கும். அது சரி உனக்கு என்ன பழக்கமெல்லாம் உண்டு?''

''என்ன சொல்றீங்க, ஐயா?''

''பீடி சிகரெட்? பட்டை... கள்ளு.''

''கிடையாதுங்க.''

''ஏம்ப்பா ஒரு கெட்ட பழக்கமும் இல்லேன்னா எப்படி ஜாலியா வாழ்வே? நீ பொறந்ததே தப்பு!''

ரங்கன் பதில் சொல்லவில்லை.

''ஆமாம் அது என்ன உன் பாக்கட்லே, மஞ்சளாத் தெரியுது.''

''லாட்டரி டிக்கட்டுங்க. ஒரு ரூபா டிக்கெட்.''

''ஓ, இந்த டிக்கட்டை வெச்சுட்டு லட்சாதிபதியா ஆயிடலாம்னு சொப்பனமா? அது சரி, இது பழக்கமா?''

''ரெண்டு மூணு வருஷமா வாங்கிட்டு வரேனுங்க.''

''பணம்?''

''மேட்டுத் தெருவிலே ஒரு ஓட்டல்லே மேஜையைத் தொடச்சுட்டிருந்தேன். மாசம் பத்து ரூபா சம்பளம், சாப்பாடும் போடுவாங்க. அப்ப ஏற்பட்ட பழக்கம்.''

''எனக்குத் தெரியும், மனுஷன்னு பொறந்தா ஒரு கெட்ட பழக்கமாவது இருந்தாகணும்னு. சரி, வா என் கூட!''

ரமணியின் வீட்டில் மூன்று மாதங்கள். ஆளுக்கு ஆள் அவனை உலுக்கி எடுத்தார்கள்.

ஒரு நாள் —

ரமணி, ''நாளைக்கு என் கூட ஆபீசுக்கு வா'' என்றான்.

ரங்கன் போனான்.

ரமேஷ் சாண்டில்யா, ரமணியின் வேண்டுகோளை உடனடியாக ஏற்றுக் கொண்டான். ப்யூன் வேலை. நூறு ரூபாய் சம்பளம்.

அன்று முதல் ரமணிதான் ரங்கனுடைய தெய்வம். ஆதர்ச புருஷன் வழிகாட்டி.

இப்போது ரங்கனால் ரமணியின் சொல்லை மீறி நடக்கவும் முடியவில்லை. அதே சமயம் தன் ஆசையை அடக்கிக் கொள்ளவும் முடியவில்லை. சமீப காலமாக, வாட்ச்மேன் மயில்சாமி மிகவும் நெருங்கிப் பழகுகிறான். பெற்ற பிள்ளை மீது இருக்கக்கூடிய பாசத்தையும் பரிவையும் காட்டுகிறான். ஏற்கெனவே மூன்று நான்கு தடவைகள் அவனுடைய வீட்டுக்கு



எம். எல். ஏ.: வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் என் தொகுதியில் ஒரு சோடா ஃபேக்டரி ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்!''

— கடுவை. கோபால்சாமி.

ரங்கன் போயாகி விட்டது. தனத்தைப் பார்த்தாகி விட்டது. அவளுடைய இளமை அவனைப் படாதபாடு படுத்தியது. அவளுடைய கண்கள் சிரித்துப் பேசுவது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. ஒரு தாயில்லாப் பெண்ணுக்கு வாழ்வு அளிக்க வேண்டியது அவனுடைய கடமை என்று மயில்சாமி அவனிடம் மன்றாடியிருக்கிறான். தனத்தைப் பார்த்தாலே பாவமாக இருக்கிறது. குடித்துக் குடித்துத் தன்னையே சீரழித்துக் கொண்டு வரும் மயில்சாமி திடீரென்று கண்ணை மூடி விட்டால்? அப்புறம், தனபாக்கியத்தின் கதி என்னாகும்? ஊரிலே இருக்கிற அயோக்கியர்களும் ரௌடிகளும் ஓநாய்களாக அவளைச் சீரழித்து விடுவார்களே!

திடீரென்று ரங்கனுடைய மனத்தில் ஒரு உறுதி பிறந்தது. ஆனால் மறுகணமே ரமணி உறுதியைக் குலைப்பது போலப் பட்டது.

''ரங்கா!''

ஏறிட்டுப் பார்த்தான்.

''ரமணி சார்! நீங்களா?''

''என்ன அசைபோட்டுட்டிருக்கே?''

''ஒண்ணுமில்லே ரமணி சார்!''

''அப்ப உனக்கு புத்திசுவாதீனம் இல்லேன்னு அர்த்தம்!''

''ரமணி சார்!''

''எனக்கு எல்லாம் தெரியும், ரங்கா! மயில்சாமி நல்லவன் இல்லே. அவன் பொண் தனமும் உனக்கு ஏத்தவ இல்லே... அவளை இந்த நிமிஷத்திலேந்து மறந்துடு. நீ கலியாணம் பண்ணிக்கவே வேண்டாம்.''

''ரமணி சார், ஏன் சார் இப்படி ஒரு தண்டனையை எனக்குக் கொடுக்கறீங்க?''

''அழுகையை நிறுத்து. பிளாஸ்க்கை எடுத்துட்டுப் போ. ஸ்ட்ராங்கா ரெண்டு கப் காப்பி!''

ரங்கன் மௌனமாய் நகர்ந்தான்.

(தொடரும்)

"எதுக்கு சீட்டுக் குலுக்கிப் போடறீங்க சார்?"

"பில்லுக்கு யார் பணம் குடுக்கறதுன்னு பார்க்கிறோம்பா!"

"அப்படியே டிப்ஸுக்கு யார் பணம் தர்றதுன்னும் பாத்துடுங்க சார்!"

— ஞா. ஞானமுத்து.





"வர வர எதெதுக்குத்தான் போலீஸ் பாதுகாப்புக் கேட்கிறதுன்னு ஒரு வரைமுறையே இல்லாமல் போச்சு..."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"பேங்க்ல கொள்ளையடிக்கப் போறோம், பாதுகாப்புத் தர முடியுமான்னு ஒருத்தன் கேட்கிறானே?!"

— வி. ரேவதி.



"கதை சரியில்லைன்னா பிரசுரம் செய்யாம இருந்திருக்கலாமே, அதை விட்டுட்டுக் கதைக்குக் கீழே என் முழு முகவரியையும் வெளியிட்டு இப்படிப் பழி வாங்கிட்டீங்களே, சார்!"

— நீடாமங்கலம் ஜே. பி.



"பெண் பார்க்கப் போன இடத்தில் பையன் அல்பமா நடந்துக்கிட்டான், ஸார்..."

"எப்படி...?"

"பெண் உள்ளே போனதும், 'ஒன்ஸ் மோர்'னு கத்திட்டான்!"

— ஆர். வசந்தகுமார்.



மகாராஷ்டிர சட்டமன்றத் தலைவர் மதுகர்ராவ் சௌதிரி 19 ஆண்டுகளுக்குப் பின் அங்கு காந்தி குல்லாயைக் காண வைக்கிறார்! இந்தக் குல்லாய் இல்லாமல் அவர் சட்ட சபைக்கு வருவதே இல்லை! முதல் மந்திரி பவாரும் காந்தி குல்லாய் அணிவதுண்டு. ஆனால் குடியரசு தினம், சுதந்திர தினம் என்று ஆண்டுக்கு இருமுறை மட்டும்தான்!

ஆதாரம்: 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

— தகவல்: ராஜீவி நரசிம்மன்.

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1) ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் — 3 பாகங்கள் - விலை ரூ. 220/-
2) ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் - விலை ரூ. 240/-
3) ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - விலை ரூ. 60/-

II **கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புக்கள்.**

1. போதாயன பூர்வாபரப்ரயோகம் (ஒரே வால்யூம்) - விலை ரூ. 75/- 2. போதாயன அபரப்ரயோகம் - விலை ரூ. 40/-, 3. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம்- விலை ரூ. 70/-, 4. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - விலை ரூ. 35/-, 5. ஆபஸ்தம்பீய ஆஹிதாக்னி - ஸம்ஸ்கார ப்ரயோகம் - விலை ரூ. 25/-, 6. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - விலை ரூ. 65/-, 7. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் விலை ரூ. 30/- 8. கல்ப சிந்தாமணி - விலை ரூ. 40/-

III **நாகர அக்ஷரம் - பத உரையுடன் - (தமிழில்)**

1. ஸ்ரீமத் பாகவதம் - 5 volumes - 12 ஸ்கந்தங்கள் - விலை ரூ. 450/-
2. ஸுந்தர காண்டம் - விலை ரூ. 100/-, 3. நாராயணீயம் விலை ரூ. 100/-

IV 1. மனாசேச்லோக - ராமமந்த்ராசேச்லோக - விலை ரூ. 15/-, 2. ஸ்ரீ ராதா கிருஷ்ண பூஜா விதானம் ரூ. 15/-, 3. நளோதந்தம் (நைஷத காவ்யத்தின் சுருக்கம்) விலை ரூ. 15/-, 4. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர் ஸாம - விலை ரூ. 10/-

V வடமொழிச் சொற்கடல் ஸம்ஸ்க்ருதம் — தமிழ் Dictionary — விலை ரூ. 60/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் & டிரஷரர். A.V.M.S.G.D.P.S. சமிதி,

D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்-612 001





2 ஆரோக்கிய ரகசியம்: வி. என். குமாரசாமி.

நிமிர்ந்த நடை; நேர்கொண்ட பார்வை!

நம் முன்னோர்கள் காய், கனி, கிழங்குகளைப் பச்சையாகவே சாப்பிட்டு வந்ததால் நீண்ட காலம் நோயற்று ஜீவித்து வந்தார்கள். நாகரிகம் வளர வளர, வேகவைத்துச் சாப்பிடும் வழக்கம் ஏற்பட்டது. பல நூறு தலைமுறைகளாக வேகவைத்து ஆகாரங்களைச் சாப்பிடுவது வழக்கமாகி விட்டது. நமது குடல்கள் அந்தப் பரம்பரையில் வந்தவைதாம். ஆகையால் நாம் வேகவைத்துச் சாப்பிடும் ஆகாரங்களையே சத்து இழக்காமல் சமைத்து உண்ணத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையோர் நன்றாகத் தீட்டிய மெல்லிய அரிசிச் சாதத்தைத்தான் விரும்புகிறார்கள். ஆனால் இந்த அரிசியில் சத்து இல்லை. தவிட்டை நீக்கிய பாலிஷ் அரிசியை எறும்பு கூட நாடுவதில்லை! அரிசியைத் தவிட்டுடன் வைத்துப் பாருங்கள். உடனே எறும்புகள் மொய்க்க ஆரம்பிக்கும்! தவிட்டுச் சத்தை இழந்த அரிசி உண்பதால் பெரி பெரி, நமைச்சல், சொறி, சிரங்கு, ரத்த சோகை, நரம்பு பலவீனம் முதலிய வியாதிகள் உண்டாகின்றன. டாக்டர்கள் இதற்கு வைட்டமின் மாத்திரை எழுதித் தருவார்கள். நாமும் காசு கொடுத்து வாங்கி விழுங்குவோம்.

எனவே, கைக்குத்தல் அரிசி சாப்பிட்டு வந்தால் உடம்பு ஆரோக்கியமாக இருக்கும். கஞ்சி வடிக்காமல் குக்கரில் சமைத்து உண்பது நல்லது. அதே போல் காய்கறிகளை அளவான நீரில் வேகவைத்து, வேக வைத்த சத்துள்ள ஜலத்தைக் கொட்டி விட அவசியம் இல்லாமல் சமைக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ரேஷனில் கிடைக்கிற அரிசியைத்தானே சாப்பிட வேண்டும்" என்று சிலர் முணுமுணுப்பது கேட்கிறது. உண்மைதான். ஆனால் கைக்குத்தல் அரிசியும் காதிபவன் போன்ற சில இடங்களில் கிடைக்கிறது. விலையும் அப்படி ஒன்றும் அதிகமல்ல. அளவாக வாங்கி, ஒருவேளை சாப்பாட்டுக்காவது பயன்படுத்தலாம். ரேஷன் அரிசியை இட்டிலி, தோசை, உப்புமா போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம்.

முடிந்த மட்டில் ஆரோக்கியமான உணவைச் சத்து இழக்காமல் சாப்பிட முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் முக்கியம். இதில் நீங்கள் நூறு சதவீதம் வெற்றி பெறத் தேவையில்லை. அறுபது சதம், எண்பது சதம் வெற்றி கிடைத்தால் அந்த மட்டில் லாபம்தானே! இந்த விஷயத்தை அலட்சியப்படுத்தாமல், கவனமாக இருங்கள், போதும்!

ஆசனம் என்றால் இருக்கை என்று அர்த்தம். யோக ஆசனம் என்பது யோகம் செய்வதற்காக இருக்கும் நிலை அல்லது இருக்கை எனப்படும். யோக ஆசனங்கள் ஹடயோகத்தைச் சேர்ந்தவை. யோகிகள், முனிவர்கள் ஒவ்வொரு நிலையில் இருந்து பல யோக சித்திகளை அடைந்திருக்கிறார்கள். உதாரணமாக, 'மச்சேந்திர ஆசனம்' என்பதாக ஒன்று உண்டு. அது, மச்சேந்திர முனிவர் சாதனம் செய்த ஆசனம். அதனால் அதற்கு அந்தப் பெயர் உண்டாயிற்று. இம்மாதிரி, தபஸ்விகள் பல ஆசனங்களில் இருந்து, நிஷ்டை, தியானம், சமாதி முதலியனவற்றைச் செய்திருக்கிறார்கள். ஒவ்வொன்றிற்கும் வேறு வேறு பலன்கள் உண்டு.

இதனால்தான் ஆசனம் என்றாலே பயப்படும் நிலையும் தோன்றியுள்ளது. அது ஏதோ முனிவர்கள், யோகிகள் விஷயம் என்று ஒதுக்கி விடுகிறோம். முனிவர்கள், யோகிகள் ஆசனங்களைக் கண்டுபிடித்தார்கள். அதன் பலன்களை விளக்கினார்கள். சில ஆசனங்கள் யோகிகள் மட்டுமே செய்ய வேண்டியவை என்று விதித்திருக்கிறார்கள். அவற்றை நாம் விட்டு விடலாம். குடும்ப வாழ்க்கை நடத்துகிறவர்கள் செய்யக்

கூடியனவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். இவைகளைச் சிறுவர், பிரும்மச்சாரிகள், நடுத்தர வயதினர், ஆண்கள், பெண்கள் முதலிய அனைவரும் செய்யலாம். நடுத்தர வயதைக் கடந்த பிறகும் தொடர்ந்து செய்து வரலாம். இத்தகைய ஆசனங்கள் கடுமையானவை அல்ல. யோகிகளும் முனிவர்களும் செய்வது போன்று அச்சத்தை ஏற்படுத்தக் கூடியவை அல்ல. முதலில் கொஞ்சம் சிரமமாக இருக்கும். பழகப் பழக எளிதாகி விடும். உடல் ஆரோக்கியத்தைக் காக்கும். முதலில் பத்மாசனம்:

பத்மாசனம் என்பது நாம் உட்காரும் ஒரு நிலை. பத்மம் என்றால் தாமரை. அதன் தண்டை எல்லோரும் பார்த்திருக்கிறோம். மிக இலேசாய் எந்தப் பக்கமும் துவண்டு வளையும். ஆனால் ஜலத்தில் இருக்கும் போது அவ்வளவு பெரிய தாமரையைத் தொய்ய விடாமல் நிமிர்ந்து இருக்கச் செய்யும்!

''நிமிர்ந்து நட!'' ''நிமிர்ந்து உட்கார்!'' என்று பெரியவர்கள் நாம் குழந்தைகளாக இருந்த போது அதட்டுவார்கள். அப்படி நாமும் நம் குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும். பாரதியார் கூட, நிமிர்ந்த நடைக்கும் நேர் கொண்ட பார்வைக்கும் முக்கியத்துவம் தந்து பாடியிருக்கிறார்.

இன்று பள்ளிச் சிறுவர்களை அவர்கள் முதுகில் சுமக்கும் புத்தகங்களே கூன் போடச் செய்து விடுகின்றன! உத்யோகத்தில் அமர்ந்து விட்டாலோ கேட்கவே வேண்டாம். ஆபீசில் நாற்காலியில் அமர்ந்து, மேஜையில் இருக்கும் காகிதத்தில் பேனாவை ஒட்டி வேலை செய்பவர்களுக்கு, முழு நீள முதுகு, பாதியாகக் கூன் போட்டு விடும். தலை மார்பை விட முன் துருத்திக் கொண்டிருக்கும். மார்பு உள்ளடங்கி, வளைவதால் நுரையீரல் மடிந்து நன்கு வேலை செய்ய முடியாமல் கஷ்டப்படும்.

நாம் உயிர் வாழ்வதற்குப் பிராண வாயு மிக அவசியமானது. ஆகாரம் இல்லாமல் தண்ணீர் குடிக்காமல் கூட சில நாள் இருக்கலாம். ஆனால் காற்று இன்றி சில நிமிஷம் கூட இருக்க முடியாது. காற்றை இழுக்கவும் வெளியேற்றவும் இரண்டு பைகள் நம் மார்பில் உள்ளன. நேராய் நிமிர்ந்து உட்கார்ந்தால்தான், நடந்தால்தான், காற்றைப் பூரணமாக இழுத்து விட முடியும். கூனி உட்கார்ந்தாலோ, நடந்தாலோ நுரையீரல் பிராண வாயுவைப் போதிய அளவு பெற முடியாது. இருதயத்திலிருந்து நுரையீரலுக்கு வரும் ரத்தம், அங்கு பிராண வாயுவை ஏற்றுச் சுத்தமடைகிறது. கரியமில வாயுவை நுரையீரல் மூலம் வெளியேற்றுகிறது. நாம் கூனியிருந்தால் நுரையீரலுக்குப் போதிய பிராண வாயு கிடைக்காது. ரத்தமும் நன்கு சுத்தமடையாது. உடலின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் நல்ல ரத்தம் பாய்வதும் பிராண வாயு கிடைப்பதும் பாதிக்கப்படுகிறது. இதனால் ஒன்றன் பின் ஒன்றாகப் பல நோய்கள் வருகின்றன. நரம்பு பலஹீனம், சோர்வு, ரத்த சோகை, காசம், க்ஷயம் என்று உடலில் நோய்கள் குடிபுகுகின்றன.

இதையெல்லாம் தவிர்க்க, நாம் கவனமாகச் செயல்பட வேண்டும். வீட்டையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல வெய்யிலும் காற்றோட்டமும் ஏற்படும்படி ஜன்னல்களைத் திறந்து வைக்க வேண்டும். நிமிர்ந்து உட்காரவும் நடக்கவும் பழக வேண்டும்.

இதற்குப் பத்மாசனம் பேருதவி புரியும். ஆபீஸில் குனிந்து வேலை செய்ய நேர்வதற்கு ஒரு மாற்று இந்த ஆசனம் என்பது மட்டுமல்ல; எப்போதும் எந்த இடத்திலும் நிமிர்ந்து அமர, நம்மை இந்த ஆசனம் பழக்கப்படுத்தி விடுகிறது. இதனால் நுரையீரல் தங்கு தடையின்றி இயங்க, ரத்தம் பிராண வாயுவால் சுத்தமடைய, உடம்பு ஆரோக்கியம் பெறுகிறது. எனவே யோகாசனம் என்பது விஞ்ஞான பூர்வமானது என்பதை நாம் உணர வேண்டும்.

பத்மாசனம் பழகும் முறையை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

''இதுக்குத்தான் அந்த நடிகரை மந்திரியாக்க வேண்டாம்னு சொன்னேன் தலைவரே!''

''என்னய்யா ஆச்சு?''


''அவருடைய தொகுதியில் நடந்த கலவரத்தைப் பார்வையிட அவரோட டூப்பை அனுப்பி வெச்சிருக்கார்!''

— ஞா. ஞானமுத்து



மாயமான்

சிவதர்ஷிணி



செய்தியைக் கேள்விப்பட்டதும் தலையில் கல் விழுந்தது போல் திடுக்கிட்டேன்.

''நெஜமாவா சொல்றே?''

''ஆமாங்க முதலாளி... நம்ம சக்திவேலு பய உங்ககிட்டே இருந்து பிரிஞ்சு போய்த் தனியா ஒர்க்ஷாப் வைக்கப் போறானாம். மணிவிலாஸ் ஒட்டலுக்கு எதிர்லே இடம் கூட வாடகைக்குப் பிடிச்சிட்டான்...'' என்றான் மெக்கானிக் ரங்கன்.

ரங்கன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த உதவி மெக்கானிக் சக்திவேலு கையில் ரிங் ஸ்பானருடன் உள்ளே நுழைந்தான்.

அவனை ஆழமாகப் பார்த்தேன் நான்.

''என்னங்க முதலாளி, அப்படிப் பாக்கறீங்க?''

''நீ தனியா ஒர்க்ஷாப் வைக்கப் போறியாமே?'' கோபம் குமுறியது.

அவன் மௌனமாக நின்றான்.

''பழசை நினைச்சுப் பார்க்கணும்டா சக்திவேலு! கஞ்சிக்கு வழியில்லாம இந்த ஊருக்கு வந்தே. உன்னை ஆதரிச்சு அனுசரணை பண்ணி, தொழில் கத்துக் கொடுத்தேன். இப்போ நாலு கஸ்டமருங்க பழக்க

மாயிட்ட தைரியத்திலே என்னை உதறி எறியறே!''

''நீங்க கை தூக்கிவிட்டதை நான் எப்பவும் மறக்க மாட்டேன் முதலாளி.''

''எனக்குப் போட்டியா இதே வீதியிலே ஒர்க்ஷாப் ஆரம்பிக்கப் போறியே, அது தான் அந்த நன்றியைக் காட்டும் லட்சணமா?''

''உங்களுக்குப் போட்டியா எல்லாம் நான் வரலைங்க, முதலாளி....''

''பின்னே எதுக்குடா மணிவிலாஸ் பக்கத்திலே இடம் வாங்கினே?''

''வாடகை கொஞ்சம் கம்மியாக் கிடைச்சுது முதலாளி. அதான்.....''

''நான் உன்னை விட இருபது வயசு மூத்தவன்டா. எத்தனை பயலுகளை என் சர்வீஸிலே பார்த்திருக்கேன், தெரியுமா?''

கோபமாக நாற்காலியை எட்டி உதைத்துவிட்டு வெளியே வந்தேன். மோட்டார் சைக்கிளின் கார்புரேட்டரில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்த ரங்கன் என்னை நிமிர்ந்து பார்த்தான்.

''ரங்கா! இந்தப் பய தனியாத் தொழில் ஆரம்பிக்கப் பணம் ஏது?''

''ஊர்லே இருக்கிற அவன் மாமன்காரன் தர்றானாம்.''

''அவனுக்கு என்ன அக்கறை?''

''அவன் மகளைக் கட்டிக் கொள்ள சக்திவேலு சம்மதிச்சுட்டானாம்.''

''ஓஹோ! அப்படிப் போகுதா கதை!'' என்று உறுமிட்டு வீதியில் இறங்கி நடந்தேன்.

சந்திரா ரேடியோ ஹவுஸ் அருகே, தானிய மண்டி புரோக்கர் சுப்பராவ் எதிர்ப்பட்டு ''வணக்கம் முதலாளி!'' என்றார்.

''வணக்கம். வணக்கம்.''

''இன்னைக்கு ஏனோ சுதி சரியில்லையே, முதலாளி!'' என்றார் புரோக்கர்.

''சக்திவேல் பயலுக்கு எத்தனை உபகாரம் பண்ணி நான் ஆதரிச்சேன்னு உமக்குத் தெரியுமில்லே!''

''ஆஹா! நீங்க இல்லாம அவன் ஏது?''

''அவன் என்ன செஞ்சிருக்கான் பாருய்யா! எனக்குப் போட்டியா இதே வீதியிலே தனி ஒர்க்ஷாப் வைக்கப் போறானாம்.''


''அந்த அளவுக்கு அவனுக்குச் சில்லறை சேர்ந்து போச்சா முதலாளி?''

''அவன் மாமன் பணம் போடறானாம்.''

''சக்திவேலின் தாயார் சீக்காளியாக் கிடந்தபோது மூவாயிரம் ரூபா போலக் கடன் கொடுத்தீங்களே, அதை அவன் திருப்பிக் கொடுத்திட்டானா?''

''நான் கேட்கலை சுப்பாராவ். நம்ம பயதானேன்னு விட்டுட்டேன்.''

''இப்போ சட்டியும் பானையும் வெவ்வேறு ஆயிடுச்சே முதலாளி! இனி என்ன



டாக்டர். ஸ்ரீஹரி

அன்பும் டென்ஷனைக் குறைக்கும்!

''டென்ஷனைக் குறைப்பது எப்படி?'' இலவச இணைப்பைப் படித்தேன். அன்றாட வாழ்வில் அன்புக்குரியவரின் இதமான ஸ்பரிசம் டென்ஷனைக் குறைக்கும் என்று படித்த போது டாக்டர் ஸ்ரீஹரி நினைவு வந்தது.

கல்கியில் விட்டு வைத்தியம் எழுதி வந்த அவரிடம், சற்றே மனநிலை பாதிக்கப்பட்டு, பதற்றமாயிருந்த ஒரு கல்லூரி மாணவர் வந்து மருந்தைப் பெற்று, உண்ணும் முறை பற்றிக் கேட்டார். ''உன் தாயாரின் உள்ளங்கையில் இரண்டு ஸ்பூன் அளவு விட்டு, உதட்டால் அதை உறிஞ்சிக் குடித்து விடு'' என்றார் டாக்டர். நகைச்சுவையென எண்ணி சுற்றியிருந்தவர்கள் இலேசாகச் சிரித்தோம். தான் சீரியசாகவே சொல்வதாக அந்த இளைஞரிடம் சொல்லி அனுப்பிய டாக்டர், எங்களிடம், ''தாய் தன் உள்ளங்கையால் பாசத்துடன் உடலை வருட, குழந்தை அதை அனுபவித்து, அமைதி நிலையையடைந்து உறங்குகிறது. வயதாக ஆக இந்தப் பாசமிக்க தீண்டுதல் கிடைப்பதில்லை. டென்ஷன் வளர்கிறது. மனநிலை பாதிக்கப்படுகிறது. நுட்பமான உணர்வுள்ள உதடுகளால் தாயின் அந்த உள்ளங்கையை நேரடியாக ஸ்பரிசித்து மருந்து உண்டால் இவன் மனநோய் தீர்ப்பதில் அது மிகவும் பலனளிக்கும்'' என்று விளக்கியதும், அதில் பொதிந்துள்ள விஞ்ஞான பூர்வமான கருத்தை உணர்ந்து வியந்தோம்.

— அ. ஷண்முகசுந்தரம்

அடுத்த இதழில்:



சுதா: வளர்பிறைக் கலைஞர்

இலவச இணைப்பு:



அச்சமற்ற வாழ்க்கை

— உபநிஷதங்கள் உணர்த்துவது என்ன...?

நயக்கும்? பணத்தைக் கொடுத்திட்டு மறு காரியம் பாருடான்னு மென்னியைப் பிடிங்க. புரோ நோட்டு இருந்தா அதைக் கோர்ட்டிலே போடுங்க. அவன் உங்க கடனைக் கட்டுவானா, வக்கீலுக்குப் பீஸ் கட்டுவானா, புது ஒர்க்ஷாப் ஆரம்பிப்பானா? கோர்ட்டுப் படியேறினா கோவணம் தான் மிஞ்சும்னு சொல்லுவாங்க!''

''யோவ்! நீ ராஜாங்கத்தை ஆளவேண்டிய மனுஷன்யா. தப்பிப் போய் தானியத்தை அளந்து ஜீவனம் பண்ணிட்டு இருக்கிறே!'' என்று கூறிவிட்டுச் சந்தோஷத்தோடு வீடு நோக்கி விரைந்தேன்.

நான் குடியிருக்கும் தெரு மேற்குக் கோடியில் இருக்கிறது. போகும் வழியில் சுவாதி லாட்ஜ் சந்து வழியே புகுந்து, சுண்ணாம்புக் கானவாய்ப் புகையைக் கடந்தால் தெருவோரம் ஒரு வேப்பமரம் வரும். சுப்பையா ஆசாரியின் வீடு, கொல்லுப் பட்டறை, இரவில் படுக்கை எல்லாமே அந்த மரததடியில்தான்.

சுப்பையா ஒரு விநோதமான மனிதர். பெரும்பாலான நாட்கள் வேலை இல்லாமல் பசியோடு சுருண்டு கிடப்பார். எப்போதாவது வயல் வேலைக்காரர்கள் வந்து கடப்பாறை, களைக்கொத்துகளை சரி செய்து கொண்டு போவார்கள். சில குதிரை வண்டிக்காரர்கள் லாடம் அடித்து வாங்கிச் செல்வார்கள். பிள்ளை குட்டி மனைவி யாரும் கிடையாது.

அந்த மரத்தடியில் புதிதாக ஒருவன் கையால் சுற்றும் காற்றுத் துருத்தியை அமைத்துப் பட்டறை போட்டுக் கொண்டிருந்தான். சுப்பையா அவனோடு சம்பாஷித்துச் சிரித்தார். வீட்டை நோக்கிச் சென்ற நான், சற்றே நின்று, ''புது ஆள் யாரு?'' என்று சுப்பையாவைப் பார்த்துக் கேட்டேன்.

''புத்தூர்காரன் முதலாளி. பிழைப்புத் தேடி வந்தானாம். சரிதான் நீயும் குந்திக்கோனு கையகலம் இடம் கொடுத்தேன்.''

''யோவ்! உனக்கே சோத்துக்கு லாட்டரி. இந்த லட்சணத்திலே இன்னொருத்தனைப் போட்டிக்குக் கொண்டு வந்து மரத்தடியிலே உட்கார வைச்சிருக்கியே!''

''இதிலே என்னங்க போட்டி? இது வரைக்கும் நான் ஒத்தை ஆளாத் தட்டிக்கிட்டுக்கிடந்தேன். இப்போ இவனும் வந்திட்டான். முந்தி சரியா கவனிக்காதவன் கண்ணில் கூட இனி பட்டறைபளீர்னு தென்படும்! 'மரத்தடியிலே ரெண்டு பட்டறை வந்தாச்சுனு' ஜனங்க பேசுவாங்க. அக்கம் பக்கத்திலே அது பரவும். தொழிலுக்கு அந்த பிர்க்காதி நல்லது தானுங்களே?''

''பிர்க்காதின்னா என்னய்யா?''

''அதுதாங்க விளம்பரம்! இவன் வந்ததை நீங்க போட்டியா நினைக்கறீங்க! நான் விளம்பரம்னு நினைக்கிறேன்.''

எனக்குச் சாட்டையால் அடித்தது மாதிரி இருந்தது. எவ்வளவு எளிதாக வியாபாரத் தத்துவத்தை சுப்பையா கூறி விட்டார்!


வீட்டுக்குப் போகாமல் திரும்பி ஒர்க்ஷாப்பை அடைந்தேன். சக்திவேலைக் கூப்பிட்டு என் கையில் இருந்த அரைப் பவுன் மோதிரத்தைக் கழற்றி அவனிடம் நீட்டினேன்.

''எதுக்கு முதலாளி என்கிட்டே தர்றீங்க?'' என்றான் சக்திவேலு குழப்பமான குரலில்.

''நீ புதுசா ஆரம்பிக்கப் போகிற ஒர்க்ஷாப் தொழிலைப் பாராட்டி என் அன்பளிப்புடா!'' என்றேன் சந்தோஷமாக.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


என்றும் இளமையாய் இருப்பது எப்படி?
கல்கி
22.4.90 இதழுடன் இலவச இணைப்பு


அச்சமற்ற வாழ்க்கை
உபநிஷதங்கள் உணர்த்துவது என்ன?
29.4.90 இதழுடன்
கல்கி இலவச இணைப்பு

"இந்த வருஷம் டிசம்பர் பன்னிரண்டு வந்தால் எனக்கு அறுபத்தோரு வயது பூர்த்தியாகும்மா...'' என்று ஒரு வசீகரப் புன்னகையுடன் சொன்னார் அந்த நடிகை. ஒரு நடிகை தமது வயதை இப்படி ஒளிவு மறைவின்றிச் சொல்கிறாரே என்ற ஆச்சரியத்துடன் அவரை இன்னும் கூர்மையாய் ஆராய்ந்தோம். 'சிக்' கென்ற உடம்பு, அளவான ஒப்பனை, பளிச்சென்று — பாந்தமான உடை, சுறுசுறுப்பான நடை... — தேடித் தேடிப் பார்த்தும் அறுபது வயதுக்கான அடையாளங்கள் தென்படவில்லை. இருபது ஆண்டுகளுக்கு முந்தைய அவர் முகத்தை மனத்திரைக்குக் கொண்டு வந்து, தற்போதைய முகத்துடன் ஒப்பிட்ட போது மட்டுமே முதுமையின் அடையாளக் கோடுகள் தென்பட்டன. மிஞ்சி மிஞ்சிப் போனால் நாற்பத்தைந்து வயது தான் சொல்லலாம்! சற்று யோசித்த போது அவருடைய இளமைத் தோற்றத்தின் ரகசியம் புரிந்தது. நாலு பேருக்கு முன்னால் 'எனக்கு அறுபது வயதாகிறது' என்று சொல்லிக் கொள்ளும் பக்குவம் எத்தனை நடிகைகளுக்கு இருக்கும்!

"இளமையாய் இருப்பதன் ரகசியம் 'நமக்கு வயதாகி விட்டதை' உணர்ந்து ஒப்புக் கொள்வது தான்... வெளித் தோற்றத்தைவிட மனத்தின் அமைதியும், அதனால் ஏற்படும் எழிலும்தானே முக்கியம்!'' என்று கூறிய அந்த நடிகை: சௌகார் ஜானகி.



சௌகார் ஜானகி: ''மனத்தின் அமைதியே அழகு தரும்.''

"இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா" என்று சிறு வயது முதலே தத்துவ போதனை கேட்டாலும் தலையில் தோன்றும் முதல் நரை முடி நம் எல்லோரையும் ஓர் உலுக்கு உலுக்கத் தான் செய்கிறது. காலத்தின் ஓட்டத்தையும் மூப்பையும் இயல்பாக எடுத்துக் கொள்வதற்கு முன் ஒரு சிறு போராட்டம் நிகழ்கிறது. அவரவர் இயல்பைப் பொறுத்து இந்தப் போராட்டத்தின் கால அளவு நீடிக்கிறது. சிலர் ஆயுள் இறுதி வரை போராடுகிறார்கள். வேறு சிலர் முப்பது வயதிலேயே ஆய்ந்து ஓய்ந்து சுவாரஸ்யம் இழந்து விடுகிறார்கள். இவை இரண்டையுமே தவிர்த்து காலத்துடன் கைகோர்த்து நடக்கலாம். முதுமையை இருகரம் நீட்டி வரவேற்கவும் வேண்

உண்மை

சத்யகாமனுக்கு பிரும்ம வித்தை பயில வேண்டும் என்று ஆசை.

ஆனால் அவன் அரசகுமாரனும் இல்லை; நல்ல குடும்பத்தில் பிறந்தவனும் இல்லை. தந்தையற்றவன். அவனுக்குத் தாய் மட்டும்தான் இருந்தாள். அவள் பெயர் ஜபாலா.

வித்தை கற்க குருவிடம் சேரும்போது குடும்பம் பற்றிய விவரம் சொல்ல வேண்டுமே என்பதற்காக தனது 'கோத்திரம்' என்ன? என்று தாயிடம் அவன் கேட்டான்.

ஜபாலை தனக்கும் அது தெரியாதென்றாள். தனது இளமையில் பலருக்குச் சேவை செய்யும் போது, சத்யகாமனைப் பெற்றதாகவும் கூறினாள். ஆகவே, அவனிடம் 'ஜபாலா — சத்யகாமன்' என்று அவனைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும்படிக் கூறினாள்.

இப்போது அவனிடம் வித்தை பயில்வதற்கான தகுதியாக இருந்தது, அதற்கான ஆர்வம் தான். அத்துடன் வயதும் சேர்ந்து கொண்டது.

அதே நோக்கமாக அலைந்து திரிந்து ஒரு குருவைக் கண்டுபிடித்தான். அவர் பெயர் 'கௌதம — ஹாரித்ருமதர்.'

ஆனால், அவரோ பிராமணச் சிறுவர்களைத் தான் மாணாக்கராகச் சேர்த்துக் கொள்வது வழக்கம்.

இருந்தாலும் சத்யகாமன் துணிவாக குருவிடம் சென்றான்.

"என்னப்பா, எங்கு வந்தாய்?'' என்றார் குரு கௌதமர்.

"ஐயா, எனக்குப் பிரும்ம வித்தையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.'' என்றான் பண வுடன் சத்யகாமன்.

"நான் இங்கு பிராமணப் பையன்களுக்கே வித்தை கற்றுத் தருகிறேன்; நீ எந்த குலம்?''

"ஐயா, அதைப்பற்றி எனக்கொன்றும் தெ யாது. பெற்றவளிடம் கேட்டேன். அவளுக்கு தெரியவில்லை. என் அன்னை ஒரு பணிப்பெண் பல இடங்களில் பணி செய்திருக்கிறாள். அ போது ஒருவருக்கு என்னைப் பெற்றாளாம் அதனால், நான் எந்த குலத்தைச் சேர்ந்தவன் என்பது எனக்குத் தெரியாது.' — பயப்படாமல் தயங்காமல் உண்மையைச் சொன்னான் சத்ய காமன்.

"அப்படியா, இப்படி உண்மையைக் கூறுவ தால் உண்மையில், நீ பிராமண குலமாகவே இருக்க வேண்டும். நீ பிராமணனே! உன்னை மாணவனாக ஏற்றுக் கொள்கிறேன். உன் விருப் பம்போல் இங்கே பிரும்மத்தைப் பற்றி நீ அறிய லாம்.''

— என்று குரு சொல்லக் கேட்டு சத்யகாமன் மிகவும் மகிழ்ந்தான்.


துரோணர் மறுத்தும், அவரைப் போல சிலை செய்து ஏகலைவன் வித்தை கற்றான். பரசுரா மரிடம் தன்னைப் பிராமணன் என்று பொய் சொல்லி கர்ணன் வித்தை பெற்றான். இருவர் வித்தையும் வீணாகப் போயிற்று. இவர்களைப் போல இன்றி, சத்யகாமன் உண்மையை மறைக் காமல் தைரியமாகக் கூறி உயர்வு பெற்றான்.

டாம், நெட்டித் தள்ள முயன்று மூச்சிரைக்கவும் வேண்டாம். இதோ சில வழிகள்:

மூப்பின் அடையாளமான நரையை முதலில் எடுத்துக் கொள்வோம். முப்பதுகளின் ஆரம்பத்திலேயே நரை தோன்ற ஆரம்பித்து விடுகிறது இந்த நாளில். இதற்குக் காரணம், எண்ணெய்—சிகைக்காய் தேய்த்துக் குளிக்கும் பழக்கத்தை அடியோடு விட்டுவிட்டு, கலர் கலராக விற்பனையாகும்ஷாம்பூக்களை உபயோகிப்பதுதான். இவை எல்லாவற்றிலும் இரசாயனப் பொருட்கள் உள்ளன. நாம் தடவிக் கொள்ளும் எண்ணெய் தவிர தலையில் உற்பத்தியாகும் இயற்கை எண்ணெயையும் சேர்த்து இவை கழுவி எடுத்துவிடுகின்றன. பலர் இப்போது அழகு நிலையங்களுக்குச் சென்று முடியைச் சுருளாக்குதல், ப்ளீச்சிங், ப்ளோ — ட்ரையிங் போன்றவற்றையும் செய்து கொள்கிறார்கள். இந்தச் செயற்கைப் 'பராமரிப்பு' வகைகள் தலை முடிக்கு உதவ மாட்டா.

நரை தோன்றியவுடனேயே 'ஹேர்—டை'யை நாடிப் போக வேண்டாம். மருதாணித் தூளைத் தேனீருடன் கலந்து, எலுமிச்சம்பழம் பிழிந்து தலையில் தேய்த்துக் குளித்தால் நரை சற்று மறையும். இப்படியே ஓரிரு வருடங்கள் ஓட்டி விடலாம். பிறகு காலா மெஹந்தி என்ற கறுப்பு மருதாணித் தூளைக் கடைகளில் வாங்கி இதே முறையில் பயன்படுத்தலாம். இரசாயன 'டை'களை விட இது நல்லது.

நாற்பதை நெருங்கும்போது காதோரத்திலும் முன்னந்தலையிலும் வெள்ளிக் கம்பிகள் மின்ன ஆரம்பித்தால் 'a touch of silver is a sign of wisdom' என்று அதனை ஏற்றுக் கொண்டு மிடுக்குடன் வாழ்வதே மேல். பதினெட்டு வருடங்கள் மீசை வைத்துக் கொண்டிருந்தவர் திடீரென்று ஒரு நாள் 'க்ளீன் ஷேவ்' செய்து கொண்டு வந்தார். 'என்ன என்ன?' என்று நண்பர் கேட்டதும் ''மீசையில் நரைக்க ஆரம்பிச்சுட்டுது. அது தான்...'' என்று சங்கடத்துடன் ஒப்புக் கொண்டார். அன்றைக்கு அவர் ஆபீஸில் அத்தனை பேரும் விசாரித்து, அவர் வயதை அவருக்கே ஞாபகப்படுத்தி விட்டார்கள்! மீசையைப் படிப்படியாக நாளாவட்டத்தில் நரைக்க விட்டிருந்



இதனால்,

'சத்ய மேவ ஜெயதே நான்ருதம்' (வாய்மையே வெல்லும்) என்று முண்டக உபநிஷத் கூறுவது விளங்குகிறதல்லவா. (மு. 31.6)

(இக்கதை 'சாந்தோக்யோபநிஷத்தி'ல் உள்ளது.)

நசிகேதஸ்

'**வா**ஜஸ்ரவஸர்' என்பவர் ஒரு பிராம்மணர். அவருக்குக் கௌதமர் என்ற இன்னொரு பெயரும் உண்டு. அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர்தான் 'நசிகேதஸ்'. அவன் பத்து வயதுடையவனாயிருந்தான். அவன் உண்மையில் அதிகம் நாட்டம் உடையவன். பொது நோக்குடையவன்.

யாகயக்ஞங்களைச் செய்வதில் பற்றும் அறிவுமுடையவர் அவனுடைய தந்தை. உபநிடத கால வழக்கத்தின்படி, தந்தையே அவனுக்குக் 'குரு'வாகவுமிருந்தார். ஆகவே பத்து வயதே நிரம்பப் பெற்றவனாயிருந்த போதும், அறிவும் கல்வி கேள்வித் திறமையும் உடையவனாக இருந்தான். வித்தை பயில ஒருவனை பிரும்மச்சாரியாக்க ஏழு வயதிலேயே உபநயனம் என்ற பூணூல் கல்யாணம் செய்து விடுவார்கள். அப்போதுதான் ஒருவன், எந்த குல தாய்தந்தையிடம் பிறந்தானோ அந்த குலத்தைச் சேர்ந்தவனாகக் கருதப்படுவான். நசிகேதஸை உபநிஷத் பிராமணன் என்று குறிக்கின்றது.



தால் யாரும் துக்கம் விசாரிப்பது போல் கேட்டுச் சங்கடப்படுத்தியிருக்க மாட்டார்கள் அல்லவா!

நரையோடு அழையா விருந்தாளியாக உடன் வருபவை கண்களுக்கடியில் விழும் கருவளையங்களும் காக்காய் பாதம் பதித்தது போல் கோடு கோடாக விழும் சுருக்கங்களும். சத்தான உணவு உட்கொள்ளாமை, தூக்கமின்மை, அதீத கவலை, டென்ஷன் போன்றவை கருவளையங்களையும் 'காக்காய்ப் பாதங்களையும்' துரிதப் படுத்திவிடும். இல்லத்தரசிகள் மதியத்தில் தூக்கம் போட்டுவிட்டு இரவு தூங்க முடியாமல் புரண்டுவிட்டுக் காலையில் சோர்வோடு எழுந்தால் கண்கள் பளபளப்பாகவா இருக்கும்? 'வேலை வேலை' என்று வெளியே பறப்பவர்



களோ போதுமான அளவு சத்துணவு சாப்பிடாமல் 'காப்பி,' 'டீ'யைக் கொண்டு தாற்காலி... பசியடைப்பைச் சாதித்துக் கொள்கிறார்கள். இவை எல்லாமே ஆரோக்கியத்தின் எதிரிகள்.

மேற்கத்திய நாட்டவர்களைப் போல் வெள்ளைத் தோலும் இல்லாமல் நீக்ரோக்களைப் போல் கறுப்புத் தோலும் இல்லாமல் இந்தியர்கள் காப்பிக் கலர் தோலுடன் இருப்பது ஒரு வரப் பிரசாதமே. மற்ற இரு வகைத் தோல்களில் விழுவது போல் நமது தோலில் அவ்வளவு சீக்கிரத்தில் சுருக்கம் விழுவதில்லை. மேற்கத்திய நாடுகளில் சுருக்கத் தடை க்ரீம்களும் பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் **'face lift'** செய்து கொள்வதும் சகஜமாகி விட்டன. நாம் இவற்றை நாட வேண்டிய அவசியமே இல்லை. வயதுக்கு மீறிய வாட்டம் தோலில் ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனையுடன் வைட்டமின் மாத்திரையைச் சாப்பிடலாம். அழகு நிலையங்களுக்குப் போவதற்குப் பதில் வீட்டிலேயே ஓட்ஸ் மாவை நீருடன் கலந்து கொதிக்க வைத்து, அந்தப் பசையை முகத்தில் தடவி, சிறிது நேரம் கழித்துக் கழுவி விடலாம். வயதாக ஆக எண்ணெய்ச் சுரப்பிகளின் செயல் திறன் குறைவதால் தோலின் பளபளப்பு குறைகிறது. சில 'மாயிஸ்சரைஸிங்' க்ரீம்களை உபயோகிப்பதில் தவறில்லை. குளிர்ந்த நீருக்கும் பச்சைக் காய்கறிக்கும் மாற்றாக வேறெதுவும் கிடையாது. அவ்வப்போது முகத்தைக் குளிர்ந்த நீரில் கழுவினால் போதும். காய்கறிகளை எண்ணெய்...

வாஜஸ்ரவஸரின் மனைவியைப் பற்றி அதாவது, நசிகேதஸின் அம்மாவைப் பற்றிய பேச்சே இதில் இல்லை.

வாஜஸ்ரவஸர் யாகம் ஒன்று செய்தார். அதில் தனது என்று இருப்பதையெல்லாம் தானம் செய்து விட வேண்டும் என்பது விதி.

அதன்படி, யாக முடிவில் தம்முடைய பசுக்களை எல்லாம் பிராமணர்களுக்கும் ரிஷிகளுக்கும் தானம் செய்து கொண்டிருந்தார்.

தானம் தரும் பொருள்கள் நல்ல நிலையில் பயனுள்ளவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் யாகத்திற்குரிய பலன் கிட்டும்: இல்லையேல் பாவம் வந்து சேரும்.

ஆனால் கௌதமர் தானமாகக் கொடுத்த பசுக்களோ மிகுந்த பரிதாபகரமான நிலையிலிருந்தன.

குடிக்க வேண்டிய கடைசி வாய்த் தண்ணீரை அந்தப் பசு மாடுகள் குடித்துவிட்டன.

கடிக்கவேண்டிய கடைசி வேளைப் புற்களையும் அவை தின்றுவிட்டன.

கறக்க வேண்டிய கடைசி வேளைப் பாலையும் அந்த மாடுகள் கறந்துவிட்டன.

போட வேண்டிய கடைசி கன்றையும் போட்டு விட்டன.

ஆகவே, தீவனத்தை அரைத்துக் கரைத்துக் கலக்கி வைத்த தண்ணீரைக் குடித்து, புல், வைக்கோல் வகைகளை மேய்ந்து அவற்றை ஜீரணிக்கும் திறனை இழந்து விட்டன. ஜீரணித்துப் பாலாக்கிக் கொடுக்கும் தகுதியை விட்டு விட்டன. இனிமேல் கன்றும் ஈன முடியாததால் 'பசு' மாடு என்ற தன்மையையே அவை அடியோடு இழந்துவிட்டன என்று காட்டப்பட்டது.

அப்படிப்பட்ட, இளைத்த, பொலிவிழந்த, எலும்பும் தோலும், கொம்புகளுமாகக் காட்சிக்கு மட்டும் மாடுகளாக இருப்பனவற்றைத்தான் கௌதமர் தானமாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இனிமேல் அவற்றின் வாழ்க்கை நிகழ்ச்சியாக இறப்புத்தான் நடக்க வேண்டும் என்ற நிலையிலிருந்த வயதான மாடுகளை ஒவ்வொன்றாகப் பிடித்து ''இது உமக்குத்தான்; இட்டு செல்லுங்கள்'' என்று கூறி ஒவ்வொருவரிடமும் தானமாக ஒப்படைத்துக் கொண்டிருந்தார்.

அப்படிப்பட்ட மாடுகளையும் தானமாகப் பெற ஆட்களிருந்தனர் போலிருக்கிறது. எந்தக் காலத்திலும் ஏழைகள் இல்லாமலில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

அல்லது,

வயோதிக பசுமாடுகளை வாங்கிச் சென்று தக்க முறையில் பேணித் தேற்றிப் புண்ணியம் தேடலாம் என்றும் கருதி இருக்கலாம்.

இல்லையேல்,

யாகம் செய்யும் ஒருவர் நாடும் புண்ணிய பயனை அவர் அடையட்டும் என்ற புனிதமான எண்ணத்தில் யாகத்தில் அவர் கொடுத்த மாடுகளை எதுவும் பேசாது தானமாகப் பெற்றுப் போயிருக்கலாம்.

எது எப்படியோ நல்லகதி வேண்டி வாஜஸ்ர

சொட்டச் சொட்ட வதக்கியோ, வேகவிட்டுத் தண்ணீரை வடித்தோ வைட்டமின் சத்துக்களைக் 'கொன்று' விடுகிறோம். சத்து வெளியேறாமல் சாப்பிட்டால் வைட்டமின் சத்துக்கள் கண்களையும் தோலையும் மினுமினுப்பாக வைத்திருக்கும்.

நமக்குப் பொறுப்புக்கள் அதிகமாவதும் அவற்றை நிறைவேற்ற நாம் அதிகமாக உழைப்பதும் குழந்தைகள் பிறந்து வளர ஆரம்பிக்கும் போதுதான். இந்தக் கட்டத்தில் 'வயிற்றுக்காகத் தானே இவ்வளவு உழைக்கிறோம்' என்ற உணர்வும் 'எவ்வளவு வேலை செய்ய வேண்டியிருக்கிறது!' என்ற சுயபச்சாதாபமும் சேர்ந்து கொண்டு தேவைக்கு அதிகமாகவே உணவு உட்கொள்ளச் செய்யும். உண்மையில் பெண்டிர் மட்டுமின்றி ஆண்களும் 'உண்டி சுருக்க' ஆரம்பிக்க வேண்டிய கட்டம் இது! அப்படிச் செய்யாததனால் தேவைக்கு அதிகமான காலரிகளைப் பெறும் உடல் அவற்றை எரித்து வெளியேற்ற முடியாமல் உடலில் கொழுப்பாகச் சேர்த்து வைக்கிறது.



அமெரிக்க ஆராய்ச்சிகளின் முடிவுப்படி கொழுப்புச் சத்துக் குறைவாகவும் நார்ச் சத்து அதிகமாகவும், உள்ள உணவுகளை உண்டு, அளவான உடற்பயிற்சி செய்து உடல் எடையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தால் முதுமையின் துரிதமான ஆக்கிரமிப்பைத் தடை செய்ய முடியும். அமெரிக்கர்களைப் போல் நமது அன்றாட உணவில் சாக்லேட்டும் ஐஸ்க்ரீமும் இடம் பெறுவதில்லை. ஆனால் நாம் உண்பதில் 90 சதவிகிதம் கார்போஹைட்ரேட் சத்துள்ள உணவுதான். இதை அறுபது சதவிகிதமாகக் குறைப்பது நல்லது. கைக்குத்தல் அரிசி, முழுக் கோதுமை போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். சாதத்தின் அளவைக் குறைத்துக் காய்கறிகளின் அளவை அதிகப்படுத்த வேண்டும். சர்க்கரை, எண்ணெய்ப் பண்டங்கள் ஆகியவற்றை மெள்ளக் குறைக்க ஆரம்பிக்கலாம். 'டையட்' என்று ஒரேயடியாகப் பட்டினி கிடந்து சோர்ந்து போகாமல் சரியான உணவை அளவாக உட்கொண்டால் முப்பதுகளின் மத்தியில் இளந்தொந்தி விழுந்து நாற்பதை நெருங்குவதற்குள் பெருந்தொந்தியாக மாறாது! தொந்தி — தொப்பை வயதைக் கூட்டிக் காட்டுவதுடன்

வலர் செய்த யாகத்தில் ஒன்றுக்கும் உதவாத பசுக்கள் தானமாக அளிக்கப்பட்டன என்கின்றது கடோபநிஷத்.

இதைப் பார்த்துக் கொண்டு பக்கத்திலிருந்த நசிகேதஸிற்கு மனம் பொறுக்கவில்லை. 'நல்ல பயனுள்ள பொருள்களை யாகதக்ஷிணையாகக் கொடுக்காத கர்த்தா நல்ல கதியடைய முடியாதே; யாகத்திற்குரிய பலனைப் பெற முடியாதே' என்று தந்தைக்காக வருந்தினான்.

''இது உங்களுக்கு! இது உங்களுக்கு'' என்று மாடுகளைத் தானம் செய்து கொண்டிருந்த தந்தையைக் கேட்டான்.

''அப்பா! நான் யாருக்கு? என்னை யாருக்கு கொடுக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

அவனது தந்தை சிறுவனான அவனைக் கவனிக்கவே இல்லை. இரண்டாவது தடவையாக மீண்டும் நசிகேதஸ் கேட்டான்:

''அப்பா, என்னை யாருக்குத் தத்தம் செய்யப் போகிறீர்கள்?''


இப்போதும், தானம் செய்யும் மும்முரத்திலிருந்த அவர் தமது மகனை அலட்சியம் செய்தார். 'ஏதோ சிறுவன் உளறுகிறான்; அதைப் பொருட்படுத்த வேண்டாம்' என்று.

ஆனால், விடாமல் நசிகேதஸ் தன் தந்தையை நச்சரித்தான். மூன்றாவது முறையும்,

''என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்களப்பா?'' என்றான்.

அதை இம்சையாக நினைத்தோ, பிள்ளையின் அதிகப்பிரஸங்கமாக எண்ணியோ, யாகவேலை





சுறுசுறுப்பான இயக்கத்துக்கும் தடையாக இருப்பதால் இளமை சீக்கிரமாக விடைபெறுகிறது!

"**கா**லை ஐந்து மணிக்கு எழுந்தால் ராத்திரி பத்து மணி வரைக்கும் ஒரு நிமிஷம் உட்காராமல் வேலை செய்துக்கிட்டே இருக்கேன். இன்னும் 'எக்ஸர்ஸைஸ் வேற தனியாச் செய்யணுமா?'' என்று பெண்களும் ''ஆபீஸ் போய்த் திரும்பறதே எக்ஸர்ஸைஸ்தான்'' என்று ஆண்களும் சொல்லித் தப்பிக்கப் பார்க்காதீர்கள். நீங்கள் செய்யும் அன்றாட வீட்டு, ஆபீஸ் வேலைகள் உடற்பயிற்சி அல்ல! அதற்கென்று தனியே நேரம் ஒதுக்கிச் செய்ய வேண்டும். உடனே, காலை டீ.வி. நிகழ்ச்சியில் பார்த்த பயிற்சிகளையெல்லாம் செய்ய முயலாதீர்கள். திடீரென்று வேகமாக உடம்பை வளைத்து நெளிந்தால் சுளுக்கிக் கொள்வது தான் மிச்சமாகும். காலையில் 'வாக்' போவது, கால்களைச் சேர்த்து வைத்து, நின்று, கைகளைத் தோளுக்கு மேல் உயர்த்தி, முழங்கால்களை மடக்காமல் குனிந்து தரையைத் தொடுவது போன்ற எளிய பயிற்சிகள் செய்தாலே போதும்.

பெண்கள் பிரசவத்துக்குப் பின் பத்தியச் சாப்பாடு என்று ஏராளமாக நெய் சேர்த்துச் சாப்பிட்டுவிட்டு மாதக் கணக்கில் 'பிள்ளை பெற்றவள்' என்ற முத்திரை குத்தப்பட்டு வேலைகள் செய்யாமல் ஓய்வில் இருக்கிறார்கள். குழந்தை பிறந்த பிறகு தளர்ந்த வயிறு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதேயில்லை. போதாக்குறைக்கு, ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டால், 'இனிமேல் நமக்கென்று எதுவுமில்லை; எல்லாம் குழந்தைதான்' என்ற தீர்மானம் வேறு மனத்தில்! மளமளவென்று கைகளும், தோள்களும் பருத்துப் போய்க் கொடி இடைக்கும் ரவிக்கைக்கும் இடையே 'டையர்' 'டையராகச்' சதைபோட்டு, உடல் தோற்றத்தையும் ஆரோக்கியத்தையும் பற்றிய பிரக்ஞையோ ஆர்வமோ இல்லாததால் முப்பத்தைந்தில் நாற்பத்தைந்தாகக் காட்சியளிக்கிறார்கள். நன்றாக உண்பதிலும் உடுத்துவதிலும் ஆர்வம் குறைந்துவிடுகிறது. மனத்தளவில் அசிரத்தை ஏற்பட்டால் அது தோற்றத்திலும் பிரதிபலிக்கிறது.

ஆண்களும் சரி, பெண்களும் சரி, சிறிது நேரத்தை ஒதுக்கி தேகப்பயிற்சி மூலம் உடலை

களில் இடையூறாக உணர்ந்த எரிச்சலாலோ,

''உன்னை எமனுக்குக் கொடுத்தேன்!'' என்று பதில் கூறிவிட்டார் கௌதமர்.

யாக முடிவில், பிராமணர்களுக்குத் தக்ஷிணை கொடுக்கும் வேளையில் யாகத்தை நடத்திய பிராமணரான கர்த்தா, ஒரு பிராமணச் சிறுவனிடம் கூறிய வாக்கானதால் அது பொய்த்துப் போகக் கூடாது. அப்போதுதான் யாகப்பலன் கௌதமரை அடையும்.

தனது தந்தை தானம் செய்த பசுக்களைப் பார்த்து, 'இப்படிப்பட்ட பயனற்ற பசுக்களைத் தானம் செய்யும் தந்தைக்கு இருள் சூழ்ந்த துக்க உலகங்கள் தானே கிட்டும். யாகத்தின் பலனான சொர்க்க உலகம் கிடைக்காதே' என்று வருந்தியே அப்படிக் கேட்டான். மேலும், ஒருவன் தன் உடைமையை எல்லாம் தானம் செய்து விட வேண்டிய யாகம் அது. அதில், தமது மகனைத் தவிர எல்லாவற்றையும் கௌதமர் தியாகம் செய்து விட்டார். எனவே, தன்னையும் விட்டு விட தனயனான நசிகேதஸ் கேட்டான் என்றும் எடுத்துக் கொள்ளலாம். வீடுபேறு என்ற மோக்ஷம் வேண்டும் ஒருவன் எல்லாப் பற்றுக்களையும் விட்டாகவேண்டும். பிள்ளை பாசத்தையும் தனது தந்தை விடட்டுமே என்ற நோக்கிலும் நசிகேதஸ் 'என்னை யாருக்குத் தானம் தரப் போகிறீர்கள்?' என்று கேட்டிருக்கலாம்.

தந்தைக்கு நல்லகதி கிடைக்க வேண்டி, அவரது வாக்கை உண்மையாக்க எண்ணி எமதருமராஜனின் தக்ஷிணையாக விரும்பி நசிகேதன் மனம் ஒன்றித் தியானம் செய்தான். எமனின் இருப்பிடம் அடைந்தான்.

அவன் எமலோகம் சென்றபோது, எமன் அங்கு இல்லை. வெளியில் போய் இருந்தான். மூன்று பகல், மூன்று இரவு அன்ன ஆகாரமின்றி எமன் வீட்டுவாயிலிலேயே நசிகேதன் நின்றான். எவரும் அவனை வரவேற்கவோ, உபசரிக்கவோ இல்லை.

மூன்று நாட்கள் சென்று எமன் வந்தபோது அதற்காக மிகவும் வருந்தினான். நசிகேதனிடம் ''பிராமணன் ஒரு வீட்டில் அக்னியைப் போல் நுழைகிறான். ஆதலால் பிராமணனான உன்னை உபசரியாமல் மூன்று நாட்கள் என் வீட்டு வாயிலில் இருக்கும்படி விட்டதால் உனக்கு மூன்று வரங்களை என் தவறுக்குப் பரிகாரமாகத் தருகிறேன். பெற்றுக் கொள்வாயாக'' என்று கூறினான்.

எமன் வெளியே போயிருந்தாலும், வேறு எவரும் கூட நசிகேதனை 'ஏன் என்ன என்று' விசாரித்ததாகத் தெரியவில்லை. ஆகவே இது எமன் தன்னிடம் வந்த நசிகேதனின் பொறுமையையும், உறுதியையும் சோதிப்பதாகவே காட்டுகிறது. அதேசமயம் தன் வீட்டு வாயிலில் கவனிப்பாரின்றி ஒரு பிராமணச் சிறுவன் விடப்பட்டதை தன் தவறாகவே எமலோகத் தலைவனான எமன் ஏற்றுக் கொண்டு, அதற்காக பிராயச்சித்தம் செய்ய முன் வந்ததிலிருந்து எமன் உண்மையிலேயே தருமராஜன்தான் என்று அறிகிறோம்.

இப்போது எமன் தனக்குத் தருவதாகச்

யும் படிப்பு, சிந்தனை மூலம் மனத்தையும் ஆரோக்கியமாய் வைத்துக் கொள்ள முயன்றால் சீக்கிரமே சோர்ந்து போகாமல் வளையவர முடியும்.

எச்சரிக்கை! இளமையாக இருக்க ஆசைப்பட்டு மருத்துவர் ஆலோசனையின்றித் தாமாகவே மருந்து மாத்திரைகளை உட்கொள்வது ஆபத்து. விளம்பரங்களில் காணப்படும் மருந்துகளும் டானிக்குகளும் வீண் பணச் செலவை ஏற்படுத்துவதோடு சரி.

இந்திரா காந்தியின் அரசியல் கொள்கைகளும் நடவடிக்கைகளும் உலகம் முழுவதும் விமர்சிக்கப்பட்டன. அதே போல், அவர் தோற்றமும் உடைகளின் தேர்வும் உலகத்தின் கவனத்தை ஈர்த்தன. அரசியல் நடவடிக்கைகள் குறித்துச் சாதக — பாதகமான விமர்சனங்கள் இரண்டுமே எழுந்தாலும், இந்திரா தம்மை அலங்கரித்துக் கொண்ட விதத்தை உலகம் முழுவதுமே பாராட்டியது. உலகிலேயே மிகச் சிறப்பாக உடையணிந்த பெண்மணிகளின் வரிசையில் இடம் பெற்றார் அவர். சிறு வயது முதல் இறுதிக் காலம் வரையிலான அவர் புகைப்படங்களைக் கூர்ந்து கவனித்தால் வயதுக்கேற்றபடி அவர் தமது தோற்றத்தை மெருகேற்றி மாற்றிக் கொண்டது புலப்படும். உணவு விஷயத்திலும் மிகுந்த கட்டுப்பாடு — காலை ஆகாரம்: சீதாப்பழம் மட்டுமே!

'இந்திரா காந்தியுடன் நம்மை ஒப்பிடலாமா?



சொன்ன மூன்று வரங்களை நசிகேதன் கேட்கத் தொடங்கினான்.

முதல் வரமாகத் தன் வீட்டுக்கு வேண்டியதைக் கேட்டான். அதாவது, தன்னைக் கோபித்துக் கொண்டு, ''உன்னை எமனுக்குத் தந்தேன்'' என்று சொன்ன தனது தந்தை கோபமில்லாமல் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் தனது தந்தை செய்த யாகம் அதற்குரிய பலனை அவருக்குத் தர வேண்டும் என்பதுவே!

இரண்டாவதாகஉலகமக்கள் சொர்க்கப்பதவிக்காகச் செய்யத்தக்க அக்னி வித்தையைப் பற்றிய அறிவைக் கேட்கிறான். ''எத்தனை செங்கற்களை உபயோகித்து, எவ்வடிவத்தில் ஓம குண்டத்தை அமைக்க வேண்டும்? இவ்வக்னி வித்தையைச் செய்யும் முறை என்ன?'' என்று சொர்க்கத்தில் சேர்க்கும் யாகத்தைப் பற்றிக் கேட்டான்.

இந்தச் சொர்க்கத்திற்கான அக்னி வித்தையாக எமதர்மன், கூறிய செய்முறையை அப்படியே பிழையின்றித் திருப்பிக் கூறிய நசிகேதனை எமன் பாராட்டினான். அத்துடன் அந்த அக்னி வித்தைக்கு 'நசிகேத அக்னி வித்தை' என்றே பெயரையும் சூட்டினான். இது உலக மக்கள் பயன் பெறக் கேட்டது.

மூன்றாவதாக ''ஒரு மனிதன் இறந்ததும், அவன் இருக்கிறான் என்று சிலரும், இல்லை என்று சிலரும் கூறுகின்றனர். இதன் உண்மை என்ன? உண்மையில் ஆன்மாவின் உண்மை நிலை என்ன? என்று எனக்குத் தாங்கள் தயை கூர்ந்து விளக்க வேண்டும்,'' என்று நசிகேதன் எமனிடம் வரம் கேட்டான்.

எமன் நசிகேதனைச் சோதிக்க விரும்பி, ''நசிகேதா, ஆன்மா பற்றிய உண்மையைத் தேவர்களும் அறியார். அது மிகவும் நுட்பமான உண்மை. எளிதாகப் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே வேறு ஏதாவது வரத்தைக் கேள்'' என்றான்.

நசிகேதனோ பிடிவாதமாக அதுவே எனக்குத் தெரிய வேண்டும் என்றான்.

ஆனால் எமனோ, ''பசுக்கள், யானைகள், குதிரைகள் அகண்ட பூமியின் அரசாட்சி, அழகுப் பெண்கள், ஆரோக்கியமான உடல், ஆனந்தமான வாழ்க்கை, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆயுள் எல்லாம் மனம் விரும்பும்படி தருகிறேன்; ஆனால் ஆன்மாவைப் பற்றிய உண்மையை மட்டும் கேட்காதே'' என்றான்.

''புகழோ, நீடித்த உலக சுகமோ, சக்கரவர்த்தி போன்ற அதிகாரமோ, ஜீவனை எமனாகிய மரணத்திலிருந்து காப்பாற்றாது. மேலும் எத்துணை சுகபோக வாழ்வாயினும் ஒரு நாள் எமன் வாயில் விழ வேண்டும் என்னும் போது நிரந்தரம் இல்லாததாகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து மரணத்தை அடையும் போது, அதுவரை வாழ்ந்த காலம், கனவு போலத்தானே ஆகின்றது. ஆகவே இதில் மனம் நிறைவு பெறுவதில்லை. ஆகவே மரணத்தைப் பற்றிய அறிவுதான் எனக்கு வேண்டும். ஆகவே, ஆன்மாவைப் பற்றிய அறிவே எனக்கு வேண்டும். தயவு செய்து மரணத்திற்கு அப்பாற்பட்ட வாழ்க்கையையே எனக்கு உப

நம்மால் அப்படி இருக்க முடியுமா...?'' என்று எண்ணிவிட வேண்டாம். ஒவ்வொரு நபரிடமும் இயற்கை தந்த எழில்கள் உள்ளன. அவை என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, அவற்றை விகசிக்கச் செய்யும் விதமாக அலங்கரித்துக் கொண்டால் கௌரவமான தோற்றம் கிட்டும். அதுவே அழகும் கூட.

துரதிர்ஷ்டவசமாக, இயற்கை தந்த எழில்



இருபத்தைந்து வயதில்...

இதயத்தின் இயக்க சக்தி:	:	1
நுரையீரல்களின் இயக்க சக்தி:	:	1
கொலஸ்ட்ரால் அளவு:	:	1
தசைகளின் வலிவு:	:	1
சிறுநீரகங்களின் இயக்க சக்தி:	:	10

நாற்பத்தைந்து வயதில்...

இதயத்தின் இயக்க சக்தி:	:	9
நுரையீரல்களின் இயக்க சக்தி:	:	8
கொலஸ்ட்ரால் அளவு:	:	22
தசைகளின் வலிவு:	:	9
சிறுநீரகங்களின் இயக்க சக்தி:	:	8

அறுபத்தைந்து வயதில்:

இதயத்தின் இயக்க சக்தி:	:	8
நுரையீரல்களின் இயக்க சக்தி:	:	6
கொலஸ்ட்ரால் அளவு:	:	22

களை நாம் பேணிக் காக்கத் தவறிவிடுகிறோம். இளமையின் துடுக்குத் தரும் துணிவில் ஆண்கள் சிகரெட், மது போன்ற கெட்டப் பழக்கங்களில் ஈடுபட்டு உதடு கறுத்து, வயிறு பருத்துப் போகிறார்கள். வெற்றிலை, புகையிலை போடுபவர்களோ பற்களில் காவியேற்றிக் கொண்டு பற்

தேசிப்பீர்களாக'' என்று எமனை நசிகேதன், உலக சுகபோக வாழ்க்கையை ஒதுக்கி வைராக்கியமாக மோட்சத்தையே நாடிக் கேட்டான்.

ஒரு நல்ல குருவிற்குத் தகுந்த சீடனைக் கண்டாலேயே மகிழ்ச்சி. பலவிதமாக, கவர்ச்சியான பொருள்களைத் தருவதாகக் கூறி, ஆசை காட்டியும், தன் வைராக்கியத்தில் நழுவாமல் நசிகேதன் இருந்ததால் அவனுக்கு ஆன்ம உண்மையை எமன் எடுத்துரைத்தான்.

ஜீவான்மாவுக்கு உடலே ரதம். புத்தியே அதை ஓட்டுபவன். மனமே கடிவாளம். ஐந்து புலன்களே குதிரைகள், உலகச் செய்திகளே அவை ஓடும் பாதை இதனாலேயே சுகதுக்கங்கள். புலன்களை அடக்கி மனத்தைக் கட்டுப்படுத்தி, புத்தியை ஆத்மாவில் ஒடுக்கினால் ஜீவன் பரமாத்மாவின் பதம் அடைவான். இதுவே ஒருவன் செய்ய வேண்டியது. எழுக; விழித்துக் கொள்க; செயல்படுக,'' என்று இன்னும் பலவாறு எமதர்மன் நசிகேதனுக்குப் பிரம்ம வித்தையைக் கற்பித்தான்.

இவ்வாறு முதலில் தன் வீட்டிற்கும், பிறகு உலகத்திற்கும், கடைசியில் தனக்காகவும் வரங்களைக் கேட்ட நசிகேதன் நமக்குச் சிறந்த வழிகாட்டியாகிறான். இந்த நசிகேதன் கதை கடோபநிஷத்தில் வருகிறது.

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்ற வைராக்கியம், ஒரு பத்து வயதுச் சிறுவனை எமனின் முன்னிலையில் நின்று துணிவுடன் பேசச் செய்தது. அத்துணிவே அவனுக்கு ஆத்ம தத்துவத்தையும் மோக்ஷத்தையும் பெற்றுத் தந்தது.

ஸத்யகாமனின் ஞானோதயம்

ஜாபாலையின் மகனான ஸத்யகாமன் கௌதமரிடம் சீடனாகச் சேர்ந்து விட்டான். முதலில் அவனுக்கு உபநயனம் செய்து வைத்து அவனை வித்தை பயிலும் நிலையிலுள்ள பிராமண பிரும்மச்சாரியாக்கினார்.

இனி வித்தையைக் கற்றுக் கொடுப்பார் என்று குருவை எதிர்பார்த்திருந்தான் ஸத்யகாமன்.

ஆனால் அவரோ, ''அப்பா, ஸத்யகாமா, இந்த நானூறு பசுக்களை மேய்த்து வா!'' என்று பணித்தார்.

அந்தப் பசுக்களோ, மிகவும் இளைத்து, சக்தியின்றி இருந்தன. அவைகளை மேய்க்க ஏற்றுக் கொண்ட, பணிவுள்ள ஸத்யகாமன், ''இந்த நானூறு மாடுகள், பெருகி ஆயிரமாகாமல் திரும்பி வர மாட்டேன்' என்று கூறி, தன்னால் குருவிற்குப் பயனுண்டாகும்படி மாடு மேய்த்தலை ஒழுங்காகச் செய்ய முடியும் என்று தெரிவித்து விட்டுக் கிளம்பினான்.

சீடன் வந்தது, பிரும்ம வித்தை பயில. அவனிடம் ஒப்படைக்கப்பட்டதோ மாடுகளை மேய்க்கும் வேலை. குரு, சீடனாக வந்தவனை ஏமாற்றித் தமது சொந்த வேலைக்கு உபயோகித்துக் கொண்டாரா?

அப்படிச் சொல்ல முடியாது. ஏனெனில்,

தசைகளின் வலிவு:	:	75%
சிறுநீரகங்களின் இயக்க சக்தி:	:	78%

எண்பத்தைந்து வயதில்...

இதயத்தின் இயக்க சக்தி:	:	81%
நுரையீரல்களின் இயக்க சக்தி:	:	50%
கொலஸ்ட்ரால் அளவு:	:	206
தசைகளின் வலிவு:	:	55%
சிறுநீரகங்களின் இயக்க சக்தி:	:	69%

மேற்படி புள்ளி விவரங்கள், வயதாக ஆக உடல் உறுப்புக்களின் இயக்க சக்தி குறைவதைக் காட்டுகிறது. கொழுப்புச் சத்தைக் கரைக்கும் ஆற்றல் குறைவதால் கொலஸ்ட்ரால் அளவு அதிகரிக்கிறது. வயதோடு ஏற்படும் இந்த மாற்றங்கள் நமது கட்டுப்பாட்டில் இல்லை! மனத்தின் ஆரோக்கியமே முதுமையை ஏற்கத் துணிவு தரும்.

— நன்றி: நியூஸ்வீக்.

நாற்பது வயதை நெருங்கும் போது 'ஐயோ!' என்று விழித்துக் கொண்டு புருவங்களைத் திருத்தி, காது மடல்களைக் குத்திக் கொப்பளித்து, முன் தலைமுடியைக் காது வரை கத்தரித்துக் கொண்டு — இளமையைத் துரத்திப் பிடிக்க முயலும் பெண்களும் உண்டு. உண்மையில் இத்தகையவர்கள்தான் முதுமையை எதிர்த்துப் போராட முயல்வதன் மூலம் தங்கள் பரிதவிப்பை வெளிப்படுத்துகிறார்கள். இத்தகைய போராட்டம் 90 சதவிகிதம் தோல்வியில்தான் முடியும்.

'ரிடையர்மெண்ட்'டைத் தோல்விக்குச் சம,



சிதைவையும் வரவேற்கிறார்கள்.

போதாக்குறைக்கு, நடு வயதை எட்டும் போது நாம் இனி 'சின்னப் பிள்ளைகள் இல்லை' என்ற பிரக்ஞையே இவர்களுக்கு வருவதில்லை. கலர் கலராய் ம ஷர்ட்டும் அகலக் கிருதாவும் 'அடிக்க வரும்' தோற்றத்தையே தருகின்றன.



மாக எண்ணும் பக்குவமற்ற போக்குதான் அதிகம் காணப்படுகிறது. சொந்த வியாபாரம் செய்து கொண்டிருந்த ஒருவர் திடீரென்று வேலையில் நாட்டம் இழந்தார். அன்றாட அலுவல்களைக் கூட கவனிக்க மறுத்தார். தோண்டித் துருவிப் பார்த்ததில் வியாபாரத்தில் போட்டியாகச் சில இளைஞர்கள் நுழைந்திருப்பதும் அவர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இவர் தவிப்பதும் வெளிப்பட்டன. ஒரு வயதுக்கு மேல் நமக்கு உழைக்கும் ஆற்றல் குறைந்துதான் போகும் என்ற உண்மையை ஒப்புக் கொண்டால் வியாபாரத்தில் சுறுசுறுப்புக் குறையும் போது மனம் உடைந்து போகாது. ரிடையர்மெண்டை பயங்கர கால கட்டமாக எண்ணவும் தோன்றாது.

ரிடையரான பிறகு ஓயாமல் வேலை செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்று நினைக்கும்



சிலர் உண்டு. தங்கள் முக்கியத்துவத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் போராட்டத்தில் இவர்கள் தங்களைச் சுற்றி இருப்பவர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். 'கிழம்! பேசாமல் அக்கடான்னு இருக்கக் கூடாதோ?' என்று முணுமுணுக்கச் செய்கிறார்கள். தங்கள் வயதை, முதுமையை தேவைக்கு அதிகமாகப் பிறருக்கு ஞாபகப்படுத்துகிறார்கள்.

முடங்கிக் கிடக்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. முந்திரிக் கொட்டையாக இருக்க வேண்டாம் என்றுதான் எச்சரிக்கிறோம். நமது ஆற்றலின் எல்லைகளை உணர்ந்து அதன்படி செயல்பட்டால் முதுமையின் பலவீனங்களை வெளிப்படுத்திக் கொள்ள மாட்டோம். செய்வதை ஒழுங்காகச் செய்ய முடியும். நமக்கும் சந்தோஷம், பிறருக்கும் திருப்தி.

அமெரிக்காவில், முதுமையைக் கட்டுப் படுத்தும் ஆராய்ச்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர் சில விஞ்ஞானிகள். **Gerontology** என்ற இத்துறை வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த ஆராய்ச்சியினூடே கண்டறியப்பட்ட உண்மை: ஆழ்நிலை தியானம் முதியவர்களுக்குக் கூட நினைவாற்றலைப் பெருக்கி, உயர் இரத்த அழுத்தத்தைக் குறைத்து ஆயுளை நீடிக்கிறது.

தியானமும் டென்ஷன் அற்ற அமைதியான வாழ்க்கையும் நோய் நொடி என்று படுத்துவிடா

பிரும்மவித்தைக்குத் தொடக்கமான பூணூல் கல்யாணத்தைச் செய்து பிரும்மோபதேசம் செய்திருக்காரே!

அதுமட்டுமில்லை. புதிதாக வந்த பையனை நம்பி நானூறு மாடுகளைக் கொடுத்தனுப்பியதற்கு அவரது நம்பிக்கையை நாம் பாராட்ட வேண்டாமா?''

அப்படிப்பட்ட நல்ல குருவிற்கமைந்த உண்மையான சீடனும், ''மாடுகளை அதிகமாக்கிக் கொண்டு வருவேன்'' என்று கூறிப் போனான்.

முன் காலத்தில் மாடுகள்தான் செல்வமாகக் கருதப்பட்டு வந்தன. போருக்கு ஆரம்பம் கூட ஆநிரை கவருதல் என்ற பசுக்களை ஓட்டிச் செல்லுதலாகவே இருந்து வந்தது. ஆகவே அரசனிடமும் குடிமக்களிடமும் மாடுகளிருந்தன.

குரு கௌதமர் தம்மிடம் இருந்த கன்று போடாத 'எமாதார்' மாடுகளையே மேய்ச்சலுக்காக ஸத்யகாமனிடம் ஓட்டிச் செல்ல அனுப்பினார். இன்றும் பால் கறக்காத, கன்று போடாத மாடுகளை கிராமப்புறங்களுக்கு மேய்ச்சலுக்கு ஓட்டி விடுவதுண்டு. அவனும் அவரனுப்பிய நானூறு மாடுகளை ஆயிரமாக்கி வருகிறேன் என்று சென்றான் என்றால், 'அம்மாடுகளை நன்கு மேய்த்து, வலுவூட்டி, சினை பிடிக்கச் செய்து, கன்று போட வைத்து, அந்தக் கன்றுகளையும், பெரிய மாடுகளாக்கி, மாடுகளை எண்ணிக்கையில் அதிகரிக்கச் செய்கிறேன்' என்று சொன்னான் என்பதே பொருள். அதுமட்டும் இன்றி, மாடுகள், கன்று போடத் தொடங்கியதும், கறக்கும் பால், வரட்டி தட்டக் கூடிய அல்லது எருவாகக் கூடிய சாணி ஆகியவற்றை அவன் நிச்சயம் வீணாக்கி இருக்க மாட்டான். பணமாக்கி இருப்பான். வெறும் புல்லைக் காடுகளில் மேய்ந்தால் மட்டுமே மாடுகளுக்குப் போதுமா? அந்தப் பணத்தில், மாடுகளுக்கு வேண்டிய மற்றைய தீவனங்களையும் வாங்கி இருக்கலாம். மாடுகளின் காவல், பராமரிப்பு, மாடுகளால் கிடைக்கும் பொருள், வியாபாரம் – இவற்றைக் கவனிக்க அவன் ஒருவனாலேயே முடியுமா? அதற்காக வேலையாட்களை அமர்த்திக் கொண்டிருக்கலாம். அனைவருக்கும் பெரிய அளவு தங்குமிடம் உண்டாக்கிக் கொண்டிருப்பான். ஒரு மாட்டுப் பண்ணையே அவன் நடத்தி இருப்பான். இந்த நிர்வாகத்தில் மிஞ்சிய பணத்தில் நல்ல மாடுகளை வாங்கியும் சேர்த்திருப்பான். இப்படி ஆயிரம் மாடுகளைச் சேர்த்துக் கொண்டு குருவிடம் வர ஆண்டுகள் கணக்கில் காலம் ஆகியிருக்கும்.

இப்படி ஆயிரமாக மாடுகளின் எண்ணிக்கைக் கணக்கைச் சரி செய்து கொண்டு சில வருடங்களுக்குப் பின் தனது குருவிடம் ஸத்யகாமன் வந்து சேர்ந்தான். அவன் கொண்டு வந்த மாடுகளைப் போலவே, அவனும் செழிப்பாக இருந்தான்.

சிறந்த புலன்களிலடக்கமும் கூர்மையும் உடையவனாகவும், சிரித்த முகமுடையவனாகவும், கவலையற்று, மனநிறைவுடையவனாகவும் ஸத்யகாமன் விளங்கினான். இந்த இலட்சணங்களை அவனிடம் கண்ட குரு, அவனைப் பார்த்



மல் இருக்க உதவும். வெளியுலகுடன் போராடு வதையும் மனப்போராட்டங்களையும் குறைக் கும். மன அமைதியும், உற்சாகமான மனப்போக் கும் இணைந்தால் உலகின் பால், வாழ்வின் பால் பக்குவமான காதல் ஏற்படும். வாழ்க்கை அர்த்த முள்ளதானால் வயது பயமுறுத்தாது. இதுவரை

துக் கேட்டார்:

''நீ கடவுளைக் கண்டவனைப் போலத் தோன் றுகிறாய். உனக்கு அந்த அறிவைக் கூறியவர் யார்?''

''எனக்கு பிரும்ம ஞானத்தைப் புகட்டியவர் மனிதர்களில் யாரும் இல்லை. தாங்களே எனக்கு எனது ஆசைதீர உபதேசம் செய்ய வேண்டும்'' என்றான்.

மட்டமாக நாம் நினைக்கும் தொழிலான மாடு மேய்க்கும் தொழிலைச் செய்த ஸத்யகாமன் எப்படி பிரும்மத்தைப் பற்றிய ஞானத்தை அடைந் தான்?

மனம் ஒப்பி, எப்படியாவது பிரும்மத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே அக்கறை யுடன் மாடு மேய்த்தலைச் சிறப்பாகச் செய் தான். அது, தனது கடமையை மனமும் உடலும் ஒன்றுபட்டு அவன் செய்ததாகிச் சிறந்த பக்குவத் தையும், அதன் விளைவான அறிவையும் கொடுத்தது. தான் குருவிடம் வந்த நோக்கத்தை மறக்காமல், அக்கறையுடன் மாடு மேய்க்கும் போதும் ஒருப்பட்ட மனத்தில் சிந்தித்ததால் இயற் கையில் அவனுக்கு எதிர்ப்பட்ட மண், மலை, வான், மாடு என்று எல்லாமே அவனுக்கு ஞானத் தைப் புகட்டின.

பசுக்கூட்டம் நினைத்த எண்ணிக்கையான ஆயிரத்தை எட்டியதும், குரு குலத்திற்குத் திரும் பினான்.

தனது சந்தேகங்கள் தீர முழு ஞானத்தைச் சொல்ல வேண்டும் என்று குருவிடம் கூறிப் பணி வாய் நின்றான். மகிழ்ந்த குரு அவனுக்குப் பிரும் மத்தைப் பற்றி எல்லாம் உபதேசித்தார். இது, சாந்தோக்யோபநிஷத்து.

ஸத்யகாமன், 'பிரம்ம வித்யை' கற்க வந்த நம்மை மாடு மேய்க்கச் சொல்கிறாரே என்று மனம் கலங்கவில்லை. மாடு மேய்த்தால் உலகம் என்ன சொல்லுமோ என்று அஞ்சவில்லை. கட மையைச் செய்ய அஞ்சாத அவனுக்கு நற்கதி பிறந் தது.

யாஜ்ஞவல்கியர்

மிதிலாபுரியில் வைசம்பாயனர் யஜுர்வேத பரம்பரையைத் தோற்றுவித்துப் பயிற்சியளித்துக் கொண்டிருக்கையில், அவரிடம் மாணாக்கராகச் சேர்ந்தவரே யாஜ்ஞவல்கியர்.

அவர் மிகுந்த திறமைசாலி. குரு மெச்சும்படி வித்தையில் விளங்கினார். இதனால் மற்றைய மாணாக்கரை அவர் அவ்வளவாக மதிக்காதது போலத் தெரிந்தார். இது மற்றைய மாணவர் களின் தாழ்வு மனப்பான்மை காரணமாகவுமிருக் கலாம்.

அவ்வமயம், மிதிலாபுரியின் மன்னன் 'ஜநகர்.' இவரே இராமாயணத்தில் சீதாபிராட்டியின் தந்தை. ஜநகரும் பிரும்மவித்தையில் விளங்கி யவர். அதனால், அவர் வேதவித்துக்களை மதித் தார். ஆகவே, குரு வைசம்பாயனரை மிகவும் ஆதரித்து வந்தார். அத்துடன், வைசம்பாயனரின்

வாழ்ந்த வாழ்க்கை விரயமில்லை என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல்ல முடிந்தால் தள்ளாமையைத் தாங்கிக் கொள்ளும் சக்தி பிறக்கும். இப்படி நெஞ்சு நிமிர்த்திச் சொல்ல வேண்டுமென்றால் நமக்காக மட்டுமே வாழாமல் உலகில் உபயோகமாகத் தடம் பதித்த நிறைவு வர வேண்டும். இளமையின் ரகசியம்: சுயநலமற்ற, சுயபச்சாதாபத்தை வென்ற, வாழ்க்கைதான்.

பொய்ப் பல்லும், வெள்ளெழுத்துக் கண்ணாடியும் முதுமையின் முத்திரைகள் என்று கருதப்படுவன. பல் விழுவதையும் பார்வை மங்குவதையும் தவிர்க்க முடியாது போனாலும் துரிதப்படுத்தாமல் இருக்கச் சில நல்ல நடைமுறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

ஒரு கண் மருத்துவ நிபுணர் அளித்த வானொலி பேட்டியில் கூறினார்: "கண் என்பது பார்ப்பதற்காகவே ஏற்பட்டது. அதனால் அதிகம் பார்ப்பதாலும் படிப்பதாலும் கண் பழுதடைந்து விடாது. இந்தச் செயல்களை முறையாகச் செய்யாமல் போவதால்தான் கண் பார்வை பாதிக்கப்படுகிறது." டி. வி.க்கு மிக அருகில் அமர்ந்து பார்ப்பது, ஓடும் பஸ்ஸில் படிப்பது, படுத்துக் கொண்டு படிப்பது, அளவான வெளிச்சமின்றிப் படிப்பது போன்றவை நிச்சயம் கண்களுக்கு நல்லதல்ல. பத்து வயதுப் பிள்ளைகள் கூடக் கண்ணாடி போட்டுக் கொள்வது அதிகமாகி விட்டதென்றால் டி. வி.யைக் குறை சொல்லக் கூடாது; அதற்கு வெகு அருகே அமர்ந்து பார்க்கும் சிறுவர்









சீடர்களில் ஒருவரைத் தினமும் மந்திராட்சதையுடன் அரண்மனைக்கு வந்து பிக்ஷையாக உணவருந்திவிட்டு அட்சதையைத் தம்மிடம் கொடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். அதன்படி குருவிடம் யஜுர்வேதப் பயிற்சி பெற்ற மாணாக்கர்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் அரண்மனை சென்று உணவருந்தி அரசனான ஜனகரிடம் அட்சதை கொடுத்துவிட்டு வந்து கொண்டிருந்தனர். தினமும் இது நடந்தது.

ஒரு நாள் மாணாக்கராக அப்போதிருந்த யாஜ்ஞவல்கியரின் முறை வந்தது. குருவின் மந்திராட்சதையுடன் அரண்மனை சென்ற அவர் அரசனான ஜனகர் இல்லாததால் அவர் வரும் வரை காத்திருக்காமல், அட்சதையை அரசனின் அரியணையில் வைத்துவிட்டு உண்ணாமலேயே குருவின் ஆஸ்ரமத்திற்குத் திரும்பி விட்டார். வேதம் படித்த உண்மையான ஞானிக்கு அரசனானால் என்ன? ஆண்டியானால் என்ன? பிரும்ம வித்தை பயிலும் மாணாக்கன் அதைத் தவிர்த்து வேறொன்றைப் பெரிய இலாபமாகக் கருதினால்தானே அரசனுக்கு அஞ்சவோ, அவன் வரும்வரை காத்திருக்கவோ போகிறான். மேலும், வேதாத்யயனம் செய்யும் அந்தணனை அட்சதையுடன் அழைக்கும் ஏற்பாட்டைச் செய்துவிட்டு, அவனுக்காகக் காத்திராமல் அரசன் வெளியே போனால்?

ஏதோ வேலையாக வெளியே போயிருந்த அரசன் திரும்பி வந்து பார்த்தான். விருந்துண்ண வேதமோதிய வித்தகர் இல்லை. வேறொரு







களையும் அதை அனுமதிக்கும் பெற்றோரையும் தான் குறை சொல்ல முடியும்.

சின்ன வயது முதலே கண்ணாடி போட்டுக் கொள்பவர்கள் ஒருவாறு பழகிக் கொண்டு விடுகிறார்கள். நடு வயதில் வெள்ளெழுத்துக் கண்ணாடி அவசியமாகும் போதுதான் சிறிது 'காம்ப்ளெக்ஸ்' பிறக்கிறது. முகத்துக்குப் பொருத்தமான ஃப்ரேமைத் தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டால் வயதுக்கேற்ற கம்பீரம் பிறக்கும். கூச்சத்துடன் கண்ணாடியைப் பையில் வைத்துக் கொண்டு, படிப்பதற்கு அவஸ்தைப்பட்டு வயதைக் காட்டிக் கொள்வானேன்!

'கிட்டப் பார்வை' மற்றும் 'தூரப் பார்வையை'க் கண்களுக்கு முறையான பயிற்சி அளிப்பதன் மூலம் அறவே நீக்கிவிடும் சிகிச்சை புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகளை மேற்கொண்டு குணம் அடைந்தவர்கள் இதனைச் சிலாகித்துச் சொல்கிறார்கள். ரப்பர் பந்தைத் தரையில் தட்டுவது போன்ற எளிய பயிற்சிகளே இவை. பந்துடன் கண்ணும் பிரயாணம் செய்வதால் கண்களுக்கு நல்ல பயிற்சி!

மூப்பது முப்பத்தைந்து வயதுக்குள் பல் ஈறுகள் பஞ்சு போல் ஆகி ரத்தம் வர ஆரம்பித்ததும், அந்தப் பெண்மணி விழுந்தடித்துக் கொண்டு பல் டாக்டரிடம் போனாள். அவர், ''தினமும் சப்பாத்தி சாப்பிட்டிருந்தால் உனக்கு இந்தச் சங்கடம் ஏற்பட்டிருக்காது'' என்றார்.

வியப்பு வேறு விளைந்திருந்தது.

யாஜ்ஞவல்கியர் வைத்துச் சென்றிருந்த மந்திர அட்சதை, ஜனகர் வீற்றிருக்கும் சிம்மாசனத்தில் வளைந்து விதானம் போலப் படர்ந்திருந்தது.

செய்தியை அறிந்த மன்னர் ஜனகர், அன்று வந்திருந்த அந்தண மாணாக்கரைக் காண ஆவல் கொண்டார்.

ஆளனுப்பி அழைத்தார். அந்த அதிசய மாணவரோ, அரசனின் அழைப்பையும் அலட்சியம் செய்தார். காரணம் கல்வியில் கவனமாக இருந்ததுவே!

அரசனே நேரில் வந்தார். செய்தியை வைசம்பாயனர் செவி மடுத்தார்.

''வைசம்பாயனரே வணக்கம். உமது மாணாக்கரில் ஒருவர், உண்ணாது, எனது இருக்கையிலே மந்திர அட்சதையைவைத்துவிட்டு வந்துவிட்டார். நேரில் என்னிடம் தரவில்லை. அரசனுக்காகக் கூடக் காத்திராத அவரைக் காணவே நான் வந்தேன்,'' என்றார்.

அம்மாணவர் யாஜ்ஞவல்கியர்தான் என வெளிப்பட்டது.

''யாஜ்ஞவல்கியா, இது உண்மைதானா?''

''ஆமாம்! விருந்தை அழைத்துவிட்டு, குருவின் மந்திராட்சதையைப் பெற்றுக் கொள்ளக் கூடக் காத்திராதவர் அரசரே ஆனால் என்ன? அவருக்காக நான் ஏன் காத்திருக்க வேண்டும்? அவரால் எனக்கு ஆக வேண்டியதொன்றுமில்லை.''

யாஜ்ஞவல்கியரின் இந்தப் பதிலால் ஆச்சாரியர் வைசம்பாயனரும் அரசர் ஜனகரும் அதிர்ந்து போயினர். சக மாணவர்களுக்கு ஓர் ஆனந்தம். 'ஒன்று அரச தண்டனைக்கு யாஜ்ஞவல்கியர் உட்பட நேரும்; அல்லது குருவின் கோபத்தால் சாபத்திற்கு இலக்காகும்படியாகும்' என்ற எண்ணமே அது.

வைசம்பாயனர் விடவில்லை.

''யாஜ்ஞவல்கியா, உனக்குக் கருவம். அகம்பாவம். வித்தை கற்றவன் என்றாலும் விவேகமில்லை. ஆட்சிக்கு இறைவன் போன்ற அரசனை அவமதித்ததுடன் ஆச்சாரியனான என்னையும் எதிர்த்துப் பேசுகிறாய்'' என்றார்.

''என் மனத்தில் நீதி என்று தோன்றியதைச் செய்தேன். எண்ணியதை ஒளிக்காமல் உரைத்தேன்.''

''நீ என்ன விசித்திரமானவன் என்ற நினைவா? இனி எனது வித்தையான வேதம் உன்னிடமிருப்பதில் புண்ணியமில்லை. உடனே அதைக் கக்கி விடு!'' என்றார்.

வைசம்பாயனரின் இந்த வார்த்தையைக் கேட்டவுடன் யாஜ்ஞவல்கியர்,

''உமது வித்தையை இதோ கக்கி விடுகிறேன்,'' என்றவாறே அங்கிருந்தோர் வியக்கும் வண்ணம் வைசம்பாயனர் கற்றுத் தந்த வேதத்தை வெளியில் கக்கிவிட்டார்.

தின்ற சோற்றைத் திரும்பவும் கக்குவது போல அவர் கக்கிய வேதத்தைத் தித்திரிப்புறாக்களாக மாறி மற்றைய மாணவர்கள் தின்றனர். இப்படிச் செய்யும்படி வைசம்பாயனரே அவர்களுக்குக் கட்டளையிட்டார். இதனால், யாஜ்ஞவல்கியர்

தகவல்கள் உதவி:



* செல்வி ரமா
(அழகுக் கலை நிபுணர்).



* டாக்டர் உஷா ஸ்ரீராம்

சப்பாத்தியை மென்று பல்லுக்கும் ஈறுகளுக்கும் வேலை கொடுப்பதால் அவை வலு பெறுகின்றன. குழைந்த சாதம் பற்களுக்கு வேலையே தருவதில்லை. வறுத்த பண்டங்களும்; மிகச் சூடான, மிகக் குளிர்ந்த பண்டங்களும் நிச்சயம் பற்களைப் பாதிக்கும். தினமும் இரண்டு மூன்று வேளை சாக்லேட் கலந்த பால் பானங்கள் குடிப்பதால் குழந்தைகளின் பற்களில் கூட கறை படியும். பெரியவர்களுக்கோ அந்தக் கைங்கரியத்தை வெற்றிலை, புகையிலை செய்கிறது.

மேல் வரிசைப் பற்களை மேலிருந்து கீழாகவும் கீழ் வரிசைப் பற்களைக் கீழிருந்து மேலாகவும் பிரஷ் கொண்டு தேய்க்க வேண்டும் என்கிறது ஒரு மருத்துவக் குறிப்பு. இதற்கு மாறாகத் தேய்த்தால் ஈறும் பல்லும் இணையும் இடத்தில் சேரும் உணவுத் துகள்கள் வெளியேற்றப்படுவதில்லை.

நீங்கள் உபயோகிக்கும் பேஸ்ட் எந்த சுவையிலும் எந்த நிறத்திலும் இருக்கலாம். அதன் அளவும் விளம்பரத்தில் காட்டுவது போல பிரஷ் நிறைய, ஒரு இஞ்ச் நீளம் இருக்கத் தேவையில்லை. துளி பேஸ்ட் போட்டு மேற்சொன்ன குறிப்புப் படி தேய்த்து விட்டு, வாயில் சேரும் நுரையைத் துப்பி விடாதீர்கள்! அந்த நுரையுடனேயே சிறிது தண்ணீர் சேர்த்து வாயை நன்றாகக் கொப்பளியுங்கள் — நான்கு, ஐந்து, ஆறு முறை கூட கொப்

கற்றிருந்த வித்தையை அவர்களறிந்தனர். தித்திரிப் பறவை வடிவத்தில் பெற்ற வித்தைப் பகுதியே இப்போது 'தைத்திரீய சாகை' என வழங்கி வருகிறது. 'கிருஷ்ண யஜுர் வேதம்' என்றும் கூறுவர்.

யாஜ்ஞவல்கியரின் பெருமையை, திறமையை அரசர் ஜனகருக்கும், அவர் மீது 'கர்வி' என்று கருத்து வைத்திருந்த மாணவர்களுக்கும் காட்டவே வைசம்பாயனர் இப்படி ஒன்றை உருவாக்கியிருக்கலாம்.

அதன்பின் 'விவஸ்வான்' என்ற சூரியனை, அவனுலகம் சென்று குருவாகக் கொண்டு, யஜுர் வேதத்தை மீண்டும் யாஜ்ஞவல்கியர் பெற்றார். அதற்கு 'சுக்லயஜுர் வேதம்' எனப் பெயர். யஜுர் வேதமிரண்டாகப் பிரிந்தது இங்ஙனமே! வாஜஸனேய ஸம்ஹிதை எனவும் இதை வழங்குவர்!

உயர் பதவியிலிருப்போரைக் கண்டு அஞ்சாமல் தம் மனச்சாட்சிப்படி நடந்து கொண்ட யாஜ்ஞவல்கியர் கதை இன்றும் எவ்வளவு அர்த்தமுள்ளதாக விளங்குகிறது! அவருக்குச் சோதனை வந்த போதும் யஜுர்வேதம் மீண்டும் கிடைத்து விட்டதே!

அக்னிக்கு அஞ்சாத மீன்

அக்னி தேவனுக்கு முன்னே பிறந்தவர்கள் மூன்று பேர். அவர்கள் தேவர்களுக்கு ஹவிஸ்ஸை எடுத்துச் செல்லுபவர்கள். வேள்வியில் அளிக்கும் உணவை அந்தந்தத் தேவதைகளுக்கு அளித்து, பல நாட்களாகச் சேவை செய்து, கடைசியில் தங்களுக்குத் தகுந்த உணவு கிடைக்காததால் அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார்கள். அடுத்து அக்னி அந்த வேலையைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தேவர்கள் கண்ணில் படாமல் அக்னி தண்ணீரில் ஒளிந்து கொண்டான். அவனைத் தண்ணீரில் வசிக்கும் மீன் ஒன்று அடையாளம் கண்டு கொண்டு தேவர்களுக்கு உதவியது. தங்கு தடையின்றி தேவர்களுக்கு ஆகாரம் அளிக்கப்பட்டால்தான் அவர்கள் மகிழ்ந்து, மழை பொழிய வழி வகுப்பார்கள். மழையினால் பூமி செழிப்படைந்து சுபிட்சம் ஏற்படும் என்பதை எண்ணி, நீரில் ஒளிந்திருக்கும் அக்னி தேவதையை அச்சத்தை விட்டுக் காட்டிக் கொடுத்த மீனின் செயல் யஜுர் வேதத்தில் கூறப்பட்டுள்ள கதை.

காட்டிக் கொடுப்பது என்பது பொதுவாக விரும்பத் தகாத செயல்தான். ஆனால் உலக நன்மையைக் கருதிப் பழி ஏற்பட்டாலும் சரி என்று அச்சமின்றிச் செயல்பட்டது மீன்!

எதிர்ப்புக்கு அஞ்சாமை

'விருத்திராசுரன்' என்னும் தீய சக்தி உலகத்தை அழிக்க ஆயத்தமானான். பொறுப்பை உணர்ந்த இந்திரன் வஜ்ராயுதத்தோடு விருத்திரனை நெருங்கினான். விருத்திரனின் கோரப்



* டாக்டர் வர்ஷா காளிதாஸ்.



* டாக்டர் டி. என். ஸ்ரீனிவாஸன்

பளிக்கலாம். பற்கள் பளபளப்பாவதுடன், கன்னப் பகுதியின் தசைகளுக்கும் நல்ல 'எக்சர்சைஸ்' கிடைப்பதால் முகத்தில் சீக்கிரம் 'கிழ'க் களை தோன்றுவதைத் தவிர்க்கலாம்.

தேவையான போது டாக்டரிடம் போகாமல் இருப்பதால் சிக்கல்கள் பல ஏற்படும். நடுத்தர வயதை நெருங்கும் போது ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி போன்றவை உள்ளதா என்று நாமே வலியச் சென்று 'செக் அப்' செய்து கொண்டு விடுவது மிகவும் நல்லது. இவை ஏதேனும் இருந்தால் முளையிலேயே கிள்ளவோ கட்டுப்படுத்தவோ ஏதுவாயிருக்கும்.

மாறாக, இந்த நோய்கள் முதுமையின் அடையாளம் என்பதால் இவற்றின் அறிகுறிகள் தோன்றினால் கூட அவற்றை அலட்சியப்படுத்தி நம்மை நாமே சமாதானம் செய்து கொள்ளவே மனம் விழைகிறது. 'அப்படி என்ன வயதாகி விட்டது நமக்கு?' என்று எதிர்ப்புக் குரல் எழுப்பும் மனத்தை அடக்கி விட்டு, உடனடியாக டாக்டரிடம் போனால் 'கையிருப்பாக' உள்ள ஆரோக்கியத்தையாவது காப்பாற்றிக் கொள்ளலாம், அல்லவா!

வயதாக ஆக, உடல் உறவில் நாட்டமும் வேகமும் இயல்பாகக் குறையும். அதே நேரத்

பற்களின் இடைவெளியில் மாட்டிக் கொண்டு வெளிவர முடியாமல் உயிருக்கு மன்றாடித் தவித்த அக்னி, ஸோமன் என்ற இரு தேவதைகள் இந்திரனை வேண்டினார்கள்.

''தேவேந்திரா! நிதானம் இழக்காதே! நாங்கள் இருவரும் விருத்திரன் வாயிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கிறோம். விருத்ரனை அழிக்கும் முயற்சி எங்களது அழிவிற்கும் காரணமாகிவிடும். ஆகையால் முயற்சியை மாற்றிக் கொள்!'' என்றார்கள்.

இந்திரன் அவர்களை வெளியே வந்துவிடக் கூறியும் அவர்களால் கோரப் பற்களின் இறுகிய பிடியிலிருந்து விடுபட முடியவில்லை.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் இந்திரனின் சிந்தனை தெளிவாகச் செயல்பட்டது. குளிர் ஜுரத்தை விருத்ராசுரன் மீது ஏவினான் இந்திரன். ஜுரத்தின் ஆக்கிரமிப்பால் கொட்டாவி விட்டான் விருத்ரன். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கொட்டாவியில் அகல வாய் பிளந்திருக்கும் வேளையில், தேவதைகள் இருவரும் வெளியே வந்து விட்டார்கள். கொட்டாவி வந்து வாய் பிளந்து விட்டால், உடனே நமது விருப்பத்திற்கு இணங்க மூட முடியாதல்லவா?

அச்சத்தை ஊட்டும் அசுரனின் அட்டகாசத்தை, அச்சமின்றி அகற்றும் ஆற்றலை இந்திரன் பெற்றிருந்தான் — என்ற தகவல் யஜுர் வேதத்தில் வருகிறது.

இன்றைக்கும் கூட தீய சக்திகள் தங்கள் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள யாரையாவது கடத்



தில் ஆண்களுக்கு அலுவலகப் பொறுப்புக்கள் அதிகரித்திருக்கும்; சில சமயம் வீடு என்று ஒன்று இருப்பதே மறந்து போகும். மனைவி வேலைக்குப் போகாத இல்லத்தரசியாக இருந்தால் தன் இளமையும், கவர்ச்சியும் போய்விட்டதால்தான் கணவனுக்குத் தன்னிடம் நாட்டம் ஏற்படுவதில்லையோ என்ற கவலை அரிக்க ஆரம்பித்துவிடும்! பிரச்னை மிகத் தீவிரமாகி விட்டால் மருத்துவர் உதவியை நாடுவதில் தவறில்லை. ஆனால், கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு மனம் விட்டுப் பேசி, உள்ளார்ந்த அன்பின் விளைவாக ஏற்படும் இயல்பான நிகழ்வுதான் உடலுறவு என்பதை ஏற்றுக் கொண்டால் வெளி உதவிகளோ, செயற்கைத் தூண்டுதல்களோ அவசியமாகப் படாது. நமது பண்பாடு போதிக்கும் புலனடக்கத்தை நினைவில் வைத்துக் கொண்டால், உடல் மன ஆரோக்கியங்கள் சீராக இருக்கும்.

Grow old gracefully; the best is yet to come — என்று சொல்வார்கள். முதுமையை நளினமாக, ஆர்ப்பாட்டம் இன்றி ஏற்றுக் கொள்ளுங்கள்; இனிமேல்தான் மிகச் சிறந்த வாழ்க்கை உங்களுக்குக் காத்திருக்கிறது என்று ஐம்பது வயதுக்காரரிடம் சொன்னால் அவநம்பிக்கையுடன்தான் நம்மைப் பார்ப்பார். 'ரிடையர்மெண்ட்' என்னும் பயங்கரம் ஒருபுறம் அச்சுறுத்த, பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணனும் என்ற கவலை மறுபுறம் அரிக்க, மன் ஏஜ் மிதப்பில் மகன் தம்மை அலட்சியப்படுத்துவதும் எதிர்த்துப் பேசுவதும் அச்சுறுத்த, மனிதர் ஆடித்தான் போகிறார். சஞ்சலங்கள் நிறைந்த வாழ்க்கை வாழும்போது தோற்றத்தில் இளமை 'டாடா' காட்டி விடுகிறது. மனோதத்துவ ரீதியிலும் உடல் ரீதியிலும் பிரச்னைகள் தோன்றுகின்றன.

வாழ்க்கையில் தீர்க்கதரிசனத்துடன் திட்டமிட்டுக் கொள்வதன் மூலம் இந்தச் சங்கடங்களைக் குறைத்துக் கொள்ளலாம். இன்ஷூரன்ஸ், யூனிட்ஸ், நேஷனல் சேவிங்ஸ் ஸ்கீம் என்று எத்தனையோ உபயோகமான சேமிப்புத் திட்டங்கள் இருக்கின்றன. இளமையில் நன்றாக உழைத்து, நிறையச் சம்பாதிக்க முடியும் போது, பணத்தை வாரி விடாமல் முதுமைக் காலத்துக்கென்று அவசியம் சேமிக்க வேண்டும். ரிடையர் ஆன பிறகும் பிறர் தயவை நாடாமல் சுதந்திரமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையே ஓய்வு பெறும் காலத்தை மகிழ்வுடன் எதிர்நோக்கச் செய்யும். சேமித்த பணம் பாதுகாப்பு உணர்வையும் மனோ திடத்தையும் அளிக்க எழுபது வயதிலும் ஐம்பது வயதின் சுறுசுறுப்பு காணப்படும்.

தொகுப்பு: **நிர்மலா சக்கரவர்த்தி**

புகைப்படங்கள்: **ஸ்ரீஹரி**

திச் சென்று அவர்களைக் கொன்று விடுவோம் என்று பயமுறுத்துவதைப் பார்க்கிறோம். அந்தத் தீயசக்தியைக் கொன்றால் அதனால் கட்டுப்பட்டு இருப்பவருக்கும் ஆபத்து! எனவே போராடத் தயங்குகிறோம். இம்மாதிரி தருணங்களில் வீரத்துடன் தந்திரமும் கையாளப்பட வேண்டும் என்று உணர்த்துவது போல் கதை அமைந்திருக்கிறது அல்லவா?

ஆபத்து வந்தாலும் அஞ்சாமை

இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவன் ஹரிச்சந்திரன். அவனுக்கு மூன்று மனைவிகள் இருந்தும், குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லை. வருண பகவானை வேண்டினான். "எனக்குப் பிள்ளை வரம் அளித்தால், அவனை வைத்து வேள்வி செய்து உன்னை மகிழ்விக்கிறேன்!" என்று உறுதி அளித்தான். பிள்ளையைப் பெற்றான். அவனுக்குப் பெயர் ரோஹிதன். ஒப்பந்தப்படி பிள்ளையைக் கேட்க வந்து விட்டான் வருணன். பாசத்தால் கட்டுண்ட ஹரிச்சந்திரன், ரோஹிதனை இழக்க விரும்பவில்லை. சாக்கு போக்குச் சொல்லிக் காலம் தள்ளினான். வருணனின் பிடியிலிருந்து தப்புவதற்கு ரோஹிதனைக் காட்டுக்கு அனுப்பி விட்டான். அங்கு அஜீகர்தன் என்ற முனிவரை ரோஹிதன் சந்தித்தான். அவருக்கு மூன்று புதல்வர்கள் இருப்பதை அறிந்து, தனக்குப் பதிலாக வருணனுக்குக் கொடுக்க முனிவரின் ஒரு பையனை வேண்டினான். முதல் புதல்வனைத் தர முடியாது என்று சொல்லி விட்டார் முனிவர். அவர் மனைவியை அணுகினான், ரோஹிதன். கடைசிப் புதல்வனைத் தர இயலாது என்று விட்டாள் அவள். இடையில் இருக்கும் புதல்வன் தாய் தந்தையர்களது மனம் தெரிந்து ரோஹிதனோடு செல்ல சம்மதித்தான். அவன் பெயர் சுனஃசேபன்.

வருணனைக் குறித்து யாகம் ஆரம்பமாயிற்று. சுனஃசேபன் பலிக்குத் தயாரானான். அங்கு நிலவிய சூழல் அச்சுறுத்துவதாக இருந்தது. வேள்வித்தீ பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. முனிவர்கள் மந்திரங்களை ஓதிக் கொண்டு செயலில் ஈடுபட்டிருந்தார்கள், ஒவ்வொரு சடங்காக முடிக்கப்பட்டு பலிக்கான சடங்கு நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. பயத்தை விட்டு இந்திரன் முதலிய தேவதைகளைத் துதிக்க ஆரம்பித்தான் சுனஃசேபன். தேவர்கள் அவனது நிலைமையைப் புரிந்து கொண்டு, அவனை விடுவித்து, யாகத்தையும் சுபமாக முடித்துக் கொடுத்தார்கள் என்ற தகவலை ஐதரேய ப்ராம்மணம், ரிக்வேதம்— முதலிய நூல்கள் வெளியிடுகின்றன. ஆபத்து வரும் வேளையில் அஞ்சாமல் செயல்படுவது சாலச் சிறந்தது என்று தெரிய வருகிறது.

நன்றி: ஸ்வாமி எழுதிய உபநிடதக் கதைகள் (வானதி பதிப்பகம், சென்னை — 17)

மற்றும்


பேராசிரியர் கே. வி. சேஷாத்ரிநாதன், சென்னை சமஸ்கிருதக் கல்லூரி.

பானி மிக்ஸ்

உடனடியாகத் தயாரிக்கக்கூடிய பாரிட்ஜ்.

தானியங்கள், பழங்கள், முந்திரி கலந்த ஆகாரம்.

பானி மிக்ஸ் கோதுமை, சோளம், அரிசி, மாம்பழம், ஆப்பிள், பேரிச்சை, திராட்சை மற்றும் முந்திரி போன்ற வையிலான ஊட்டமிகு, எளிதில் ஜீரணிக்கக்கூடிய பாரிட்ஜ் ஆகாரம். குடும்பத்தினருக்கு காலைச் சிற்றுண்டிக்கும் மாலையில் பள்ளி அல்லது அலுவலக வேலைகளுக்குப் பின் அளிக்கவும் உகந்தது. முதியோருக்கும் நோயிலிருந்து குணம் அடைவோர்க்கும் ஏற்ற உணவு.




நிமிடங்களில் தயார்

பானி மிக்ஸை விரைவாகவும், எளிதாகவும் தயாரிக்கலாம்.




கிண்ணத்தில் தேவையான பானி மிக்ஸை எடுக்கவும்.



அதோடு முன்னமே கொதித்த பாலை போதுமான அளவு மெதுவாகச் சேர்க்கவும்.



மிருதுவான கிரீம் போன்ற பாரிட்ஜ் ஆகாரம் பெற மெதுவாகக் கலக்கவும்.



சுவையான ஒவ்வொரு ஸ்பூன் பாரிட்ஜ் உணவையும் உங்கள் குடும்பத்தினர் சுவைத்து மகிழ்வார்கள்.

பானி மிக்ஸ்

இந்தியாவிலேயே முதல் முறையாக!



உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ.

GL/2/88-R-TAM

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka